சிவராத்திரி நாடகம்

T.D.R.e 3354
R.R.No 102 4.1876

சோமநாத கவிராஜர்

DIGITIZED

O,892MVK1,5
M76
116758

ஆனைமலை.

மகாகனம்பொருந்திய ஸ்ரீ சிதம்பரக்கவிராஜர்மாணாக்கராகிய

**வேலாயுதக்கவிராஜரியற்றியது.**

ஊத்துக்குழியென்கிற ஊற்றுமாநகராளும் ஜமீன்தார்

ம - ா - ா - ஸ்ரீ

**சிவசுப்பிரமண்ணியதிருமூர்த்திசுவாமி**

காலிங்கராய துரையவர்கள் பரோபகாரஞ்செய்யக்

கேட்டுக்கொண்டபடி

ஐயம்பேட்டை

**சிவகுருநாத முதலியாரவர்களால்**

பார்வையிடப்பட்டு

சென்னைமாநகரம்

வியவஹாரதரங்கணி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

தாது ௵ கார்த்திகை௴

௧௮௭௬.

…istered Copy Right.

…rice Annas 8.

116758
892MVK1, S
M76

எண்ணருஞ்சீர்நறும்போதுபயந்ததம்மா ... ...
வெழிற்புவியீர்கண்ணுறுமின்புனைமின்மாதோ ... ...

சென்னைப்பட்டணம்.

## ம-ா-ா-ஸ்ரீ, ஐ. நெ. சிவகுருநாதமுதலியாரியற்றிய

அதிகாசிரியவிருத்தம்.

சீராகண்டபரிபூரணச்சச்சிதானந்தநித்தியசின்மயத் ...
திவ்வியபிரணவாகார சோமேசரத்தானுறு சிவஞானபரர்விற்பனர் ...
சேலுறுமன்னவர்க ளந்தணர்களுறைதருமானைமலைநகரினிற் ...
றேவமுதிமிகுசைவ குலகுப்பயாண்டிமாற் செம்மலான்பொற்கடுக்கைத் ...
தாராருபரசிவத் தியானபுண்ணியமே தழைத்திருவமைத்தன்னவித் ...
தாரணியில்வேலாயுதக் கவிஞனெனவந்த தனுசனைப்புகலுறுமென் ...
தற்பரானந்ததே ஜோமயக்கடவுளின் றுவிணைக்கண்புணர்ந்து
தந்தியுரியோர்த்தசிவ சங்கரன்நிலைமைதனையோர்நாடகமி[illegible]
நேராருநீள்பலர வாழைசெந்நீறக்கமுகு நினைத்திறுபஞ்ச[illegible]
நிறைந்தினியவளமோங்கு நிமலயாருற்றநகர் நெடிதா[illegible]
நிபுணனுஞ்சிவகப்பிர மணியதிருமூர்த்திசா மித்[illegible]
கேருமானிடருணர் தவ்விரதபியல்புட னின்[illegible]
வாருமெண்டோளனடிமனதினிங்காம லிக்வ[illegible]
இருவினையகன்றிறைக் கருணைமேலாகிநின்[illegible]
எம்மானுருப்பெறுஞ் சாயுச்சியபதவியி லிருந்[illegible]
எழுதாவெழுத்திற் பதிந்தருட்செல்வரு[illegible]



சிவமயம்.

# வேலாயுதக்கவிராயர் சரித்திரம்.

ஸ்வஸ்தஸ்ரீ

விஜயாற்புத கலியுகசகாப்தம் - ௪௯௩௦ - இதுக்குமேற்செல்லாநின்ற ஜெய (வரு) மார்கழிமீ சகலவளங்களுநிறைந்த ஆனைமலைநகரத்தில் சைவவேளாளரில் சிறந்த குப்பயாண்டிபிள்ளையவர்களுடைய தபோபலமே ஓர் உருவாகி அவரது பத்தினி இராமாயியம்மாள் கருப்பத்தினின்றவதரித்துச் சுருதியமைப்படி ஐந்தாம்வயதில் கல்விப்பயிற்சிபெற்றும், அ - வயதில் தமது பிதா பரகதியடைய பின்பு மாதாவினுடைய அபேக்ஷையினால் சாமிநாதப்புலவரிடம் அக்கல்வியை - ௰௫ - வருடம் வரை ஓதியுணர்ந்து அகன்பின் [illegible] [illegible] வித்யாசாலை அவர்புத்திரருக்கும் [illegible] புதல்வன் சுப்பண்ணனுக்குமாக, கல்வியோதிவைத்தும் - ௨௫ - ம் வயதில் [illegible], இவரதுமாமியில் விவாகமுடித்துந் தான்வசிக்கும் நகருக்குவந்து ௩௫ - ம் வயதில் மாதாபரகதியடைய, சற்றேறக்குறைய - ௨௦ - வருடத்துள் கர்த்தர் அதிகாரத்தில்பாண்டியதேசமாகியமதுரையிலிருந்து முதாதைகளாகிய குப்பயாண்டிபிள்ளை இவ்விடம்வந்து [illegible] ரால் மேல்திசைக்கும் கிழக்திசைக்கும் ஓர் அதிகாரம்பெற்று அப் [illegible] வழுது கொல்லங்கோட்டு வழியில் தர்மத்திற்காக தமது பெயரால் குப்பயாண்டிபிள்ளை சத்திரமென்றொன்றுகட்டி அதன் குடபாலே ஓர் கிணறும் வெட்டிவைத்தார். அது இப்பொழுதும் வழங்கிவருகிறது. இக்கவிராயருக்கு மேகநோய் இருப்பிடத்தில் பிராணபயமுண்டாக ஓர்வியாதிவந்தது. அதனால் சிவனாதகிரிப்புராணத்தைக் கட்டமாய்ப் பாடினால்வியாதிநீங்குமென்று விருப்புற்று பாடிமுடிக்க அதனால் வினையும் பரிகாரமாயிற்று. இவரது சகோதரன் சரவணப்பெருமாளென்பவரும் இரகுபுத்திரர் சண்முகசுந்தரமென்னுங்குமாரனும் [illegible] அச்சிட்டு அரங்கேற்றமில்லாததைப்பற்றி ஆனைமலைநகர் [illegible] மேல [illegible] பாடினார். அத்தோத்திரமாவது:—

## விருத்தம்.

மதுரைதனில்வந்திருந்து களைத்திட்டீரோ ... ... ... *
மார்க்கண்டன்றனைக்காத்துக் களைத்திட்டீரோ ... ... *
சதுரகிரிதனிலேயிக் களைத்திட்டீரோ ... ... ... ... *
சண்முகனையீன்றதனால் களைத்திட்டீரோ ... ... ... *
விதுரனுக்குவிற்கொடுத்துக் களைத்திட்டீரோ ... ... *
வெள்ளிமலை யக்கினின்று களைத்திட்டீரோ ... ... *
எதிரொரு பெருநாகக் கோபுரத்து ... ... ... ... *
விர நீரேவிஸ்வேசா வென்செய்வேனே ... ... ... *

தரு - இராகம் - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

ஏனின்னந்தாமதமையா
ஏனின்னந்தாமதமையா அடியேன்மீது

அனுபல்லவி.

வானவர்தொழுங்காசி மாநகர்தன்னைவிட்டு
ஆனைமலைக்கோபுரத் தமர்ந்திரோயென்றுதொட்டு (ஏனின்னம்)

சரணங்கள்.

பிட்டுக்குமண்சுமந்து பெருமைமறைந்ததோ
பேயுடனாடியே பெலனுங்குறைந்ததோ
சட்டியாம்வரையோட்டிய சாதமுமுறைந்ததோ
சாப்பிட்சாப்பிட்டுத்தான் வயிர்நிறைந்ததோ
சஞ்சலமினியாது - நெஞ்சமிரங்காதேது
மஞ்சனுடனேன்வாது - பஞ்சலட்சணமீது (ஏனின்னம்)

சந்திரனைத்தரித்துத்தலையும் பாரமாச்சோ
சடையிற்கங்கையிருக்க சலதோஷமிகவாச்சோ
மந்தரமேல்நின்று மனமுங்கருங்கல்லாச்சோ
மான்மழுவேந்துங்கை வாடிச்சலித்துப்போச்சோ
மதிமயங்குவதென்ன - நதிவளமேதன்னைத்
ததியிதுதானென்னக் - கதிதருவாய்முன்னம் (ஏனின்னம்)

பாம்புமுறுத்திறுக்கப் பயங்கொண்டுகளைத்திரோ
பாதத்தைமுயலகன் பற்றவேயிளைத்திரோ
சாம்பல்பூசவிஸ்வேசன் முனென்றுமுளைத்திரோ
சத்திவிசாலாட்சிமுன் நான்பேசவிளைத்திரோ
சாவகாசம்விட்டேனும் - கூவவென்முன்நீரும்
கோவில்மேவிவாரும் - மேவிநாடகம்பாரும் (ஏனின்னம்)

வசனம்.

அன்றிரவில் இவ்விதம்துதிக்கவே இவரது சித்தத்தில் சகலவளம்பொருந்திய ஊற்றுமாநகராளும் ம - ா - ா - ஸ்ரீ பட்டாபிஷேகராகிய சிவசுப்பிரமண்ணியதிருமூர்த்திசுவாமி காலிங்கராயதுரைசமூகம்தானே நிறைவுறுமெனத்தோன்றியது.

நிலம்நீர் நெல் பொன்மணிவளங்களும் நிறைந்த சாரி பாளையப்பட்டு ஊற்றுமாநகராளும் முத்துகிருஷ்ணசுவாமி காலிங்கராயதுரைஅவர்கள் குமாரராகிய மகாராஜஸ்ரீ வளம்பொருந்திய சிவசுப்பிரமண்ணியதிருமூர்த்திசுவாமி காலிங்கராயதுரையவர்கள் சமூகத்திற்கு சிவராத்திரிநாடகம் ஆசிபெற்பொருட்டு எழுதியசீட்டுக்கவி:

அஃதாவது

## விருத்தம்.

திருமருவிவிளையாடுமூற்றுநகர் தன்னிலே ... ... *
செங்கோல்நடாத்தி யாளும் ... ... *
சிவசுப்பிரமண்ணியதிரு மூர்த்திசாமித்துரைச ... ... *
சிங்கேறுசெய சமூகமே ... ... *
சிறுமலர்கண்மிருமானே மலையின்வேலாயுதம் ... ... *
பக்தெச்சரிக்கை யெனவே ... ... *
நாடிவிண்ணப்பமுறை முறையாகவேசெய்து ... ... *
நவிலும்வந்தன மஃதுகேள் ... ... *
பெருமைபெறு சிவராத்திரிமகிமைதனைநாடகம் ... ... *
பிரியமாய்ப் பார்மீதிலே ... ... *
பெருகவேயச்சிலதை யிட்டுலகமேபாவிப் ... ... *
பேரின்ப முண்டாகவே ... ... *
அருமையுடனோராயிரம்பொன் வரைக்குதவி ... ... *
யருள்செய்ய வேணுமையா ... ... *
ஆசையாலுமது தெரிசனமெனதுபாக்கியம் ... ... *
அன்புடன் றரவேண்டுமே ... ... *

சிறந்தசெய்யுளியற் பாயிரந்தனைச்சொல்லிச்
சிதம்பரநாவலன்குறித்தான் - அதை
அயிந்துஉண்மூதாதை குமாரசுவாமிமன்ன
னசையாமல்மேவியவதரித்தான் - புவி
யுறைந்திடுஞ்சிவ விசிநாடகமுற்றிலும்
இருந்திடவிதிதந்தா யியம்பினோன்சுற்றிலும் (கற்றவர்க்கு

## ஷை துரையவர்கள்மீதில்
## மை-க- நஞ்சப்பிள்ளையவர்களியற்றிய
## சிறப்புப்பாயிரம்.

சீர்தழைத்திடவே சேர்கொங்குமண்டலப்
பார்தனிலானை மலைநகாபரனுஞ்
சோமேசர்திருவடி துதித்தெப்பொழுதும்
பாமாலைசெய்யும் பாண்டிமண்டலத்தான்
செந்தமிழ்வேலாயுதக் கவிவாணன்
சொந்தமாய்ச் சிவவிசிநாடகஞ்சொன்னதை
மகமேருவென்னும் மால்வரைநிகராய்
ஜகமேபுகழுந் தந்திமாமலையுளான்
வானதியொப்பாம் மணிபலகொழிக்கு
மானதோர்திரையுறு மாழிமாநதியுளான்
கார்வளஞ்சிறந்துகனகஞ் சொரிந்திடுந்
தார்கனங்கொண்ட தாலமும்வாழையு
நீளப்பிலாமா நெருங்கியதென்னையுந்
தாழையும்புன்னையுந் தழைத்தபூங்கொத்துங்
கொய்யாவிலுப்பை கோங்குசண்பகமும்
வையகமதிக்க வளருஞ்சாதியும்
விரிந்தவாதாமியும் வேணுதருக்களுஞ்
செறிந்திடுங்கம்பகத் திருவனந்தடாகமும்
நீடுநீர்நிலம் செல்வளம்பொருந்தும்
நாடுபூந்துறைகாவடிக்க நாடுடையான்
மாடமாளிகையு மணிபக்களாவுங்
கூடகோபுரமுங் குளிர்சந்திரசாலையும்

வசந்தமண்டபமும் வாகனச்சாலையு
முசந்தகச்சேரி யுன்னிதமுகாத்தினமுஞ்
சமுகவிலாசச் சற்சனர்வாசமுஞ்
சுமுகவித்துவான்க டேக்குமாசாரமுஞ்
செந்நெற்களஞ்சியந் திகழுசித்திரமேடையு
மன்னசாலையு மரசர்மண்டபமும்
வர்ணச்சிவிகையு மணியாபரணமுஞ்
சொர்ணப்பொக்கிஷந் துலங்கரண்மனையு
முற்றுமாநகருரியபலாதி
யேற்றும்வெள்ளோடு மிக்கநகருளான்
சோமசுந்தரருந் துதிக்குமீனாட்சியுங்
காமனையெரித்த வமணேசுரகர்த்தருஞ்
சித்திவிநாயக தேவரும்பெரிய
சந்திவிநாயகர் தழைதரசடியில்வாழ்
புத்திவிநாயகர் பூவுலகத்தனைப்
பெற்றவிநாயக பிரபலதேவரு
மெத்தித்தண்ணீர்த் தடமிலங்கரசம்பல
முத்திவிநாயக மூர்த்தியாமுதல்வருங்
கரியைமுன்காத்துக் கராவைச்செற்ற
வரதராஜப்பெருமாளெனு மாதவர்
சோமாலிங்க வனமதின்வாழும்
மாமாதகத்தூர் வநிதையுமுத்து
மாரியம்மையு மகிழ்வீரமாட்சியுஞ்
சேரும்பந்தப்பட்டி யம்மையுந்திகழச்
சங்கமேசுரர் வேதாம்பிகையம்மையும்
பொங்குசர்வேசர் புனிதபாடகவல்லி
இப்பெருந் தெய்வத்தின்னருள்பெறுவோன்
செப்புங்குலவேப் பாமாலைதிகழ்வோன்
தடவரையனைத்தும் பொடிபடமிதித்துக்
கடலெனக்கனைத்து நடமிடுபெரியான்
விம்முசத்துருக்கள் வென்னிட்டோட்டி
நன்மைமிக்கிரக்கோ நகர்நிலைநாட்டிச்
செம்மையாமாரந் திகழ்ந்தநஞ்சோ
ரும்மதம்பொழியு மூரிமாலயானையான்

வெற்றியாமுரசும் வீரமுரசுடன்
நூற்றியதியாகமுரசு மூன்றுள்ளான்
புவிதனில்வாழும் புலவர்கள்
கவிசெய்துவாவெனக் கரங்குவித்திடுவோன்
சொற்கவிச்சந்திரன் நலந்தருசோலையான்
மிக்கநன்னீதியாய் விளங்குசெங்கோலான்
மணமுத்திராமசாமி மன்மதனைத்
தன்னைவென்றுக்கொண்டோன் அதிசமுத்திரவா
ரிராஜனகுழந்தைச்சாமி வாமேணந்திரன்
விரசன்பொன்மலையாண்டி மால்புத்திரன்
போஜனிராமசாமி நற்புத்திரன்
தேசனசோமநாதச் சுந்தரகிருபன்
சோதரன்சுப்பராய சுசீலன்
வேதசம்பன்னன் வித்துவசிரோமணி
சொந்தமைத்துனசெனுந் சுயிர்தமுடையோன்
விந்தைசேர்சுப்பராய விதரணன்
மயிலாடிநகரத்தார் மகராஜன்
நயவானராமசாமி காத்தகன்
சுந்தரச்சமுகம்துலங்க விருக்கும்
பந்துவில்நஞ்சப்ப பாண்டியன்பலருளான்
காரியக்காரசுறி ராசபிள்ளையாரும்
வீரியஞ்சேரப்ப பிள்ளையுமிருந்து
கணக்குநரசைய்யர் சனராமசாமியு
மணக்குமணியஞ்செய் காமாட்சிநாதமால்
சின்னணைநிரன் திகழ்முத்துச்சாமி
சொன்னசொற்றவராக் சுசீலன்கருப்பணன்
சக்கணாயப்ப தயாளகருணிகன்
உக்கிராணமுத்துச்சாமி யுண்மையுளன்
கந்தப்பவேளுயகருணைசேர் சமுகசு
சொந்தவுபாத்தியன் சொல்சுப்பமுத்து
சின்னமகேசவெழில் சேவகரும்
மன்னராசாநூமியன் யாவரெவில்
கவர்மென்டுமெச்சும் காணமுபருனா
புவிமுத்துச்சிருஷ்ண சுவாமிப்புபன்

நவகபபுத்திரனு கவதரித்த
சிவசுப்பிரமண்ணிய திருமூர்த்திசுவாமி
காலிங்கராயதன்னன் கருணைசேர்
மேவிக்கிதம்பெறு மேன்மையோன்மாதர்
மடலெழுதுமாரன் மகுடாபிடேகன்
திட்டமுளதிரன் செல்வக்குபேரன்
நவமணிமார்பன் நரேந்திரபூபன்
கவனயோகியர் மகிழ்கர்த்தனுமானோன்
பூமியாள்மன்னன் பூச்சக்கிரக்குடையோன்
நேமித்தவர்கட்கு நிதிதருகொடையோன்
இராஜாதிராஜ னன்மனமகிழ்ந்து
தேசமெல்லாம்புகழ் சிறந்துகொண்டாடச்
சென்னைபுரியச்சிற் பதிக்கச்செய்தனன்
அன்னவன்பிறை யாயிரங்கண்டு
வாழவேதெய்வத்தின் வரம்பெற்று
வாழியவாக வாழ்ந்திடுவாரே.

---

## சாத்துக்கவிகள்.

ஆனைமலைஸ்தலத்
தமிழ்ப்புலமை நடாத்தியும்
இந்நாடகமியற்றிய
வேலாயுதக்கவிராஜருக்கு ஆசானுமியிருக்கும்

### சிதம்பரக்கவிராஜரியற்றியது.

வயலும்வளங்களுஞ் சிறந்தபாண்டிவேலாயுதப்பாவாணன்வாக்கா *
லியலுமிசைகளும்பொருந்தச்சிவராத்திரிநாடகமாயிசைத்தான்யாரும்
முயலும்வழிதேடியென மூடாமெய்வாய்பாமுறைகொண்டாகின்[னே
செயலுமினிதெனப்புகழுந் தேசமெல்லாஞ்சென்றுநின்றுதிகழுந்தா

## பழனிஸ்தலம்மாம்பழக் கவிச்சிங்க நாவலரியற்றியது.

திடகுருதிபுகழ்சிவராத்திரிமகிமைபெருமனுதினர்தேர்ந்துய்வான் *
கடலுழுதாடையுடை மங்களசுபநாடகமொன் றுகனிவிற்சொன்றுன் *
குடவளையின்மணிவிபுகர்குலநாட்டைநகச்சயல்கள் குறித்துமோதும்
தடவளமைமிகழானை மலைவளர்வேலாயுதமுத்தமிழ்வலோனே *

## வித்தியாசாலை இனிஸ்பெக்டர், ம - ள - ள - ஸ்ரீ
## தி - சின்னப்பிள்ளையவர்க ளியற்றியது.

காகுற்றபொழில்புடைசூழ் கரிமலையபரிவேலாயுதக்கவிஞருக் *
ஆறுற்றசடைப்பரமாருளிலுய்த்துமெய்படியாடைதல்செய்வான் *
சீறுற்றசிவசிநாடகக்கவியாய் வகுத்தசெழுந்தகைமைநோக்கிப் *
பேருற்றமுனிவருமலையகத்திற் குடிவிளங்கபெற்றியன்றே *

## உடுமலைப்பேட்டை முன்சிப்கோர்ட்டு வகீல்
## ம - ள - ள ஸ்ரீ வீ - முனியப்பபிள்ளையவர்க ளியற்றியது.

தேன்புக்கறுமணஞ்சூழ் மடலவிழுஞ்செய்யமலர்த்துறையுஞ்செய்ய *
மான்புக்கமிகுவளஞ்சேர் நாடுமலைநகராளிவருமிவேந்தன் ... *
ஞான்புக்கபுகழ்வேலாயுதக்கவிஞருனை சங்கரனார்சிவனென்றேத்தும் *
நோன்புக்கோர்நாடகஞ்செய்தான மகிமையாவருமெழுவலத்தானே *

## பழனி - இரத்நகிரி நாவலரியற்றியது.

திங்களுங்கடுக்கைவேணிச் சிவராத்திரிச்சரித்திரத்தை ... *
மங்களாருகித மதுரநாடகமாய்ப்பாடித் ... ... *
தங்குநாவலர்களுள்ளந் தான்மகிழ்ந்திடவேசெய்தான் ... *
றுங்கவேலாயுதச்சுந்தரத்தமிழ்ப்புலவன்றானே ... ... *

## உ - திருமூர்த்திக் கவிராஜ ஞானபண்டிதரியற்றியது.

உலகுபுகழ்காத்தசிவ னுறைத்தசிவராத்திரியுயர்சரித்திர [னோர்
மிகுதமிழ்நாடக மாயிசைத்தல்செய்தாரைம்பையற்குமெழிலேந்தன்
திலகமொளவயக்குக்கடைச்சியர்பிரிப்பவொதுங்குமணிச்சேறணைமள்ள
விலகுமண்டிர்த்தகரிவன வேலாயுதக்கவிஞனென்னுமவேந்தே.



## பொள்ளாச்சி - குப்புசாமிநாயரவர்க ளியற்றியது.

சுந்தரஞ்சேர்மாமதுரைச் சைவவேளாளகுலச்சமுத்திரம் ... *
மந்தரமேனர்புயன்குப்பயாண்டி மாமவைமதனுல்வந்தபாலன் ... *
இந்திரன்மாலிசைப்பழுற சிவராத்திரிநாடகமிசைத்தான் *
நந்திமலைமேவும்வேலாயுத நாவலனென்னுக்கமிழ்வலோனே *

## வேட்டைக்காரன்புதூர் - வித்வான்
## செல்லக்குமாரசெட்டியாரவர்க ளியற்றியது.

பாசபந்தமகற்றிமுத்திதரு சிவராத்திரிச்சரித்திரம்பண்பாயார்க்கும் *
ஆசையுறக்கதைவெளியிற் பெரியவெனநாடகமாயமைத்தானென்றும் *
விசுபுகழ்சங்கைக்குலதிலகமெழில் நாவலர்கள்மெச்சுமெண்ணேழ் *
தேசமெங்கும்புகழானைமலைவளர் வேலாயுதச்செந்தமிழ்வலோனே *

## ஜாரிபாளையப்பட்டு - ஊத்துமாநகரிலக்கணவித்வான்
## அகத்தூர் - உபாத்தியாயரியற்றியது.

விரையாளைக்காத்தவிமானமோறு மயன்காணுநிமலனாரும் ... *
நரையானையளித்தவரும் நண்ணரியபுண்ணியமெய்ஞ்ஞானமோங்கக் *
கரையானையுதருகன் கட்செவிப்பூணணிகடவுணிசிவின்காதை *
வரையானைநகர் வேலாயுதக்கவிஞன்நாடகமாயுரைத்திருனே ... *

## ஷெயூர் குப்பமுத்து உபாத்தியாயரியற்றியது

திருந்தவுளமைக்கின்புறவன்றுரைத்த சிவராத்திரியின்மிகழ்சரித்திரம் *
பொருந்தவுரைத்திடப்புவியிற்புலவரிலையென்குகனே நீபுகல்வாயென்ன *
வருந்தவரும் புகழ்ந்திடவேலாயுதநாவலனுகவுவந்தளித்து ... ... *
திருந்துமாக்க நாமகளுநாண்முறமெவ்வயனுமிருந்திட்டானே ... *

## கொ - முத்துவீரப்ப பிள்ளையியற்றியது.

மண்டலவிதிருவகை யிலதுமொருதிலகமெனவளங்கண்மிக்க ... *
தண்டலைசூழ்கழனியிதுங் கரிமலையின்வரசனன்பார்தமக்குநேசன் *
விண்டலைவாழமுதமெனச்சிவனிசி நாடகமொன் றையியந்துறைத்தான்
கொண்டலைக்காத்தருள்குலவேலாயுதநாவலனென்னுங்குரிசிலோனே

# பொதுப்பாயிரம்.

காப்பு.

## கணபதிதுதி வெண்பா

சீர்வளர்ந்துமேவுஞ் சிவராத்திரிக்கதையைப்
பார்புகழநாடகமாய்ப் பாடுதற்கு நேராகச்
சிந்தைதனிலின்று செய்புதவியென்றுளுங்
கந்தனுக்குமுன்னோனே காப்பு.

## சோமலிங்கர்துதி கலித்துறை.

வேழமலைநகர் மேற்றிசைமேவிவிளங்கிவரு ... ... *
மாழிநதியணைமேல் பாலருள்கொண்டமர்ந்தவனே ... *
ஏழையியற்றுஞ் சிவசிநாடகமின்றுமென்றும் ... *
வாழியவைச்செய் சோமலிங்கேசுரமாதவனே ... *

## விஸ்வநாதர்துதி விருத்தம்.

பூசுரர்முதலாய்ப்போற்றும் புனிதனேமாசொன்றில்லா ...
வீசனேகைலைவாசா விரைவனேவேதநாதா ... ...
ஆசறுமொழிமேலாக வருணாவின்மலையின்வந்த ... ...
காசிவாழ்விஸ்வநாதா கழலிணைசரணந்தானே ... ...

## நடேசர்துதி விருத்தம்.

ஆசமங்களிநெறி யறங்கவோங்க... ... ... ... *
வடியிணையைமுனிவரர் கண்டார்க்குதாங்கப்... ... *
பாகுமொழிப்புலவர்நயக் கவிகள்பாடப் ... ... *
பாரிடமுங்கொண்டாடப் பதப்பெயர்க்க ... ... *
வேதிவந்துமாலயனு மிறைஞ்சிப்போற்ற ... ... *
வியப்பரியவருணிலையை யெடுத்துக்காட்ட... ... *
நாகமலைமேவுசபை நாதவேதா ... ... *
நாடகமன்பாடவர நல்குவாயே ... ... *

## ஈசுவரிதுதி விருத்தம்.

விமலிசங்காரிசூரி வித்தகிதுர்க்கைமாரி ... ...
சமரிட்டிநிவியோங்காரி தற்பரையகோரியிரி ... ...
கமலிநாரணிரீங்காரி கௌரியேயாளிமூர்த்தி ... ...
குமரியேமதுரவாக்குக் கொடுத்தருள்செய்குவாயே... ...



## நாரசிங்கர்துதி விருத்தம்.

நரயுணாதலைமேற்கொண்டு சாந்தவிடணனைக்காத்தாய் ... *
நாயகற்கிருஷ்ணனாகித் துகிலதுவெளப்பதைக்களித்தாய் ... *
நேயசற்பிரகலாதனரியெனநினைக்கக்காத்தாய் ... ... *
நாயனேகடுவலூர்வாழ் நரசிங்கநம்பினேனே ... ... *

## சுப்பிரமண்ணியர்துதி விருத்தம்.

மயிலதையூர்தியாக வைத்தவாவள்ளுஞ்சேர்தென்னங் ... *
கைலைவாழ்குறுமுனிக்குக் கலைகளையுபதேசித்தாய் ... *
அயிலையோர்காத்திலேந்தி யமரர்களிடுக்கண்தீர்த்த ... *
சைலனேவள்ளிபாகா சரவணபவனேபோற்றி ... *

## சரஸ்வதிதுதி விருத்தம்.

முண்டகத்திலேமூன்றது மறைநான்கெனும்பட்டாக்கு ... *
முதிர்வேதாந்தத் ... ... *
தண்டமிழ்செய்யகத்தியசா ரவதனிலேகொழுந்தாய்த் ... *
தளிர்பூங்கொத்தாய் ... ... *
அண்டமுதலாய்ப்படைத்தஅ யனுவின்மலராயின்றவளே *
யுன்றனை ... ... *
தெண்டனிட்டேன் சிவராத்திரிநாடகத்தைப்பாடுதற்குத் *
திடஞ் செய்வாயே ... ... *

## துர்க்கைதுதி விருத்தம்.

தெற்றிலூர்வடக்கிலூரான் திகழுதெய்வகுளத்துக்காலி ... *
துற்கைமாசாணருத்திரி சோதியேபெரியநாச்சி ... ... *
தற்பரைமுருகருக்காட்டித் தாய்பாருஞ்சிரமேற்கொண்டு ... *
கற்பமட்டிறைத்தவென்சொற் கவிகளுக்கருள்செய்வீரே... *

## மதுரைவீரன்துதி விருத்தம்.

விதிவசத்தாலேவந்து வேதனைசெய்யுநோயும் ... ... *
எதிரிவஞ்சனையும்பில்லி ஏவலருளியமுறைவைப்புச... ... *
சதிசெய்சலவியங்களாலுந் தண்டனைசேரிடாமல் ... ... *
மதுரைவீரயாநாளும் வந்தென்னைக்காத்திடாயே... ... *

## அவையடக்கம் விருத்தம்.

எட்டிரண்டுஞ்சொற்பொருளுமறிந்திடாமல் ... ... *
எடுத்திசைக்குஞ் சிவராத்திரிநாடகத்தை ... ... *
மட்டறவேபிழைப்படுத்து போலவென்னில் ... ... *
வாரிதியையுண்பனென்று மார்ச்சாலம்போற் ... ...

விட்டவிலக்கிய விலக்கணார்த்த முற்றுந் ... ... ... *
தெரியாதறியேன்சொற் றிகழ்த்திடாம ... ... *
விட்டமுரைக்கும்புலவர் கொள்ளுவரென் ... ... ... *
றெழில்பெறவே - புவிமீதினியற்றினேனே ... ... *

சுபசகத்திரான்கு நவசதத்தசமேழுநூக்ஞமூருண்டுகலியிற்
செயமாசிமதிபுனா லார்கேதிறமைசனிதிதிசதுர்த்தசிசதையநாள்
நயலக்கினங்கன்னி யதினத்திற்செய்தசிவராத்திரிநாடகத்தைத்
சுயஸ்ரீவில்வேசர்முன் வேலாயுதப்பாவலன்சபியரங்கேற்றினனரே.

# பாயிரம்.

## விருத்தம்.

திருத்தமாயாதிகாந்தஞ் செப்பியசதைசாரத்தின் ... ... *
சரித்திரம்வழுவிடாமற் றண்டமிழ்ப்புலவர்செல்லாங் ... *
கருத்தோடன்புதுகவிக்குட் காட்டிஞர்யானுமத்தை ... *
விரித்தோர்நாடகமாய்ப்பாடி விளங்கமங்களஞ்சொல்வேனே *

## மங்களம்.

தரு - இராகம் - கேதாரகௌளம் - அடதாளம்.

பல்லவி.

மங்களம்மங்களம் நித்தியசுப மங்களம்மங்களம்

அநுபல்லவி.

மங்களமாம்பாளை மல்லிகேஸ்வநாதற்கும்
பங்கினில்வளர்பார் பணாவிசாலாக்ஷிக்கும் (மங்க)

சரணங்கள்.

ஆசிரகுமரற்கும் அலர்மேலாஞ்சிதைக்கும்
ஸ்ரீமலரணிவள்ளி வேலர்தெய்வானைக்கும் (மங்க)
அம்புதசம்புரிந்த வங்குலவேடனுக்கும்
சிறுவரிருவர்க்குந் தேவிகொடிச்சிக்கும் (மங்க)
சிவராத்திரிநாடகந் திருந்தக்கேட்போருக்கும்
புவிமிசைவிரதத்தைப் புரிந்துநிற்போருக்கும் (மங்க)



## விருத்தம்.

கட்டாகவுரைத்தசிவ ராத்திரிநோன்பைக் ... ... *
கருதாமல்வேங்கைதனைச் சருகுவேடன் ... ... *
எட்டாதவில்வமதி லேறித்தூங்கா ... ... *
திலைபறித்துப்பதமடைந்தா னென்றேயெண்ணி ... *
மெட்டாகத்தருவிருத்த மிசையாய்ச்சேர்த்து ... ... *
மேதினியிலேமகிழ்ந்து வாழ்கவென்று ... ... *
தொட்டேநாடகம்பாடிச் சிவபதத்தைத் ... ... *
துதிக்கவேகோட்டியமுஞ் சொல்லுவேனே ... ... *

தோடையம் - இராகம் - நாட்டை - ஆதிதாளம்.

கண்ணிகள்.

வடகைலாயப்பதி வளர்நாதன் - வானவர்தானவர்க் கருள்போதன்
இடமுடன்பேயோடாடியபாதன் - இருசரணத்துணையே ஆ - ஆ
கொடியஅறவைபணியணிதோளன் கொன்றையருகுசூடுங்கதாளன்
அழகுமுடிவிலாசசடையாளன் அடியிணைகள்துணையே ஜெய - ஜெய
இருந்தசிவனைத்தொழுதடிபோற்றி ஈசுவரிகேட்டசொற்கெதிர்சாற்றி
அருந்தவர்மாமிடர்செயல்தேற்றி அருளொளவரன்சொல்வார் ஆ - ஆ
திருத்தமாசிசதுர்த்தசிகூறிச் - சிவராத்திரிவிரதம்மீறி
விறைக்கொருவில்வத்தின்மேலேறிவேடனு முத்திபெற்றான் ஜெய - ஜெய
நாடியிவ்விரதத்தைப்பூண்டோர்கள் நம்பதிவந்தடைந்துகாணுவார்கள்
நீடியுணர்த்தேவிந்தைதமாண்பாக - நேசமாய்நீகேட்க ஆ - ஆ
தேடாமல்வேடன்பணிமீறத் - திருத்தமாகச்சிவபதிசேரப்
பாடினேனுடசமாய்க்கவிகூறப் - பதமதைவேபெற ஜெய - ஜெய
கரிமுகனறுமுகன்கழல்பேணிக் - காருத்தன்கருத்திலன்புபூணப்
பிரமன்விண்ணோர்முனிவரர்காணப் பெருமைநாடகஞ்சொல ஆ - ஆ
விரியுந்தாமரையின்மலர்நீடும் - வேண்டப்புலவர்களுளங்கூடும்
சரிசபாசென்றுசொல்லத்தமிழ்பாடுஞ் சரஸ்வதிதாள் துணையே ஜெய -
[ஜெய

சிவமயம்

நன்றாக - குருவாழ்க - குருவே துணை.

# சிவன்ராத்திரி நாடகம்.

## விருத்தம்.

வரிசிலைகைப்பிடித்து வனந்தனில்வேட்டையாடித் ... ... *
திரியுமங்குலனும்வேடன் சிவன்ராத்திரிவிரதம்பூண்ட ... *
சரிதைநாடகங்கொண்டாடச் சண்முகன்றனக்குமுன்னோன் *
கரிமுகனைத்தொழுதுக் கணபதிவருகின்றாரே ... ... *

தரு - இராகம். - புன்னாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

கணபதிவந்தார் - கயமுகக் - கணபதிவந்தார்

அநுபல்லவி.

கணபதியாய்நல்ல கலைபலவுஞ்சொல்லப்
பணிபவர்தரும்வெல்லப் பலகாரந்தின்னமெல்லக் (கண)

சரணங்கள்.

விண்ணவர்தொழுமீசன் வேதத்தின் மெய்ப்பொருளானநேசன்
மண்ணவர்பணிவாசன் புலவர்கள்வாக்கினிலுபதேசன்
வல்லபைமணவாளன் மாபுகழ்முகவேழன்
அல்லல்வினைகள்மாள வருள்செய்யேழைபங்காளக் (கண)

சத்திவயிற்றிலுதித்தோன் சிவனருட்கன்னமனத்திற்பதித்தோன்
முத்திபதத்துக்குவிதித்தோன் விழியொருமூன்றினுமருள்கதித்தோ[ன்
மூஷிகபுரவான் மூலபராபரன்
பாசாங்குசதரன் பாரின்மகேச்சுரன் (கண)

அங்குலனும்வேடன் சிவன்ராத்திரியடைந்தகதையைப்பாட
பொங்கியதமிழ்நீட நாவினிற்புகட்டுவாயருள்கூட
புத்தகமிலாக்கிட்ட பொருட்கவியனாக்கிட்ட
கர்த்தனென்றுரைத்திட்ட கருத்தினில்விரைக்கிட்ட (கண)

## விருத்தம்.

சடிதியிற்சலத்தின்மூழ்கிச் சகலவேதங்களோதி ... ... *
வடிவுடன்விபூதிபூசி மார்பின்முப்புரிநூன்மேவித் ... ... *
திடமதாய்மடியுங்கட்டிச் சிரத்தினிற்குல்லாப்பூண்டு ... *
குடலையுங்கையிலேந்திக் குருக்களும்வருகின்றாரே ... ... *

தரு - இராகம் - ஆரபி - அடதாளம்.

பல்லவி.

வந்தாரே குருக்கள் - பூசைசெய்ய - வந்தாரே குருக்கள்

அநுபல்லவி.

வந்தாரே காரானை மாமுகனைக்கண்டு
சந்தோஷமாய்த்தோளிற் சகலமலருங்கொண்டு (வந்தா

சரணங்கள்.

தட்டமுடன்மணி திட்டமாய்ப்பட்டனி
சாம்பிராணிகற்பூரந் தாம்பூலமுஞ்சேர (வந்தா
சந்தனம்வெண்ணீறு மந்திராக்ஷதைசோறு
தானெடுத்தாசைக்குத் தந்திமுகன்பூசைக்கு (வந்தா
தேங்காய்பழம்நல்ல மாங்காயவல்வெல்லம்
சித்திக்கணபதிக் கித்திபின்றுதிக்க (வந்தா

## குருக்கள்சொல் சுலோகம்.

சுக்லாம்பரதரம்விஷ்ணும் சசிவர்ணஞ்சதுர்ப்புஜம் ... *
பிரசன்னவதனந்தியாயேத் சர்வவிக்நோபசாந்தயே. ... *

## அர்ச்சனை.

ஓம் - கஜமுகாயநமா; ஓம் - லம்போதராயநமா; ஓம் - விகடாய நமா; ஓம் - விக்கினராஜாயநமா; ஓம் - கணபதேநமா; ஓம் - காமாக்ஷி சுதாயநமா; ஓம் - சாமளவர்ணாயநமா; ஓம் - சங்குசக்கிராயநமா; ஓம் பிரணவசொரூபாயநமா; ஓம் - மூலாதாரபீடாயநமா; ஓம் - முத்தி சொரூபாயநமா; ஓம் - விபூதிநாமித கந்தபுஷ்ப தூபதீப நைவேத் திய தாம்பூலம்சமர்ப்பயாமி.

## விருத்தம்.

விரகடனுடைகள் கட்டிமேற்கச்சைவரிந்துகட்டிக் ... ... *
திறமுடன்பல்லைக்காட்டிச் செங்கையிற்பிரம்பைநீட்டி ... *
ஆனதாஅருளையேற்றி யனுட்டானம்பலவும்போற்றிக் ... *
குறளைகோரணிகள்பேசிக் கோமாளிவருகின்றானே ... *



தரு - இராகம் - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

வந்தானே கோமாளி வந்தானையா நாங்கலை
வாசற்கோமாளியும் வந்தானையா

அநுபல்லவி.

சுந்தரமாய்க்கோண முடிசென்னியிற்சூட்டி
துலங்கநறுமலர்க டொங்கவேபூட்டி
யந்தமிருந்தநுதற் சிந்தூரந்தீட்டி
யற்புதச்செவ்வாயின் வெண்பல்லைக்காட்டி (வந்தா)

சரணங்கள்.

விழியிரண்டுமுருட்டி மீசைமுறுக்கிவிட்டு
விளங்கப்பதக்கமார்பின் மின்னவேயிட்டுத்
தளதளதளவெனச் சருகங்கிகச்சைகட்டுத்
தனதிருகால்களிற் சல்லடங்தொட்டு (வந்தா)
விகடமொழிகளெல்லாம் விஸ்தாரமாகப்பேசி
விரும்பவேசிவனுக்கு வேலைசெய்யுந்துபாசி
திசைகளுமடியச் செப்புவானைகைவீசி
திவ்யபரிமளங்கள் செழிக்கத்தேகத்திற்பூசி (வந்தா)
பாதத்திலேசதங்கை பாடப்பதம்படித்து
பரதகாட்டியமெல்லாம் பார்க்கப்பூவினடித்து
மாதரிங்கிதங்கொள்ள வசனம்பலமுடித்து
மாதவருமதிய மாந்தோளுங்கைப்பிடித்து (வந்தா)

கோமாளிசொல் வசனம்.

அகோவாருங்கள்சபையோர்களே எறும்புகடை யானைமுதல் எண்பத்து நான்குநூறாயிரம்சீவனுக்கும் படியளக்கும்சிவன் கொலுவிற்குவருகிறார் அத ன்முன் கட்டியக்காரன்வருகிறான் நீங்கள்பேசாதிருங்கள்.

## விருத்தம்.

அஷ்டதிக்கிலுள்ள வெறும்பானையாதி ... ... *
யனைத்துபடிக்கருள்புரியு மாநூர்வாசல் ... ... *
திட்டமுடன்காத்துநின்று ஜெயமேற்கொள்ளத் ... ... *
திருவடியின்மலர்சாற்றித் தினமும்போற்றி ... ... *
நட்டணையாய்த்தலைப்பாகு சிரத்திற்சூடி ... ... *
நடனநாட்டியநகலி நன்றாய்ச்செய்து ... ... *
கட்டியக்காரன்சமுதா டெடுத்துக்கொண்டு ... ... *
களிதனின்வந்தனனோர் கணத்திற்றானே ... ... *

தரு - இராகம் - தோடி - அடதாளம்.

பல்லவி.

கட்டியக்காரனும்வந்தானே கைலாசவாசற்
கட்டியக்காரனும்வந்தானே

அநுபல்லவி.

சிஷ்டிகர்த்தாவைக்கண்டு சிரத்திற்பதந்தைக்கொண்டு
அஷ்டதிக்கிலுங்கொண்டு அடியானென்றிடப்பண்டு (கட்)

சரணங்கள்.

அங்கிஜாருக்தொட்டு அடைவானகச்சைக்கட்டி
சிங்காரமாகப்பொட்டுத் திருநாதனிவிட்டு (கட்)
தலைதனிற்பாகுவைத்துச் சமுகாடுகையில்பெற்று
அலையாதேயென்னாத்து அடக்கென்றதட்டிமுறுத்துக் (கட்)
அண்டர்புகழ்சிறக்க வாரமார்பினிறக்க
வெண்டயத்தொனிபிறக்க மீசைகருப்புப்பறக்க (கட்)

கட்டியன்சொல்தரு - இராகம் - கலியாணி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஆரூர்கொலுவிற்கு வருகிறார் இதோ
யாவர்க்குங்காட்சியைத் தருகிறார் (௧)
பெரியோர்கள்நினைந்துள்ள முருகிறார் ஆவர்
பெரும்பேறெல்லாம்பெற்று மருகிறார் (௨)
தட்டுமுமணிகொண்டு வாருங்கள் தாம்
பூலமுமெடுத்திங்கே சேருங்கள் (௩)
பொட்டிடுங்குச்சந்தன நாறுங்கள் புலித்
தோலுமான்றோல்கொண்டு காருங்கள் (௪)
மலர்தளிர்மாலைகள் கட்டுங்கள் மிச்சம்
வாரியர்ச்சிக்கவே கொட்டுங்கள் (௫)
நலமுடன்வாழைக நாட்டுங்கள் கூடி
நாட்டமாய்ச்சேகண்டி தட்டுங்கள் (௬)
அதிகமாய்ச்சோடினை செய்யுங்கள் தீபம்
அலங்காரமாகவே வையுங்கள் (௭)
புதியமலர்மாரி பெய்யுங்கள் பாதம்
போற்றிப்பணிந்தென்று முய்யுங்கள் (௮)



பொது வசனம்.

எவ்விதமெனி லரவாபரணன் குருவர்ம்பூரணன் இளம்பிறைதரித்த ஏகநாயகன் கைலாயபதிக்குச் சிவன்கொலுவிற்குவருகிறவிதங் காண்க.

விருத்தம்.

மடவர்கள்கவரியிடக் கணங்கள்சூழ ... ... *
வடதைலாயப்பதியின் வாசமாகத ... ... *
திடமானகுலமான் மழுக்கைசேர்ந்தத் ... ... *
தேவர்முனிவோர்களெல்லாஞ் ஜெயஜெயென்ன ... *
விடமாகஉமையவளைப் பாகம்வைத்து ... ... *
ஈரேழுபுவனத்தோ ரிறைஞ்சிக்காணச் ... ... *
சடைமீதுகங்கைதனைத் தரித்திருக்குஞ் ... ... *
சங்கரசதாசிவனார் தான்வந்தாரே ... ... *

தரு - இராகம் - சங்கராபரணம் - அடதாளம்.

பல்லவி.

சங்கரர்தான்வந்தாரே சதாசிவ
சங்கரர்தான்வந்தாரே

அநுபல்லவி.

சங்கரர்தானேநாடிச் சிங்காரமானமோடி
திங்கள்சிரத்திற்சூடிக் கங்கைதனைக்கொண்டாடி (சங்க)

சரணங்கள்.

வேதவாத்தியங்கள் விந்தையுடனலங்க
வெற்றிமுரசுபம்பை விண்ணுலகுங்கலங்கத்
கீதமத்தளதாளங் கின்னரமுங்குலுங்கக்
கேசவன்மைத்துன வீசவேணவிலங்கச் (சங்க)
சென்னியிலேமகுடஞ் சிவந்தசடைகள்பின்னச்
சிலைநுதல்மீதினிற் சிந்தூரப்பொட்டுமின்ன
நன்னயருத்திராக்ஷ நவமணிமாலையென்ன
நாகரிகவுடைகள் வாகுடனேதுன்ன (சங்க)
விண்ணுலகோர்களும் விசிறிகையிற்பிடிக்க
மேனகைஊர்வசி மின்னார்களுநடிக்க
மண்ணுலகோர்கவி மாலைகளைமுடிக்க
வல்லபிம்புருடர்க ளல்லதேம்படிக்க (சங்க)

## சிவஸ்தலங்களைப்பற்றிக் கட்டியக்காரனைச் சங்கரர் வினவுதல்காண்க.

தரு - இராகம் - பந்துவராளி - ரூபகதாளம்.

கண்ணிகள்.

மதுரைசிதம்பரமுந் திருவண்ணாமலைபேரூர்
பொதுவைதிருவொற்றியூர்தில்லை பொன்னம்பலமாரூர் (க)

காசிதிருப்புவனம் நல்ல காளையார்கோவிற்குன்றமவ
ளூசிதிருவாடுதுறை நலமாங்கொடுங்குன்றம் (உ)

திருச்சூளிகைபொன்ற புரைசெய்யுந்தெய்வந்தார்
வரப்பிரசாதமாங்குற்றால மருதுசலமலையூர் (ங)

சிறப்பாந்திருப்பரங்குன்றமுந் திருவாரூர்வாசம்
குருப்பிரசாதமேவுங்கும்ப கோணம்பாவநாசம் (ச)

புனவாசமும்வேதாரண்ணியம் புகழ்சப்புகேசரமும்
கனமாமறைக்காடுத்தெற்குக் கடல்வாழ்ராமேசுரமும் (ரு)

சிவசுப்பிரமண்ணியதிருமூர்த்தி சாமிமன்னிலமுந்
தவமுற்றிடுமூற்றமர்ந்த சந்திரசேகரஸ்தலமுந் (சு)

தேடுமாயிரத்தெட்டுஸ்தலஞ் சிறப்பாகவேகெட்டாய்
சோட்சவுபசாரம்மிகத் துலங்குதோ சொல்கட்டியா (எ)

சிவன்சொல் வசனம்.

அடாவாடாகட்டியக்காரா நமது சிவதலயானது புவியிலேசமிபிருக்கின்ற ஆயிரத்தெட்டாலயத்திலும் சாம்பிராணி கர்ப்பூரங்களைவைத்தியவ [illegible] சவுபசாரங்கள் நடந்துவருகின்றதா.

கட்டியக்காரன்சொல் வசனம்.

தங்கள் திருவுள்ளத்தின்படியே நடந்துவருகின்றதய்யாசுவாமி.

ஈசன் வசனம்.

ஆனால் யான்சற்றுநேரம் யோகநித்திரைசெய்யவேணும் சந்தடிவிலக்கும் பிள்ளாய்.

கட்டியன் வசனம்.

அப்படியேவிலக்கினேன் சுவாமி.

### விருத்தம்.

வாயுவைவுட்கொண்டடக்கிக் கரணமொருநான்கும் ... *
வருபுலனுமிடையொடு பிங்கலைசுழினையோடே ... *
மாயுமின்றமூலவனலெழுப்பி யமுதூட்டிப் ... ... *
பதமூன்றுமண்டலமு மேவிவிளக்கேற்றித் ... ... *



தூயபுகழ்மேலைவெளி தனிஇரு நாமமுந்தந்து ... ... *
சுதித்தொளிர்மெய்ஞ்ஞான வீட்டில்வாழுமரனைப் ... *
போயுமையாள்சிவவடிவைத் தரிசிக்கவென்றே.... ... *
பொருந்திஞெளிலரங்கு கொலுவினில்வந்தாளே ... *

தரு - இராகம் - அடாணு - ஆதிதாளம்.

பல்லவி.

வந்தாளேயம்பிகை மனோன்மணியாமாது வந்தாளே

அநுபல்லவி.

சந்திரோதயம்போல்முகந்தன தனென்னுன்னைச்
சரியானபுருவங்க டான்சிலையென்ன (வந்தா)

சரணங்கள்.

மூத்துக்கோமேதக மொழிபுட்பராகம்
முழுநீலம்பச்சை மரகதமிடேகம்
கொத்துச்சாப்பணிக ளாரம்வையோகம்
கோலஞ்சிறந்திலவகள் கொண்டொலிர (வந்தா)

இந்திரவர்ணப்பட்டாடை யியல்புடன்மேவ
இடைதனிலொட்டியாண மேற்கையாய்ப்பரவ
புசுந்தாமணைப்பதத்தில் சிலம்பொலிகூவ
நிசமிபிற்கடகவளை செயமெனத்தாவ (வந்தா)

அயன்கையுர்வசியும் வேண்டினர்கூட
விஸ்தாரமுனிமாதர் மெப்பசுத்தேட
வானவர்மாணிடர்கள் வாழ்த்திக்கொண்டாட
வாராள்மெய்ஞ்ஞான வான்மலர்ப்பதநாட (வந்தா)

பொது வசனம்.

சிவபொருளானவர் யோகநித்திரைதெளிந்தவுடனே பார்வதியானவ ளிரண்டுபாதமும் போற்றியிருக்கவந்தசமையந் தெய்வரம்பைகள் வருகின்றவிதங் காண்க.

### விருத்தம்.

பரம்பொருளாகநின்றயோக பாபரவஸ்துவுமாய்... ... *
எழும்பதுவேகடையானையுமே முதலெல்லாயிருப்பவுமே... *
திறம்பெறவேயிரவும்பகல் காத்தருள்சிவனுமைதன்கொலுமுன் *
அரம்பையர்கூடிநடம்புரிந்தாட லங்கிருதமாகவந்தார் ... *

தரு - இராகம் - காப்பி - ஆதிதாளம்.

பல்லவி.

சத்திசிவநாதா பத்தர்க்கருள்தாதா (சத்தி)

அநுபல்லவி.

முத்தியருள்காரணா சித்தமிலவளர்பூரணா (சத்தி)

சரணங்கள்.

தேவர்மலர்சொரிய திருவடியிற்பெய்ய
பாவமதுனைய்ப் பாருநாங்களுய்ய (சத்தி)
சங்கிதங்கள்பாடத் தாளமதுபோட
விங்கிதமாயாட விருபதமூநாட (சத்தி)
திரிபுரமெரித்தாய் சிவந்தசடைதரித்தாய்
நரிதனையுரித்தாய் கற்பதமும்விரித்தாய் (சத்தி)

அரம்பையர்வசனம்.

காலகண்டதிரிநேத்திர சாம்பசதாசிவனே சரணம் சரணம்.

கட்டியன் வசனம்.

பொன்னுலகத்தமர் நுண்ணிடைக் கன்னியர்களே உங்கட்குப் பொன்மணிமுதலிய வனிககவெள்ளிடங் கண்ணுதல்சொன்னார் ஆசையாற் பெற்றுக்கொள்ளுங்கள்.

அரம்பைகள் வசனம்.

அப்படியே பெற்றுக்கொண்டோமையா.

நாசன்சொல்வசனம்.

ஆண்டிபரதேசிகளை யழைத்தவர்களுக்கன்னமுதலியவணங்கு ம
கட்டியம்.

கட்டியன் வசனம்.

அப்படியேமகாபாக்கியம்சுவாமி.

கட்டியன்கவி.

சிவனருவருளைச் சிரத்தினிற்றாங்கி ... ... ௩
யவனியிலாண்டி யாவரும்வருவீர் ... ... ௪

தரு - இராகம் - முகாரி - அடதாளம்.

கண்ணிகள்.

ஆண்டிபண்டாரங்கள் வாருங்கள் நீங்கள்
ஆசைப்பட்டதெல்லாங் கேளுங்கள்
வேண்டியபரதேசி வாருங்கள் நீங்கள்
விருப்பமுள்ளதெல்லாங் கேளுங்கள் (க)



வடவரையகுதிகாள் வாருங்கள் நீங்கள்
மனதினில்நினைந்ததைக் கேளுங்கள்
முடவரேகிழவரே வாருங்கள் நீங்கள்
முன்வந்துதென்புடன் கேளுங்கள் (உ)
அன்னதானஞ்செய்ய வருந்துங்கள் நீங்கள்
அறுசுவையோட்டு தருந்துங்கள்
என்னவேண்டியதோ கேளுங்கள் இப்போ
இன்பமாய்த்தருகிறேன் வாழுங்கள் (ங)

ஆண்டிகள்வரவு-கந்தார்த்தம்-தரு - இராகம் - தன்யாசி - ஆதிதாளம்.

கந்தசத்திகள்செய்தோடிச் சலங்கனின்மூழ்கிநாடிக்
கந்தைகள்பலவுஞ்சூடிக் கைதனிற்பிரம்புநீடிச்
சுந்தரர்தனைக்கொண்டாடிச் சுவாமியம்மனையுந்தேடித்
தந்தனவென்றாண்டிகள்வந்தோம் ஏகமாய்க்கூடித்
தந்தனவென்றாண்டிகள்வந்தோம்
தந்தனமாந்தாள்மூட்டிச் சிந்தையில்மெஞ்ஞானங்காட்டி
குந்தியகாலைமுன்நீட்டி யந்தமாய்வெண்பல்லைக்காட்டி (தந்)

இதுவுமது.

தரு - இராகம் - அசாவந்தி - ஆதிதாளம்

சந்தமாயின்றநாதா காசியிலிருக்குநீதா
மந்திரமுரைக்கும்போதா மண்டலைசகமந்தவேதா
நந்தவாடிமிஞ்சங்கிதா மோக்ஷவிடின்றுதாதா
திந்தோமென்றாண்டிகள்வந்தோம் சிவனோடித்
திந்தோமென்றாண்டிகள்வந்தோம்
திந்தோமென்றாண்டிசசாதி வந்தோங்குருவென்றேதி
சந்தோஷித்தருளாதி தொந்தோந்திளதிறுதி (திந்)

இதுவுமது.

தரு - இராகம் - பைரவி - ஆதிதாளம்.

சித்தருன்புகழைநாட்டத் தேவருங்கவரிநீட
பத்தருன்விபூதிசூடப் பாருளோர்பணுவற்பாட
முத்தர்சாயுச்சியந்தேட முனிவர்கண்மலனைப்போட
சத்திசிவனேகாருங் கிருபையுடன்
சத்திசிவனேகாரும்
சத்தியுடனேவாரும் வித்தாய்முளைத்துநீரும்
நித்தந்துதித்தோங்கேளு மித்தருணம்வந்தாளும் (சத்)

௬

## இருவரும்.

தரு - இராகம் - தோடி - ஆதிதாளம்.

ஆசீர்வாதங்கள்செய்ய வகத்தினைச்சுத்திசெய்யப்
பாசபந்தங்களையப் பரஞ்சுடாரித்துய்ய
வாசனன்மலர்தன்கொய்ய வர்ச்சிக்கவருள்தாடைய்ய
விசாவெங்களைக்காருமே பரமகுரு
விசாவெங்களைக்காருமே
ஈசாவிளங்கும்பவ நாசாவென்றுரைந்தாவு
நேசாகைலைமேவும் பூசாபலனையேவும் (ஈசா)

பண்டாரங்கள் வசனம்.

இரப்போர்களைக் காத்தருளுங் கடவுளே.

சிவன் வசனம்.

என்னுயத்தனை பண்டாரங்களுக்கு வேண்டியதைக்கொடுத்து அனுப்புங் கட்டியம்.

கட்டியன் வசனம்.

ஓ பண்டாரங்களே தக்கபரிசுகொடுக்கிறேன் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஆண்டிகள்வசனம்.

அப்படியேபெற்றுக்கொண்டு போகிறோம் கட்டியக்காரா.

## உமைசொல் விருத்தம்.

ஆலயங்தேடித்தேடி யர்ச்சித்துத்தீர்த்தமாடிச் ... ... *
சீலமாய்த்தவங்கள்செய்து திரியுமாளிடற்குவேறே... ... *
மேலதாம்பதவியொன்று விரித்துரைத்திடுவீரிப்போ ... *
காலனையுதைத்தபாதா கழலிணைசரணந்தானே ... ... *

தரு - அகவல் - இராகம் - முகாரி.

சிவமயமெனத் திருமூர்த்தமாகித்
தவசிகாமணியாந் தனிச்சிவயோகி
விண்ணப்பமையா விளம்பினேன்பெரிய
வண்ணலாம்பரம சோதிகுனறிய
வருந்தியேபுவியின் மாந்தரிச்சித்தே
சிறந்ததலங்க டேடியர்ச்சித்தே
தீர்த்தங்களாடிச் செய்தவம்படர்க்கும்
பார்த்துத்திரியும் பலமானிடர்க்கும்



வேறோர்பதவி விரித்துரைத்தி
தாரார்சுடுக்கை தரித்திடுஞ்சோதி
அறுவகைக்கிரணி யாம்பிரமேகம்
பெருவயிருநம் பிலமானரோகம்
வேகமாநீர்கள் விழியெரிவுடன்படு
தாகம்வாய்ப்புண் சரீரச்சொறியொடு
நாலாயிரத்து நானூற்றுநாற்பது
மேலேயெட்டு வியாதிகள்சேர்ப்பது
தொலைத்துமேசட்டத்தைச் சுகம்பெறவிருத்தி
நலத்துடனின்ப நல்குவாய்திருத்திக்
கண்டங்கறுத்த கங்காதரனே
தண்டமென்றவனைத் தாங்குசங்கரனே
அஞ்ஞானமகற்றி யருளததாரும்
மெஞ்ஞானமான வீட்டிற்சேரும்

உமையவள் வசனம்.

மூர்த்தி தீர்த்தத்தைவிட மோட்சமொன்று மனுக்களுக் கனுக்கிரகிக்கவேணுமசுவாமி.

## சங்கரர்சொல் விருத்தம்.

மாதேகேளுமையவளே மானேயிந்த ... ... *
மனிதர்களுக்கெளிதான தவமொன்றுண்டு ... ... *
சாதாகவருமாண்டின் மாசிமாதந் ... ... *
தாணமரபட்சஞ்சதுர்த் தசிநாடன்னின் ... ... *
மீதாகவெனைப்போற்றிப் பூசைசெய்து ... ... *
விரும்பினவர்தவமடைவர் விளக்கமாக ... ... *
வேதாந்தச்சிவன்ராத்திரி மந்திரத்தை ... ... *
விளம்புகிறேனீகேட்க விரைந்துதானே ... ... *

தரு - இராகம் - பைரவி - அடதாளம்.

பல்லவி.

மந்திரமாயிதைச் சிந்தையிற்கொள்ளுவோர் வருவாரெனதுபதம்
தேக - சுந்தரமாகவே சாயுச்சியத்திலே சுகமாயிருப்பார்நிதம் (மந்)

அநுபல்லவி.

மந்தரமால்வரை மத்தாகக்கார்க்கோடன் வாசுகிவடமாகத் - தரி
சந்திரனுதைச் சமுத்திரமேயொரு தாழியாயுண்டாக (மந்)

சரணங்கள்.

அக்கினிமாலய லிங்கிரன்றேவ ரருக்கனுடனேர்பக்கங் - கூடிச்
சுக்கிரீயன்வாலி யிருவரிமுத்திடக் குண்டாயாவமக்க (மங்)
கடலின்விடமதுதோன்றியுமுரிந்து கடைந்தவனாத்தொடா - வம்பியா
ஒடாதுபட்டுக் கைலாயிற்சேருமூ லெனவிடமடா (மங்)
அடைந்தோர்க்கொழுந்துக்தொடர்ந்சாதரித்திட்டாலத்தைநான்பிடித்தேனவைத்
திடம்பெறசெல்லிக் கனியாய்த்திரட்டியேதெள்ளமுதாய்க்குடித்தேன் (மங்)
நஞ்சையாலுண்ணை நடுங்கிடவேலியு கம்பிடற்றைப்பிடிக்க - வஞ்
சஞ்சனைசேகைபோற் கண்டங்கறுத்ததை யாரறியார்படிக்க (மங்)
என்செயுமோவிட மீசனையென்றுதா னிரவுந்துயிலாமல் - எல்லாந்
தந்தெசபஞ்செய்து விழித்திருந்தா ரபசாரம்பயிலாமல் (மங்)
சிவத்தைத்துதித்திடுந்தேவர்முனிவர் திருமாலயன்வேண்டாணத்துத்
தவத்தைத்தெரியாமற்காட்டி லொருவேடன்முனிவ்விரதம்பூண்டான்
உமையவள் வசனம். (மங்)

அகோவாருமென் பிராணநாயகராகிய சர்வதயாபரனே யந்தச்சிவன் ராத்திரி விரதத்தை யாவருமனுஷ்டிக்கும் விதத்தை யடியாளுக்குத் தெரிவிக்கவேணும்சுவாமி.

## ஈசன்சொல் விருத்தம்.

என்றனைநோக்கியின்று மின்பமாய்க்கேட்டாய்நீயுந் ... *
சிந்தையுமகிழ்ந்துவாழுஞ் சிவன்ராத்திரிவிரதந்தன்னை ... *
முந்தவங்குலவேடன்முன் முனியாமனோற்றநோன்பை ... *
யிந்தநாளுரைப்போம்பாரா யிஸ்வரியென்னும்பெண்ணே ... *

தரு - இராகம் - தன்யாசி - ஆதிதாளம்.
பல்லவி.

விரதமிருப்பதுசொல்வேன் சிவன்ராத்திரி
விரதமிருப்பதுசொல்வேன்

அநுபல்லவி.

தரணிவளருமாந்தர் தானவர்தேவருஞ்ம் (விரத)

சரணங்கள்.

ஆண்டொருமாசியமாசக்ஷஞ்சதுர்த் தசிதிதிகூடியநாள் - அன்று
வேண்டிச்சிவாலென்றுமேதினிமீது விரும்பியிருப்பதுகேள் (வி)
பகல்நிர்ச்சலமாகவிரவினியமப்படிசெபஞ்செய்வாய்கள் - கொண்டு
அகந்தனைச்சுத்திசெய்தானபின்சக்தனை யதனுடன்றேங்காய்கள் ()



கரும்பிளநீர்பச்சரிசிபயறு கனிநிறைந்தும்போற்றி - நல்ல
அரும்பறுகுவில்வமாடையுஞ்சாற்றியே யர்ச்சனைசெய்தேற்றி (வி)
சாம்பிராணிகர்ப்பூரதூபதீபநாலு சாமஞ்செய்தேவிரவில் - வளர்
ஆம்பனிறைந்ததடாகத்திலேமூழ்கி யமுதுண்டிவன்பிரவில் (விர)
தவமுடிவாகிடவித்தினைசெய்வது சாஸ்திரமாகும்பண்டாய் - இந்த
சிவராத்திரிப்பலன்கைமேற்கிடைத்திடுஞ்செப்பினமீதுகண்டாய்.
ஈசன் வசனம். (வி)

கேளாயென்னன்பிற்குரியபார்வதி யானருளியபடியே தவறாமல்யாவர்களு மிச்சிவராத்திரிவிரதத்தை யனுஷ்டித்தாலவர்கள் சாயுச்சியமாகிய வெனதுபதஞ்சேர்வார்கள் பெண்ணே.

உமையவள் வசனம்.

வாரும் பரிபூரணக்கடவுளே இந்தச்சிவராத்திரிவிரதத்தை யெப்போதுஞ் சொல்லாமலிப்போது சொன்னது விந்த உலகத்தின்வாழுமானிடர்களும் தெய்வலோகத்தில் வாழுந்தேவேந்திராதிதேவர்களும் சத்தியலோகத்தில்வாழும் பிரமனும் தவஞ்செய்முனிவர்களும் செய்தபாக்கியமையாகவாமி.

ஈசன் வசனம்.

ஆனால்நீயென்னைநோக்கிக்கேட்டபடியால் யாமுள்ளமகிழ்ந்துரைத்தோம். இனிமேற்கதைவரலாறு மங்குலவேடன் விரதமிருந்ததும் எடுத்துரைக்கிறோம் கேளாய்பெண்ணே.

உமையவள் வசனம்.

ஆனாலவ்வங்குலவேடனிருந்த சரித்திரத்தை யடியாளுக்குரைக்கவேணுமென்றாள்.

## ஈசன் விருத்தம்

சித்திதரும்வெள்ளிமலை தன்னைச்சூழ்ந்த ... ... *
செல்வமாம்வில்வவனந் தன்னிலேதான் ... ... *
சுத்தியோரிடம்பார்த்துக் குடிசைகட்டித் ... ... *
துடிக்காளவங்குலனும் வேடனுக்குச் ... ... *
சத்தியகுணவடிவமுள்ள கொடிச்சிமாது ... ... *
தான்பிரியாதிருவருஞ் சஞ்சரிக்குநாளி ... ... *
லத்திசையின்வில்லெடுத்து வேட்டையாடி ... ... *
யதனாலேஜீவனஞ்செய் திருந்தான் ... ... *

பொது வசனம்.

வெள்ளிமலையைச்சூழ்ந்த வில்வவனத்திலங்குலவேடனுமவனில்லாள்கொச்சியென்னுமிருவருங் குடிசைகட்டியிருந்துதினம்வேட்டையாடிமிருகவதைசெய்துகாப்பழித்து வழிப்பறிசெய்துவருகிறநாளிலோர்நாள் நடக்கும் விர்த்தாந்தமெல்லாமெனில்.

## அங்குலன்வரவு விருத்தம்.

அங்கமதனைச்சிறைத்தோன் பாவிப்பல்லன் ... ... *
அழுங்குவிழியோசிவப்பு முத்துருகூனல் ... ... *
செங்கரக்கருங்காய்ப்பு நெடியகாலன் ... ... *
தினந்தோறுங்கொலைபுரிவான் புலையேசெய்வான் ... *
சங்கரன்மாலயன்வந்து பொருதினாலுஞ் ... ... *
தஞ்சிலேக்கமற்றோர்களெனச் சமர்த்துப்பேசிச் ... ... *
சிங்கமெனக்கர்ச்சித்து லாகுபோட்டுச் ... ... *
சிரித்திட்டானடுக்கிடக் கொக்கரித்திட்டானே ... *

### தரு - இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

வேடன்வந்தான் அங்குலனெனும் வேடன்வந்தான்

அநுபல்லவி.

வேடனும்வந்தானே மீசைதனைமுறுக்கிச்
சாடியேலாகிட்டுச் சாதிப்பிப்பெருக்கி (வேட)

சரணங்கள்.

வளைதடிசக்கரம் வரிவில்லுமம்புடன்
விழிசிவக்கவேகோபம் மீறியேதென்புடன் (வேட)
தனிவழிபயிகொலை சஞ்சரித்திடுவீரன்
அனியாயமேமனை தாரச்செய்திடுகுறான் (வேட)
மான்முயல்புல்வாய்கள் வளையாடேனல்ல
ஏனமயிற்கோழி யெய்துகொண்டேசெல்ல (வேட)

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் வேடன்வரவு மவனதுபெண்சாதி கொடிச்சிவருகிற விதங்காண்க.

## கொடிச்சிவரவுவிருத்தம்.

சென்னியிற்குழல்கருண்டு நேதகக்கார்மேகம்போலத் ... *
துன்னியவங்கமெல்லாந் தூர்க்கந்தமாகவீசச் ... ... *
சின்னவேல்விழியுங்காட்டிச் சிறுமருங்கொருகுத்தாடை ... *
கன்னியாங்கொடிச்சிமாது கணவன்முன்னேவந்தாளே ... *



### தரு - இராகம் - சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

துடியிடைக்கொடிச்சிதோன்றினாள் ஒயிலுடனே
துடியிடைக்கொடிச்சிதோன்றினாள்

அநுபல்லவி.

வடிவுடன்வில்வவனத்தின் வாழுஞ்சிறுகுடியாள்
செடியிருந்தாலுஞ்சிகையைத் திருத்திக்கோதிமுடியாள் (துடி)

சரணங்கள்.

சங்குவளைதான்றுலங்கவே அக்குமணியாந்
தாவடமுமார்பிலங்கவே
கொங்கையிரண்டுங்குலுங்கவே செவியதனிற்
குறுந்தோலைதானுலங்கவே
கொஞ்சியமுக்குத்தி கோர்த்துழுத்தநுசத்தி
யஞ்சனமோளிர்நெற்றி யங்குலன்றனைநற்றி (துடி)
கொஞ்சிக்கொஞ்சிப்பாக்குக்கடித்து வெற்றிலைபோட்டுக்
தொண்டையின்றுலாவிக்குடித்து
மிஞ்சியேபதங்கள்படித்துக் கள்ளுடன்றேனை
வேண்டியமட்டுமேகுடித்து
வேலைப்பழித்தவிழி மிஞ்சுமின்குயின்மொழி
வாலைப்பருவக்கிளி வானம்வளர்மின்னொளி (துடி)
புதியக்கிழங்கைகெல்லுவாள் தினைக்கதிரைப்
பொறுக்கிமிதித்துச்செல்லுவாள்
பதியைச்சோறுண்ணச்சொல்லுவாள் முன்னாலேகிட்டப்
படுத்தவன்றன்னை வெல்லுவாள்
பந்தநுபோற்குதிக்கப் பார்மகிழ்ந்துமதிக்க
விந்தையுடன்கதிக்க வேடன்றனைத்துதிக்க (துடி)

## விருத்தம்.

எந்தனையாளுநாதா விருக்குங்கூவிளவனத்திற் ... ... *
சந்ததியில்லாமற்றான் றனியராயிருக்கலாமோ ... ... *
மைந்தனைப்பெற்றுவாழும் வகையதுவுனாககவேணும் ... *
சுந்தரக்கணவாவின்றே சொல்லுவாயெனக்குத்தானே ... *

தரு - இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

மைந்தனைப்பெற்றுநான்முந்தியே யென்னும்மகிழ்ந்து
வாழும்வகையைநீசொல்லோங்கியே

அநுபல்லவி.

சிந்தையிற்றுயரமூர்க்கடி மதிமயங்கி
யந்திபகலாகவேவாடி
வந்துகள்ளிபோ லுடல்வளர்ந்து
நொந்துபுண்ணாய் மனந்தளர்ந்து (மைந்த)

சரணங்கள்.

தாயுந்தந்தையுஞ்செய்தகுறையோ பெரியபேரை
வாயின்முந்தவேளைதவறையோ
மேய்முயலினைமாறுமறையோ பாவைமுதற்
சாயவெய்திடவந்தமுறையோ
நீயர்போலவே வந்தபாவி
போயிறக்காம லிருந்தென்னாவி (மைந்த)

குலமுந்தியேசெய்ததோஷமோ சிறந்துவாழும்
தலம்வந்திருந்தவாசமோ
நலம்பிந்தவேவருநாசமோ விண்ணுலாவிடும்
பலங்கன்னியர்வாமோசமோ
நிலம்பரவிக் கூவிளங்கனிரும்
புலம்பெருகச் சென்றிருந்துவாழும் (மைந்த)

வாயெபெஞ்சேர்வயதுமாச்சே பின்பேர்சொல்லப்
பாலனுமில்லாமற்போச்சே
சாலவெங்குலத்தோர்க்கேச்சே யெல்லோர்களின்முன்
மேவினத்தானென்னபேச்சே
நீலவிழிகளி னீருசோருது
காலுகையுடல் கருத்துநீருது (மைந்த)

நொடிச்சி வசனம்.

சரணஞ்சரணமையா வென்பிராணநாயகா வெனக்குப் புத்திருண்டாகும் வகை சொல்லவேணுஞ்சுவாமி.



அங்குலன் விருத்தம்.

உரைத்திடுங்கொடிச்சிமாதே வுற்றுநீகேட்பாய்பார்த்துக் ... *
கருத்துடன்வாழும்வில்வக் காவதிலோரிடத்திற் ... ... *
விறத்துடனீசிதேனுஞ் சேர்த்தியேபச்சைபோட்டுச் ... *
சரித்திரந்தனையேசொல்லிச் சந்தகன்னியைத்துதிப்பாய் ... *

தரு - இராகம் - மத்யமாவதி - ஆதிதாளம்.

பல்லவி.

பச்சைபடைப்புப்போட்டு கனிவுடன்
மெச்சியேபுகழ்பாடு

அநுபல்லவி.

பக்ஷமாயடவிசார்ந்து நிச்சயமாயின்றுதேர்ந்து
உச்சிதமாயுள்ளங்கூர்ந்து இக்ஷணம்வருவார்சேர்ந்து (பச்)

சரணங்கள்.

மேடைமண்ணாற்குவித்து சுற்றிலும்நடு
வோடைப்புல்லதைமுயித்து
வாடைமலர்கள்பறித்துத் திகழ்ந்திடவே
ஆடைமேலலங்கரித்து
ஆளுவாயென் றடிகள்போற்றிட
ருழுவார்கள்வந் தன்னைத்தேற்றிட
வாழும்புத்திரன் மகிழ்ந்துபார்த்திட
எழுபோகரு மிரங்கிக்காத்திடப் (பச்)

மனைதன்னிலிருந்தோடியே விளங்கிய
சுனைமுன்புதான்கூடியே
நனைமெய்கணீராடியே யிடையுடை
புனையர் [illegible] கழ்பாடியே
கொண்டிடாதே
முண்டிடாதே
யண்டிடாதே
விண்டிடாதே (பச்)

அ [illegible] மத் தேக்கிலைகளை
வரிசையாயத்தான்விரித்து
உருசியாய்த்தேன்சரித்துப் பிசைந்ததைத்
தரிசனம்பெறத்தரித்து
தாங்கிப்போற்றிடு நாளைத்தேடிப்
பாங்கதாகவே துபநீடிக்
கோங்குபூம்புனக் குன்றிற்கூடித்
தேங்கிடாமலே வருவார்நாடி (பச்)

அங்குலன் வசனம்.

கோளாயடி கொடிச்சி இனையரிசியுந் தேனுங்கலந்து கன்னியர்களைவேண்டிப் பச்சையிடுவாயாகில் அவர்கள்மனதிரங்கிப் புத்திரன்பெற வரமுதவுவார்களென்னே.

## கொடிச்சிசொல் விருத்தம்.

மத்தமாப்பச்சரிசியும் படைத்துப்போற்றினேன் ... ... *
சித்தமேமகிழவந் திருக்கருத்திலே ... ... *
புத்திரன்பெறவரம் புகலுமிப்பவே ... ... *
சத்தகன்னியரெனுந் தாயின்மார்களே ... ... *

கரு - இராகம் - எதுகுலகாம்போதி - அடதாளம்.

கன்னிகள்.

சத்தகன்னியரெனுந் தாயேயுமதருள்வேண்டினேன் இப்போ
சித்தமிரங்கியே சீக்கிரமீவரென்று நாண்டினேன் (க)
எந்தனுக்குப்பிள்ளை யில்லாமலிருப்பதுந்தோஷமே விந்து
சந்ததியுந்தந்து தாவென்னைக்காத்திடவேணுமே (உ)
மஞ்சனுமில்லாமல் மறுகித்தவிக்கிறேன்பாருமே கல்ல
குஞ்சரம்போலவே குழந்தைகள்பெறவருள்தாருமே (௩)
பிள்ளையுமில்லாமற் பெருகத்தவிக்கிறேனுமே என்னைத்
தள்ளிவிடாமலே தந்தருள்வாய்புத்ரர்தானுமே (௪)
பெற்றுவளர்த்திடப் பெருஞ்செல்வம்வேடர்கள்காணவே வந்து
முத்தங்கொடுத்துஎன் முன்விளையாடாக்காலனமே (௫)
கையிலெடுத்துக் கருத்தாய்விளையாட்டிக்காட்டியே எந்தன்
மெய்யிலேசேர்த்தி விரும்பிமுத்தமிடக்கூட்டியே (௬)
எங்களுக்குப்பின்னிருந்தெங்கள்பேர்சொல்லிசாற்றுவார்-இனிப்
பொங்கலும்போட்டுப் புதியமலர்கொண்டு ... ... ர் (௭)
இன்னுமுமகளில வின்றுமென்றேசொல் உங்கள்
தன்னருளைசெய்து தற்காத்திடுங்கன்னியர் (அ)

கொடிச்சி வசனம்.

நானுமென்பத்தாவுங்கூடிப் பச்சைபோட்டெ ... ளும வந்திரங்குவீர் சப்தகன்னிகளே.

## கலித்துறை.

அஞ்சுகமாஞ்சொ லழகுமயின்மெய்பனநடையு ... ... *
மிஞ்சியமின்ன லிடையுங்கனத்தவிளமுலையுங் ... ... *
கொஞ்சுநகைதாளம் வேல்விழியுங்குவித்தசிகை ... ... *
மஞ்சுளிகரெனவாய்த்திடுங் கன்னியர்வந்தனரே ... ... ...



கரு - இராகம் - பியாகடை - அடதாளம்.

பல்லவி.

தெய்வலோகத்தில்வாசம் சப்தகன்னியர்
வையகமீதினேசம்

அநுபல்லவி.

அய்யன்சிவனருள்கொண்டு மந்திரங்களு
மெய்யுள்ளிரயபதுமுண்டு (தெய்)

சரணங்கள்.

கங்கைதீர்த்தத்திற்குளித்தோம் கோதாவரி
காவேரிகண்டுகுளித்தோம்
துங்கபத்திரைகுளித்தோம் நர்மதையெனத்
துலங்கும்யமுனைகுளித்தோம்
சுந்தரவேகவேணி அந்தரமுடையவாணி
சிந்துநதியாங்காணி வந்தோமேஉனைப்பேணி (தெய்)
கன்னியாகுமரிதீர்த்தம் பழனிவளர்
கதிர்சரவணதீர்த்தம்
பின்ராமேசுரதீர்த்தம் கோடானுகோடி
பேசியபலதீர்த்தம்
பிரியமாயாடினோம் வரியுடைசூடினோம்
விரிமலர்தேடினோம் சுரிகுழல்சூடினோம் (தெய்)
புவனவலம்புரியுங்கீர்த்தி யெங்கெங்கும்
புகழ்தெய்வகுளம்மனப்பூர்த்தி
சிவசுப்பிரமண்ணியதிருமூர்த்தி சாமிஎல்லை
திகழிடம்புரிதீர்த்தம்சோத்தி
சிறந்தநன்னதிதாவித் திரிந்தாடினோமேவி
வரங்கொண்டோந்தவப்பூவி லதிந்தெங்கடனைச்சேவி (தெய்)
தென்றுதமிழையுரைப்போம் குமிகுணங்கள்
சென்றபின்றநாளுரைப்போம்
பிள்ளைபெறுவதுரைப்போம் பெருமலடி
யெறவேவரமுரைப்போம்
பின்னேஆயுளுமுய்யுந் சொன்னதல்லியாதிதையும்
முன்னேஅருளும்மெய்யும் என்னிருந்தாலென்செய்யும் (தெய்)

கன்னிகள்சொல் வசனம்.

அடிபெண்ணே கொடிச்சி நீ யெங்களை வேண்டித்துதித்த விபரத்தைச் சொல்லடியம்மா.

## கொடிச்சிசொல் விருத்தம்.

ஏழுபேர்கன்னிமாரே யின்பமாகக்கூடி ... ... *
வாழவேநீர்த்தமாடி வளர்வில்வவனத்தின்வந்தீர் ... ... *
சூழவேகிருபைவைத்துச் சுந்தரக்குழந்தைதந்து ... ... *
ஆளுவீராளுவீரென் றடியிணைபோற்றினேனே ... ... *

தரு - இராகம் - நாதநாமக்கிரியை - அடதாளம்.

பல்லவி.

சரணஞ்சரணங்கன்னிமாரே இன்று
தற்சொரூபமாய்வந்த தாயேழுபேரே

அநுபல்லவி.

பிரியாமலெங்களைக்காரே வந்து
பேணிக்காராவிட்டாற் பின்யாருபாரே (சரணஞ்)

சரணங்கள்.

உங்களையல்லாமற்றெய்வம் எங்கட்
குண்டோவிவ்வுலகத்தில் வேறென்னசெய்வோம்
மங்கையரேநீங்கள்சைவம் நாளும்
மலர்விழியால்நோக்க வாழ்ந்துநானுய்வம் (சரணஞ்)
கணவனுடனேயான்வாழ்ந்து இப்போ
கண்மணியாம்பிள்ளை யில்லாமற்றாழ்ந்தேன்
இணையடிதன்னிலேவீழ்ந்து வரம்
இப்போதுதாருமென் றிருவருஞ்சூழ்ந்து (சரணஞ்)
வந்தோமே யிருவரைக்காரும் மலர்
மாராமற்சொரிந்திட்டோம் வரந்தந்துபாரும்
சந்ததிதானீய்ந்தாலாறும் மனச்
சஞ்சலந்தான் போகத்தான்வரந்தாரும் (சரணஞ்)
உள்ளமிருக்கும்பிசாசை யிங்கு
ஓங்காரமந்திரமுறைத்திடும் ஓசை
பிள்ளையில்லாதகோராசை கொண்டு
பிரியமாய்ச்செய்திட்டோம் பெரியதோர்பூசை (சரணஞ்)
வனந்தனில்வேட்டுஞ்சென்று அம்பால்
வளர்மிருகம்பறவை மனதாரக்கொன்று
தனதுடன்கொணர்குவான்றின்று வயிர்
தன்பசிநீக்குவேன் றுமொன்றுமின்று (சரணஞ்)
சுத்தந்துணையில்லைக்கேளும் வேறோர்
சொற்பேசவுறவில்லைத் துயரேயென்னாளும்
சற்றேதயைசெய்துஆளும் வேட்டன்
றன்பிள்ளையெனச் சொல்லித்தரணியில்வாழும் (சரணஞ்)



நெஞ்சமிரங்காததேது வேடர்
நேர்த்திக்கெய்வமே நீங்கள்தானேது
மஞ்சன்றாராதென்னவாது எந்தன்
மனதிற்குடியாக வருவீரிப்போது (சரணஞ்)
பாக்கியமேபிள்ளைப் பாக்கியம் பெற்றுப்
பார்த்தோர்மகிழாக்காற் பாரிலயோக்கியம்
தேக்குவாயென்னுள்ளம் வாக்கியம் மண்ணிற்
சிறுவனைப்பெறச்செய்தாற் சிகழுமேசிலாக்கியம் (சரணஞ்)

## கொடிச்சி விருத்தம்.

தாயெனுங்கன்னிமாரே சரணமுஞ்செய்தேனம்மா ... ... *
நாயென்மேற்கிருபைவைத்து நலவளம்நாங்கள்வாழத் ... *
தூயநன்மொழியினாளே சுந்தரக்குழந்தைதந்து ... ... *
தீயனைக்காவென்றேநான் றிருவடிபோற்றினேனே ... ... *

கொடிச்சி வசனம்.

சரணமம்மா சப்தகன்னியர்களே அடியேனும் எனதுபர்த்தாவுங் கூடிப் பரசைபோட்டு உங்களை வேண்டுதல் செய்யவந்தோர்கள் எங்களுக்குப்பிள்ளைப் பாக்கியம் தந்து காக்கவேணுந் தாய்மார்களே.

கன்னிமார்கள் வசனம்.

அப்படியே நாங்களேழுபேரு மொரேமனதாயிரண்டுபிள்ளைக்கி வரந்தந்தோம் நீங்கள்பெற்றுவளர்த்து இவ்வில்வவனத்திற சுகமாகவாழ்ந்துகொண் டிருப்பீர்கள்.

கொடிச்சி வசனம்.

அப்படியேமகாபாக்கியமம்மா கன்னிமார்களே.

## பொது விருத்தம்.

என்றந்தவேடன்மாது லிணையடிதொழுகமண்மேற் ... ... *
கன்றதுக்கிரங்குந்தாய்போல் கடாக்ஷமாய்க்கனிவுகூர்ந்து *
இன்றுங்கட்கிரண்டுபுத்திர ரீய்ந்திட்டோமென்றுமவாழ்வீர் *
சென்றிடுமனைக்கென்றேதான் றெய்வகன்னியர்போனாரே *

## அங்குலன்விருத்தம்.

பொன்பணிக்கன்னிமார்கள் புகழ்பெறவரமளித்தார் ... *
தென்புடன்விளங்குநல்ல சிறுகுடிசையினுற்றேதான் ... *
அன்பினுக்கிசைந்தவெந்த னரிவையேகொடிச்சிமாதே ... *
இன்பசையோகஞ்செய்ய விருவரின்றிணங்குவோமே ... *

தரு - இராகம் - கண்டா - அடதாளசாப்பு.

அங்குலன்சொல்.

அன்னமேஅதிரூப மின்னரசேயின்று அணையவுமிதுசரியே
மயல்மீறுது குணமாய்பஞ்சணையேறியே (க)

கொடிச்சிசொல்.

மன்னவிரசர்கொண்டேனென்னைமகிழ்வுடனேமந்தைத்திலேமேவியே
சுகமாகக் கொஞ்சுவாயுடன்நாவியே (௨)

அங்குலன்சொல்.

கிளிபோலவேபேசுங்கெளிவானஅமிர்தமேகிட்டவந்தொருமுத்தந்தா
யின்பமாகக் கட்டிச்சேர்த்தொருமுத்தந்தா (௩)

கொடிச்சிசொல்.

ஒளிவானகுடில்தனில் நளினவசனம்பேசி உற்றவனேவோம்ராஜனே
பலம்பெற்ற விற்றரித்திடும்வேசனே (௪)

அங்குலன்சொல்

இங்கிதமேகூறிச் செங்கரத்தாம்கட்டி என்றனையேஆளவாய்
எழிலுடன் விந்தைதபலசுமுணர்வாய் (௫)

கொடிச்சிசொல்.

அங்குலனேயிங்கே மங்களமாய்ப்போகம் அன்புடனேவிளைப்பாய்
ஆசைதிரும் தென்புடனேயழைப்பாய் (௬)

அங்குலன்சொல்.

கூடினேனெழிலுடன் வேடிக்கையமேகாலந்தைதனிற்றபெண்ணே
சுதனைப்பெற்றுத் தாலத்திலவாழ்வாய்கண்ணே (௭)

கொடிச்சிசொல்.

நாடிநாமிருவரும்வாட்டமலேசேர்ந்தோம் நற்புத்திரனைப்பெறுவேன்
விளையாடசு சற்புத்திரனைத்தருவேன் (௮)

அங்குலன் வசனம்.

அடிஎன்பிராணநாயகி அதிகசந்தோஷம் அதிகசந்தோஷம்.

## கொடிச்சி விருத்தம்.

போனபின்கன்னிமார்கள் புத்தமானதுமொரித் ... ... *
தானுமேபத்துமாதஞ் சரியாமுடிந்ததிந்தக் ... ... *
கானகந்தன்னிலின்று கருப்பவேதனைக்குள்ளானேன் ... *
நானினியென்னசெய்வே னம்பினைகாண்கிலேனே ... *

தரு - இராகம் - கெண்டா - திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

அங்கமொன்றையோவாடுது விப்போ நாயாசாற மேலாடுது
செங்கையிரண்டிடம்வாடுது என்றன் திருவிழிமைமூடுது (௧)
அடிவயிர்வலிக்குது வெகு அருவியெனுநீர்சோருது
வடிவுடன்வாய்நீருரூது செவி வந்தடைப்புமேசேருது (௨)
அன்னையிரண்டும்முட்டுது மெல்ல வடிவைத்தாற்படிதட்டுது
துள்ளியேயென்னையாட்டுது முந்தி நக்கமதுமேல்க்காட்டுது()



சோலியதுதான்பாவிதுயென்றன் தடியிடையுமேபோயிது
சேரவேதொண்டைகாயிதுயென்றன்சென்னிருங்கனத்தோயிது
பனிக்குடமுந்தான்காணுது சாய்ந்து படுக்கமனமேகோணுது
தொலித்தழுகவேநாணுதுமிகச் சோபதாபமேபூணுது (௫)
விட்டிமூலைப்பால்கொள்ளுதேசேர்ந்தமீயிப்பெருகித்தள்ளுதே
கம்மிக்குரனும்விள்ளுதே வருத்தநகாணகண்ணீர்தள்ளுதே)

கொடிச்சி வசனம்.

என்செய்வேன்விதியே, என்செய்வேன்விதியே.

## மருத்துவச்சிவரவு விருத்தம்.

உரைத்துவேதனைபொறும ஞுள்ளமுகொந்தவாடி... ... *
வெறுத்தவளானசெல்லாம விட்டுமேயங்குமுன்னே ... *
முறைத்தொழிலதவறிடாமல் மூவுலகோனைக்கார்த்த ... *
மருத்துவக்கிழவிதானும் வந்துமுன்றோன்றினளே ... *

தரு - இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்.

பல்லவி.

கிழவிவந்தாளே மருத்துவக் கிழவிவந்தாளே

அனுபல்லவி.

கிழவிவந்தனள் கிருபை பொங்கியே
குழவிபோல்முலை குழையத் தொங்கியே (கிழவி)

சரணங்கள்.

தலைநரைத்தவள் தடிபிடித்தவள்
முலைபெருத்தவள் முகம்வெளுத்தவள் (கிழவி)
காலுமநடுங்கிட கணணுமழுங்கிட
மேலுஞ்சுருங்கிட மேற்பல்விழுந்திட (கிழவி)
வேதனையாங்கர்ப்ப மியமேோயற்பம்
சாதனையாயொப்பச் சாந்தமிகச்செப்பக் (கிழவி)

மருத்துவச்சி வசனம்.

அடவியிலொருகுடிசைகட்டிப புருடனுடன் வாழ்ந்து புத்திரனைவயிற் றடக்கிக்கத்தியேன் புலம்புகிறாயடி பெண்ணே. பேத்தி.

கொடிச்சி வசனம்.

பாட்டி நானென்று மறியாதவ னென்வயிறேனோ பருத்துமெத்தவும் வலியுண்டாகிறது வாய்பேசக்கூட வில்லை பாரடியம்மா காரடியம்மா.

கிழவிசொல் வசனம்.

அடி பேத்தி அசையாமலிரு சும்மாவிம்மியழாதே சற்றுநேரத்திற் சவுக்கியம் பண்ணுகிறேன் புத்திரனைபெறுவாயம்மாபேத்தி.

## கொடிச்சி கவி.

அழுகிறேனிப்பொ தியானபொறுக்காமற் ... ... ... *
தொழுகிறேனுனையெனைச் சுகப்படுத்திடுவாய்... ... ... *

கிழவிசொல் வசனம்.

குழந்தையானது வனத்தைப்பார்த்து உதட்டைக்கடித்துத் தெய்வங்களைத் தொழுது பிறந்தது உனக்கும் உன்புருடனுக்கு மிகவும் நல்லதடி பேத்தி.

அங்குலன்சொல் வசனம்.

பாட்டீ இந்தக்குழந்தைக்கு நீயேபெயரிடவேணும்.

கிழவிசொல் வசனம்.

அங்குலனென்று பெயரிட்டேனப்பா அங்குலவேடா.

## கொடிச்சி விருத்தம்.

சித்திரம்போலேநல்ல சிறுவனைப்பெற்றெடுத்தேன் ... *
அத்தமஞ்சனநீராட்டியணையாடைச் சீலைபோர்த்தி ... *
வித்தாரமாகப்பொட்டுவிளங்க நெற்றியிலேயிட்டுச் ... *
சற்றேதொட்டிலிலே போட்டுத்தாலாட்டுசொற்றுவேனே... *

தரு - இராகம் - கமாசு - அடதாளம்.

பல்லவி.

இராரிரரி ரரராரோ - ரரராரோ ரரிரரி - ரரராரோ

அநுபல்லவி.

சீர்வளரப்பெற்றெடுத்த வென்னுடையதிரவியமே சித்திரமே
பேர்புகழவந்துமையும் காநின்ற பேரர்சே ரத்தினமே (இராரி)

சரணங்கள்.

நித்திரைபோயித்திரைபோதங்கைகட்டுஞ்சித்திரப்பொற்றொட்டிலிலே
பெற்றவளுந்தாலாட்டுறேன் பெரும்புவியிற்சற்றுதுயில்தொட்டிலிலே
வில்வவனக்காவிலே சுந்தரமாவிற்றிருக்கும் ஆணிமுத்தே
செல்வனெனவந்துதித்த வென்றனிடதிருவயிற்றில் வந்தவித்தே ()
குஞ்சரமேயஞ்சுகமே வனந்தனில்வாழ் கோகிலமயிலினமே
மஞ்சனெனவென்முன்வரக் காணுநின்ற மானினமேதேனினமே ()
ஊழிவபற்றுதித்த சூரியனொளிமறைத்தகாவினமே
பிரியமுகாகடா விந்தாரத் திரவியமேபூவினமே (இராரி)
தொட்டிலைவிட்டுத் துள்ளிப்புவியிசை சுந்தரமுடன்வருவாய்
எட்டியடிநடந்து என்றனுக்கு இனித்தமுத்தந்தருவாய் (இராரி)

## பொது விருத்தம்.

என்றுதாலாட்டியின்று இருக்கின்றகாளிற்றுனே ... ... *
நன்றுடன்பின்போர்பாலன் நலமுடன்பெற்றுவாழ்ந்தாள்... *
ஒன்றுடன்மூன்றுமட்டும் ஒருபிள்ளைமற்றொருபிள்ளை ... *
மன்றினில்வயதுஐந்தும் வந்ததுபாலர்கட்கே ... ... *



பொது வசனம்.

மூத்தகுழந்தைக்கு ஐந்துவயதும் இளையகுழந்தைக்கு நாலுவயதுமாக மங்குலனென்னும் பெயரிட்டு வளர்ந்துவருகிறநாளி லோர்நாள் அங்குலன் தன் குழந்தைகட்குக் குலாசாரப்படிக்கு வில்வித்தை கற்பிக்கிறவிதங்காண்க.

## அங்குலன் - விருத்தம்.

மடிமீதுமார்மீதுதோள்மீதுவிளையாடி வந்துதித்திடுபுதல்வரே *
படிமீதுமிருகமும்பறவைசத்துருமுதற்பலங்கொண்டெழுந்துவரினும்
பொடியாகிவிண்மேவிமண்ணிற்கிடந்துருள புகழேசிறக்கவென்றும்
வடிவானவிற்றொழில்கற்பீர்கள்செப்புவேன் வளரங்குலந்தழையவே

தரு - இராகம் - பிலஹரி - அடதாளம்

பல்லவி.

சொல்கிறேன்கேளும் வில்வித்தையைச் சொல்கிறேன்கேளும்

அநுபல்லவி

சொல்கிறேன்கேளும் சுகம்பெறவேநாளும்
செல்வரேநீரும் சிலைதருவேன்சூழும் (சொல்)

சரணங்கள்.

இரண்டுவில்லிக்காருங்கள்நாணைப்பூட்டித்திரண்டபாணங்கோருங்கள்
உருண்டவிழியாற்பாருங்கள் குறிநோக்கம் பிரண்டிடாதுட்காருங்கள்
இருக்கும்வில்லிடக்கையுந் தெறித்திடவலச்செய்யுஞ்
சாக்கூண்டுந்தோள்வையும் மூதுக்கமாய்த்தானெய்யும் (சொல்)
நாணைப்பூட்டும்போதும் அப்போதுடன் பணந்திட்டும்போதும்
பூணைச்சூட்டும்போதும் மிருகத்தின்மேல் ஊனநாட்டும்போதும்
ஓங்காரிரீங்காரி ஓடிவாவாவீரி
நீங்காதேயெனக்கூறி நிறைப்பிறேசரமாரி (சொல்)
வில்வளைத்திட்டார்த்துக் குதைகளை வல்லமையாய்க்கோர்த்து
மெல்லவேதோள்சேர்த்துச் செவிசேரச் செல்லவேதான்பார்த்து
சிறக்குமிருகங்கள் பறக்கும்பறவைகள்
இறக்குந்தப்பாதுகள் உறக்கிடும்வாளிகள் (சொல்)
மண்டியிப்படியிடுங்கள் கால்மாறிக் கொண்டுகண்டேவிடுங்கள்
ஒண்டிஒளிந்துதடுங்கள் ஒளிவைத்து அண்டிமுன்னேதொடுங்கள்
அறிந்ததைநான்சொன்னேன் தெரிந்துகொள்வீர்முன்னே
பொருந்திவாழ்வீர்பின்னே சிறந்தொளிரென்பொன்னே (சொ)

அங்குலன் வசனம்.

அடாபிள்ளைகளே உங்களுக்கு வில்வித்தைகற்பித்தேன் நீங்கள் சுகமாக வாழுங்கள்குழந்தைகளே.

## புத்திரர் விருத்தம்.

வயதநுபத்துமாகி வரிசிலைநாலுங்கற்று ... ... *
நயம்பெருகாவிற்புக்கு நனிவேட்டைகளுமாடிப் ... *
பயமதுவில்லாமற்றான் பன்றிமானதுகளைத்து ... *
செயமுடன்வருகவின்சொற் செப்புவீரெமக்குத்தாளே *

தரு - இராகம் - அசாவேரி - அடதாளம்.
கண்ணிகள்.

வந்தோம்சிறுவரு முன்பதம்போற்றினோம் தந்தையே நீவீர்
வரிசிலைவாளியும் பிரியமாய்த்தாருமென் றந்தையே (௧)
சிந்தைமகிழ்ந்துன் சிறுவனாக்காருமென் றந்தையே புலி
சீறும்வரய்கட்டிட மந்திரஞ்சொல்லுமென் றந்தையே (௨)
மலையானைகைவச மாகமந்திரஞ்சொல்லுந் தந்தையே இப்போ
மாவனக்கட்டிடு மந்திரஞ்சொல்லுமென் றந்தையே (௩)
இயல்பாகவலைதனை இனிக்கட்டவகைசொல்லுந் தந்தையே உம
தினியவாக்கெங்கட்குக் கனிவுடன்றருமென் றந்தையே (௪)

அங்குலன் வசனம்.

வரம்பெற்ற அம்பும்வில்லும் சக்கரம் வளைதடி பிண்டிபாலம் ஈட்டி முதலான ஆயுதங்களுங்கொடுத்தேன் பெற்றுக்கொள்ளுமென் பிள்ளைகளே.

## அங்குலன்வரவு விருத்தம்.

அலிந்திடக்கேளுமங்கையேசிறுவம் கறிவுகூர்ந்திருகுடிசையிலே *
திருந்தியமானுமுயல்மயில்கோழி செழுத்திடுமிவ்வனந்தனிலே *
சிறந்திடும்புயத்தைத்தட்டிக்கைகொட்டிச் சிரித்தொருலாகுதானிட்டு
விரைந்திதிகடைத்திற்பிடித்திங்குகொண்டுவேட்டைகளாடியேவருவே [ன்

தரு - இராகம் - கும்பகாம்போதி - ஆதிதாளம்.
பல்லவி

வேட்டையாடவாறேனான் வல்ல
வேடனங்குலதீரன் செல்ல (வேட்)

அநுபல்லவி.

நாட்டமாய்ச்சல்லடமுந்தொட்டு நல்லகச்சையும்வரிந்துவிட்டுத்
தேட்டமுடன் காட்டைக்கட்டுஞ்
சிறுவலையென் றேளில்ப்போட்டு (வேட்)

சரணங்கள்.

பன்றிபுல்வாய்முயல்வருகிது பாரின்மயில்விசைபெருகுது
கன்றுடனேமான்மிகுது கண்டபக்ஷிகள்கொக்குருகுது
கண்ணுற்றுக்கண்டது கதறியேயோடிடும்
மண்மேனின்றது மறைவாய்ச்சாடிடும் (வேட்)



வில்லதிலேநாணைப்பூட்டி நீட்டும்மம்பைத்திட்டிநாட்டிச்
செல்லும்போதேசினமுன்காட்டிச் சீறியகுறலுங்கூட்டி
சினத்திலேயொரு லாகநுலாகிக்
களத்திடும்மலை யோரமேயேகி (வேட்)
புனத்திலுள்ளபுதர்க்குள்வல்ல புலிக்குட்டிபோனுழைந்துசெல்லக்
களத்தமிருகம்வரவுசொல்லக் கறுத்தநாய்கள்காலிற்கல்ல
காலனைப்போலவே கையிற்சக்கரம்பற்றி
வேலும்பிடித்துக்காட்டை மின்னிட்டிலேசுற்றி (வேட்)

அங்குலன்சொல் வசனம்.

அடியென்பிரியமுள்ள பத்தினி நான் வேட்டைக்குப்போய் வருகிறேன் புத்திரரும் நீயுங் குடிசையிற்றானே யிருங்கள்.

கங்குலன் வசனம்.

நானும்வருகிறேனென்னையனே.

மங்குலன் வசனம்.

யானும்வருகிறேனையாவே.

## பொது விருத்தம்.

முயல்பன்றிமான்புல்வாய்கள் மூர்க்கமாய்க்கடமானும் ... *
மயில்புறாக்கிளிகள்காடை மந்திபுங்கோழிகொக்குக ... *
கயல்விழியுறட்டிப்பார்த்துக் கலந்தொருமுகமாய்க்கூடி ... *
பயிலுடன்றங்கள்பாஷை பகர்ந்துதான்வந்ததின்றே ... *

தரு - இராகம் - காகரப்பிரியா - ஆதிதாளம்.
பல்லவி.

மிருகம்வந்ததே - அனேக - மிருகம்வந்ததே

அநுபல்லவி.

மிருகம்பெருக விறசிக்குறுக
வருகவருக வாலுமுறுக (மிருகம்)

சரணங்கள்.

புதருள்ளிருந்து புவியிற்சிறந்து
கதறிப்பறந்து கண்ணைத்துறந்து (மிருகம்)
ஓடும்யாவு முயரத்தாவும்
ஆடிமேவு மருந்திக்கூவும் (மிருகம்)
பல்லைக்காட்டிப் பளத்தைமுட்டி
புல்லைத்திட்டிப் புனத்தைத்தாட்டி (மிருகம்)
குட்டிகூடக் குதித்துச்சாட
விட்டுஓட வேட்டை (மிருகம்)

பொறு வசனம்.

வேடன்வேட்டையாட மாசியமாபக்ஷம் கூடியபகல் சிவன்ராத்திரியிலே மிருகம் பறவைகள் நெருங்கிச்சாடிலாகிக் காணைகட்டுத் தழைபு சருகு பழங்களை யென்றுநின்று முன்னாக வோடிவந்ததென்றறிக.

வேடன் வசனம்.

ஆ - ஆ மிருகம் பறவைகளே ஒவ்வொருவரின்மா யொன்றுபட்டு என்முன்னு லதிகசீக்கிரத்தில்வந்து நிற்கிறீர்கள் அதைக்கண்டுகொண்சல்லடைந்தொட்டுக் கச்சைவரிந்துகட்டித் தலையில் கொம்பிறகு குல்லாய்ப்பூட்டி வலைதடிசக்கரம் சூலாயுதம் அரிவாள் அம்புவில்லும் எடுத்துக்கொண்டேன் இனியொருக்ஷணத்தில் என்சாமர்த்தியத்தினால் உங்களைக்கொன்று குடிசைக்குக் கொண்டுபோகிறேன் பாருங்கள்.

## அங்குலன் விருத்தம்.

குலைவைமிட்டொய்களையான் கூவக்கேட்டுக் ... ... *
கோடைமிடிபோல்வரு குறல்கள்போட்டு ... ... *
அலரிடவும்மானினங்க ளெல்லாமோட ... ... *
வங்கணத்திற்கைத்தடியை விசரிப்போட ... ... *
விலங்கிமிருகங்களெல்லாம் வெருவிப்பார்க்க ... ... *
விரைவுடனேயென்முகத்தி லரும்பிவேர்க்க ... ... *
நிலமதனிலொன்றுதவ ருமற்கொன்று ... ... *
நெருக்குவேன்வலைதடியால் நொறுக்குவேனே ... ... *

தரு - இராகம் - மணிரங்கு - ஆதிதாளம்.

கண்ணிகள்.

எரியவலைதடியை யெடுத்துளனூசையால்
பிடிப்பேன் பல்லைக்கடிப்பேன் தேகம்
எங்குமனமுமிகத் தாக்ஷவின்னில்மனிட்டுப்போர்த்திட்டேன்
எங்குஞ் சார்ந்திட்டேன் (க)
ஆனைசிங்கம்கரும் யாளிபுலிகள்மிகு வனத்திலே
என் சினத்திலே மெத்த
அலைந்தவன்பிமாறு மடங்கிக்கிடப்பதனை எழுப்பினேன்
மிதித் தளப்பினேன் (உ)
முடுகிவருவதனை முண்டுசண்டிமுயன்றி மானுமே
முயல் தானுமே வது
முக்கிச்செடிகள் முழித்தக்கப்புதர்தனி லோடிட
யானுஞ் சாடிட (ங)
நாடிச்சிலையெடுத்து நாணைப்பூட்டிவாளி நாட்டினேன்
குறி காட்டினேன் பின்பு
நடித்துத்தோள்புள நல்லவப்பெடுத்துத் தெறித்திட்டேன்
தப்பச் சிரித்திட்டேன் (ச)



அங்குலன் வசனம்.

ஓ மிருகங்களே யான்விட்டபாணங்கட்குத் தப்பினீர்களல்லவா இனிப்பாருங்கள்.

## வேடன் விருத்தம்.

விட்டபாணம்படாமல் விலகியப்பாலேயோடத் ... ... *
திட்டமாய்நீயென்றன் கண்முன்னே திரியக்கண்டேன் ... *
பொட்டெனக்கைவிழ்க்க புறண்டிடப்புலியின்மீதே ... *
சட்டமாயொளியுனின்று சதிரிற்கொல்லுவேனே ... *

தரு - இராகம் - தாரவங்கி - ஆதிதாளம்

கண்ணிகள்.

புலிகாடியானைவருமுன் தழைபிடுங்கிப்
போர்த்தியோர்மரத்தை யடிப்பேன்
வலியுடையபன்றிமான்புலிவாய் வருவதன்முன்
வாளிதனையேவி விடுப்பேன் (க)
ஏவினதோர்வாளிபடுமுன் ஓனங்களின்மெய்
யெரிந்துடல்சரிந்துவிழவும்
தாவிவருமானசுரினமும் மட்டுப்பலதைத்து
தரணிதனில்நின்று அழவும் (உ)
ஒளிந்துவிட்டவாளியும்போச்சே விருதாவிலென்
உள்ளமுழுதுமிரைகுதே
தழைத்தவனத்தன்னை நோக்கியே மிருகமெல்லாஞ்
சாரிசாரியாகப் போகுதே (ங)
என்னசித்துவென்னமாயமோ விளங்குகளும்
இடமும்வலஞ்சுற்றி வருகுதே
சின்னபின்னமாகச்சிதைத்தே கொல்லாமல்விட்டால்
சிலையெடுத்துமென்ன பெரிதே (ச)

அங்குலன் வசனம்.

ஓ - ஓ - ஆ - ஆ - பாணமெடுத்துப்பூட்டி ஒளிமறைவிலிருந்து பிரயோகித்தும் மிருகம் பறவைகளின்மீதுபடாமற் போய்விட்டதல்லவா பிரசந்நூடன்விளங்குமெனாதுசக்கரத்தினாலுங்களை துண்டுதுண்டாக அறுக்கிறேன் பாருங்கள்.

## அங்குலன் விருத்தம்.

கொக்குக்காடை குலைகுலைந்தேவிழ ... ... ... ... *
மிக்கமான்மரை மேதினிமேலழக் ... ... ... ... *
தைக்கும்புக்கையாமல கன்றதா ... ... ... ... *
சக்கரம்விட்டுத் தானின்றறுப்பனே ... ... ... ... *

தரு - இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்.

பல்லவி.

சக்கரத்திச்சென்றுவெடிப்பேன் மிருகமெல்லாஞ்
சிக்கவேயிக்கணம் விடுப்பேன்

அநுபல்லவி.

செக்கர்வானங்கள்போலச் சிரமுன்விழவுருக்க
தொக்கவுதனைவாட்டி யொருநொடியின்வழுக்க (சக்கரம்)

சரணங்கள்.

எனக்கின்றதைக்கக்கவே கூட்டமாய்க்கூடும்
மானைக்கன்றுதாக்கவே
கானிற்புல்வாய்நிற்கவே கனத்தமதத்த
யானைக்கூட்டங்கள் வெட்கவே
அலரியேபுலிசாடி படவிழுமின்விழவே
பலமானகரடிகள் பதைத்துடல்மாளவே (சக்கரம்)

மூபல்வரையாடிடக் காடைகள்புறாக்
குயில்கவுதாரிகெட
மயில்கிளியாந்தையுட னெழில்கோழி
கயல்களுங்கொவிட
கண்டுவிண்ணவர்குழாங் கூட்டத்துமின்பாயவும்
அண்டமுகடுங்கூடவதிக்குடன்சாயவும் (சக்கரம்)

தைசவிக்காமல்விடுத்து ஞாயிறாமாய்க்
கொய்தவை யெல்லாமெடுத்து
உய்யக்குடில்மூன்னடுத்துப்பெண்டீர்பிள்ளை
மெய்யாய்த்தின்றிடக்கொடுத்து
விடுவேலவிடிபோலவே வெஞ்சினத்தாற்பற்றித்
திடமாய்ப்பலங்கொண்டு செய்வளைதடுத்தேசுற்றி (சக்கரம்)

அங்குலன் வசனம்

சரி - சரி - பளா - பளா - நன்றாயிருக்கிறது; இப்போது விட்டசக்கரமானது இந்தமிருகங்களினுடைய உடல்களையறுக்காமல் மேல்கீழாயோடிப்போய் விட்டதல்லவா நல்லதிருக்கட்டும் என்கைவளைதடியினாலே கொல்லுகிறேன்.

## அங்குலன் விருத்தம்.

எறிந்தசக்கரந்தான்சென்று இருகூறிடாமற்போன ... ... *
தறிந்தந்தமிருகமெல்லா மடவியிலாடுநிற்பார் ... ... *
பறந்திடும்பறவையாவி பதைத்துடல்படியின்வீழ்ந்து ... *
கறந்திடச்செய்வேனென்றன் கைவளைதடியிற்றானே ... *



தரு - இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

பல்லவி.

வளைதடிதன்னாலடிக்கிறேன் குறிகுறித்து வளைதடிதன்னாலடிக்கிறேன்

அநுபல்லவி.

வளைதடிதன்னாலடிக்கக் கிளைபுடனுடல்துடிக்க
விளைகுருதியைப்பிடிக்கக் களையகலநான்குடிக்க (வளை)

சரணங்கள்.

வந்துவெகுநேரமாகுதே திக்குகள்தோறுஞ்
சுற்றியோடிக்கால்கள்நோகுதே
சிந்தையொருவகையாகுதே தடிசுற்றிக்கைச்
சந்துகள்குடைச்சலாகுதே
சாரமாகவதிலின்று மீறியேபுதருட்சென்று
ஊறியேமிருகக்கன்று பாரிலவிளையாடக்கொன்று (வளை)

குன்றின்மேலேறியேசிலது கூவிக்கூவி
நின்றுபுலியாயுஞ்சிலது
ஒன்றுடனொடுஞ்சிலது பழங்காய்களைத்
தின்றதுகூடியேசிலது
விரும்பிச்சிலபுல்லைமேய குறும்புடன்றழையையாயத்
திருட்புழன்மண்டைகள்சாய கரும்புபோல்யான்தின்றுதைய()

ஆடியேதன்பல்லைக்காட்டுதே ஓன்றொன்றுக்குச்
சாடியேபின்வாலையாட்டுதே
கூடியேகுலவைமூட்டுதே வளைத்துசுத்தி
யோடியேமுன்றலைநீட்டுதே
ஓகோமுகத்தைத்தேச்சு வாகாய்நாடிவந்தாச்சு
யேகாதென்விட்டுப்போச்சு ஆகாபொழுதுமாச்சு (வளை)

வசனம்.

ஓ மிருகங்களே யானுங்கள்மீதில்விட்ட வளைதடியுந் தப்பிப்போயிற்றல்லவா நல்லதிருக்கட்டும் இக்ஷணத்திலுங்களைப் பக்ஷித்துவிடுகிறேன் பொறுங்கள்.

## அங்குலன் விருத்தம்.

மானுடன்புல்வாயென மாளாமல்மறைந்தேயோட ... ... *
நானுமவ்வனத்தைவிட்டு நற்கணைதடிகையேந்திப் ... ... *
போனதோர்வழியைப்பற்றிப் புதைவிரிவலைகளூட்டிக் ... *
கானகந்தனிலிருக்குங் கல்களைவெகுட்டுவேனே ... ... *

தரு - இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

வலைபெடுத்துத்தோளிலேபோட்டு மார்க்கமாகவே நானும்
வந்தும்வேட்டைவாய்த்திடாமற் சிந்தையும்நொந்தேன்
சிலையும்வளையுந்தடியு மம்புஞ்செம்மையிற்கொண்டு நானுந்
தெற்குத்திசையின் இயமனைப்போலுக்கிரமாய்வந்தேன் (௧)

வீச்சறுவாள்தனை யெடுத்துவிரைவதாகவே யானும்
வேண்டியபொருளொன்றை வெட்டிக்கொண்டியேசட்டி
பாச்சியேமிலத்திற்குத்திப் பலமதாகவே யான்
பறத்தவலைகள்தனை யெடுத்துடனறுத்துடன்னவட்டி (௨)

பறவலையாக்கண்ணிக்குள்ளே பன்றிமான்களும் மெத்தப்
பாக்குடனேயோடிவந்து தாக்கிச்சாருமே
விரிவலையோர்பக்க மதனில்விழும்படியேகட்டி யானும்
விழச்செய்குவேன்முயலு மானும்வாழ்வுபோகவே (௩)

புதைவலைகளைவழிகள்தோறும்புதைத்துமேபோட்டேன் அப்போ
புலவாயவனாரின் ஆடுகளையுங் கொல்லுங்கறுத்தநாய்
கதைவனையாக்கடி யெடுத்துக்கண்பிடிபட்டுமுன் இந்தக்
கானகத்திலேநுழைகுமன் யானென்றுதன்றுப் (௪)

இண்டம்புதர்கள்குரிப்புதர்கள் இலங்கைநாயின்புதர் பின்னும்
ஏலப்புதர்கள்சங்கம்புதர்கள் சோலையையொடித்து
சுண்டைப்புதர்கள்பிரப்பம்புதர்க ளடங்கள்தோறும் ஓடித்
துலக்குடனேதடியைவீசிப் பிலக்கவேயடித்து (௫)

அடித்துவிட்டாய்கொண்டிடுவ மருக்கிடுவேனவ்வாற யப்போ
வல்லலில்கொண்டியாளையின்மேல் மெல்லவிருந்தேன்
கொடிச்சியுங்குழந்தைகளுங் குலைந்தழுவாரே யானுங்
கொண்டவிளைத்துபோயிலை மண்டியிளைத்தேன் (௬)

புனத்தையொருபொழுதளவும் புகுந்துசுற்றியே வாடிப்
பொங்கியேகுலைவைவிட்டு மெய்குத்திரிந்தேன்
சினத்துடன்புதற்களையான் றிறத்துடன்றட்டி யெங்குஞ்
சென்றலைந்தலைந்துவாடி மிகவுமயிர்த்தேன் (௭)

பொருள் வசனம்.

வேட்டுவன் மிருகங்களின்மீது அம்புமுதலான வாயுதங்களைப் பிரயோகிக்க வநாகட்குப் படாமற் றப்பிப்போனதாலப்போதவனக்கானகத்தைச் சுற்றிலும் வலைகளைகட்டிப் புதர்கள்தோறுந்தடிகொண்டடித்துக் கலக்குஞ்சமயத்திலொருபுதற்குள்ளிருந்து மிருந்தஆக்ரோஷத்துடன் பதினெட்டுவேங்கைப் புலி யொன்றுவந்தவிதங்காண்க.



புலிவருகிற விருத்தம்.

வாடியேமெலிந்துநொந்து வலைதடிகையிலேந்தி ... ... *
நீடியவனக்கடோறு மின்றிமிம்புதரைமோதி ... ... *
யாடியேதிரியும்போது ஆக்ரமித்தலறிக்கொண்டு ... ... *
சாடிமுன்வந்ததங்கே சமர்த்துடன்வேங்கைதானே ... *

தரு - இராகம் - ஆகிரி - ஆதிதாளம்

பல்லவி.

வேங்கையும்வந்ததுவே சினங்கொண்டு வேங்கையும்வந்ததுவே

அநுபல்லவி

வேங்கையும்வந்தது விண்ணடிபோலவே
ஹுங்காரமாகவே யலறிமுன்சாலவே (வேங்)

சரணங்கள்.

இருவிழிசெவிசிரமும் நாறும்வாய் இருகியபல்லுறமும்
சிறுவயிர்நெஞ்சுமும் கழுத்துநீண் டொருமலைபோற்புறமும்
சரசமென்றுறியே தடவரையேறியே
விரகடன்சீறியே வீரியமீறியே (வேங்)

வந்தநும்லைபறுவாய் தனிலது பந்துபோலுருவாய்
முந்துவாலசெறுவாய் கால்நகங் கொந்துநகொலைகுருவாய்
சிந்துநுகொடிகளும் சிதறுநுசெடிகளும்
பிந்துது அடிகளும் பிறளவேமுடிகளும் (வேங்)

தடியுடன்முன்செறுத்துப் பாய்ந்திடப்படிமிசைதாழ்ந்தொறுத்துப்
பொடிபடுத்திடப்பொறுத்துப் பதுங்கியே வடிவுளகண்கறுத்து
செடிகளின்சாடப்புன் செயல்களுக்காகத்தன்
கொடியவனங்களிற் குலவியவேடன்முன் (வேங்)

அங்குலன் விருத்தம்.

வேங்கையென்னருகில்வந்து விழிப்பொறிசிந்தநோக்க ... *
யேங்கியேயுள்ளநொந்து இருவிழியிலும்நீர்சோரத் ... ... *
தாங்கியவில்லமெல்லாந் தரணியிலெறிந்துவிட்டு ... ... *
ஓங்கியவில்வமேறி யுயிர்பிழைத்திருக்கலுற்றேன் ... ... *

தரு - இராகம் - மாஞ்சி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

வில்வமரத்தின்மீதிலேறினேன் என்செய்வேனினி
வேதனைக்கிட மென்றுகூறினேன்
கல்மனங்களுங்கலங்கத்தாழினேன் என்செய்வேனினி
கைக்கொம்பேதுணை யென்றுநேரினேன் (௧)

அம்புவில்களுங்கையிலேயில்லையே என்செய்வேனினி
அலறுதேபுலி போகவில்லையே
வம்பிப்படிக்குக்கண்டதில்லையே என்செய்வேனினி
வாடுதென்மனந் துணிவுவல்லையே (௨)

புலம்பிப்புலம்பித்தொண்டைபெருக்குதே என்செய்வேனினி
புலியும்மரத்தின் கீழேயிருக்குதே
நலம்பெறும்வழியேதென்றுறுக்குதே என்செய்வேனினி
நாடியிடமெல்லாமுள் நெருக்குதே (௩)

இரத்தங்கொப்பளித்தெழுந்து சோருதே என்செய்வேனினி
என்கைகால்க ளடிக்கமீறுதே
பித்தனைப்போற்பிதற்றல்சாருதே என்செய்வேனினி
பேசவாயில்லைப்பலமும்மாறுதே (௪)

இருக்கத்தகாதஇடமிதாச்சுதே என்செய்வேனினி
எனக்குத்துயரம் கணக்காயாச்சுதே
நெருக்கிமுள்கள் நிறையப்பாய்ச்சுதே என்செய்வேனினி
நீண்டவுடலும் புண்ணாபோச்சுதே (௫)

குருதிசோருதேகூட்டிப்பிடித்திட்டால் என்செய்வேனினி
கூசுதேமேனி குழைகளடித்திட்டால்
இறுதிகாலம்போலிருக்கு நிறுத்திட்டால் என்செய்வேனினி
யெவருமில்லையேயாளுந் துடித்திட்டால் (௬)

பெண்டுபிள்ளைகள் கூடியழுகுமே என்செய்வேனினி
பேதைப்புத்தியால் மோதிவிழுகுமே
விண்டுவிழிகணீர்களொழுகுமே என்செய்வேனினி
வேண்டியேயென்னை விரும்பித்தொழுகுமே (௭)

சோம்பல்நாக்கத்துள்ளித்தள்ளுமே என்செய்வேனினி
அடித்துவென்னைக் கடித்துக்கொள்ளுமே
தேம்பியழுகமனமுந்துள்ளுமே என்செய்வேனினி
சிறந்தவடக்குக்கொப்பி னுள்ளுமே (௮)



இருக்குந்தழைகளதனைப்பறித்திட்டேன் என்செய்வேனினி
என்றுசொல்லிக்கொண் டேயிப்பறித்திட்டேன்
பெருக்கமாய்த்தெற்கேயேறிப்பறித்திட்டேன் என்செய்வேனினி
பேணித்தழைகீழ்விழப் பறித்திட்டேன் (௯)

கிழக்குத்திசைக்கொம்பிலேயைப்பறித்திட்டேன் என்செய்வேனினி
கீழேதழைகள் வீழப்பறித்திட்டேன்
தழைக்குமேற்றிசைக்கொம்பைப்பறித்திட்டேன் என்செய்வேனினி
தழைந்ததழைகள் யாவும்பறித்திட்டேன் (௰)

சாமம்நாலுக்குஞ்சரியாய்ப்பறித்திட்டேன் என்செய்வேனினி
தழையில்லாமற்குழையைப்பறித்திட்டேன்
சோமன்மறையும்வரையிற்பறித்திட்டேன் என்செய்வேனினி
சூரியகிரணந் துலங்கப்பறித்திட்டேன் (௰௧)

பொது விருத்தம்,

சூரியன்றோற்றுதலுங்கிடேயவும் தோன்றியவில்வமரத்தி ... ன
லேறியேயிருந்தவங்குலவேடனிராவிழித்திலைபறித்திடலால் ... *
நாரிபாகனுமோரிலிங்கமதாகநாட்டமாய் வேறடியிருந்தார் ... *
வீரியமாகத்துடர்ந்திடும்வேங்கைமெய்ப்பசுவாகநின்றதுவே ... *

தரு - இராகம் - புன்னாகதோடி - ஆதிதாளம்.

பல்லவி.

புலியும்போச்சுதே பசுத் தலமிதாச்சுதே

அநுபல்லவி.

இலைபறித்திரா விழித்தெறிந்திடப் (புலி)
திருக்கவிரதம் பொருந்திப்பேணும
வழிந்தவ்வழியைச் சிறந்துகாணுமுன் (புலி)

விந்தையாகவே முந்தியேசெய்த
சுந்தரப்பூசை வந்ததாலுய்ய (புலி)

கூவிளமரந்தாவிக கரங்கள்
பாவிவேடன் பூவிலிரங்கப் (புலி)

பொது வசனம்.

அங்குலவேடனானவன் தனதுவருயுதங்களாலும் வலைகளாலுமிருகம்பட்சிகளைப்பிடிக்க வெத்தனிக்கவதற்கு அதுகளகப்படாமலோடவும்அப்பொழுதவனை தடியையெடுத்துக்கொண்டு ஒருவனுகப் புதர்களை மோதித்திரிய வப்பொழுது

ஓர்புதரினுள்ளிருந்து ஒருபுலியானது அவ்வேடனைக்கண்டு பயந்து ஆயுதங்களையெறிந்துவிட்டப்பதறியோடி யோர்வில்வமரத்தின்மேலேறியிருக்க அதனடியிலப்புலியும்வந்திருக்கவதைக்கண்டிவன் என்செய்வேனென்று எண்ணியெண்ணித்துக்கத்தினால்விழுவோம் விழுந்தாற் புலிகொல்லுமென்று அம்மரத்திலிருக்குமிலைகளைப்பறித்துப்போட்டான் அவ்விலைவிழுந்தவிடத்தில் இலிங்கரூபமாயுமாமசேசனிருக்க வதன் கீழிருந்தபுலி ரிஷபரூபமாகவும் அப்போது சூரியனுதிக்கக்கண்டு கிழிரங்கிதனதாயுதங்களைத்தேடி யெடுத்துத்தன்குடிசைக்குடிவரவும் அவன்பெண்சாதிபிள்ளைகள் இவனைத்தேடிவருகிறவிதங்காண்க.

## கொடிச்சி விருத்தம்.

சிறுத்தகுடில்தனிலிருந்திராவிழித்துத் ... ... *
திங்களொன்றுந்தின்றுமற் சிறுவரே நான் ... ... *
உரைத்திடுவேன் வனவேட்டைக்குற்றப்போன ... *
உங்கள்தந்தையிங்குவரவில்லை பேனே ... ... *
இறந்துடனேமலையேறி விழுந்திட்டானே ... ... *
தேடியேசென்றிடுவோந்திட முற்றேதான் ... ... *
கருத்ததுவெவ்வேறாகக் கலங்குதிப்போ ... ... *
கணமதனிற்றினைதனையான்குத்துவேனே ... ... *

தரு - இராகம் - பந்துவராளி - அடதாளம்.

கண்ணிகள்.

செந்தினையெடுத்துக்கொட்டிச் சித்திரம்போலிலகுகைகளாலே என்
சிந்தைவெந்துருகிக்கப் பைந்தினைகுற்றவுமாச்சே சிறுவரே (௧)
சங்குகள்கலகலெனவிக்கிடவோசைகள்காட்டுங்கைகளாலே இப்போ
வங்கணமாய்மாவிடித்துப்பொங்குகாளிற்கொண்டுபோலாஞ்சிறுவரே
கைசலிக்கமெய்வலிக்கநடும்பசியெடுக்கவெந்தன்கைகளாலே இன்று
கருத்துடன் தினைமாக்கொண்டுசெண்டு தந்தைக்கிடுவோம் சிறுவரே
வேட்டையாடப்போனவேடன்விடிந்தும்வரவில்லைவிதிதானோ அங்கே
மிருகமதைத்தான்றுறந்தவேங்கைகொன்றேறினதோ சிறுவரே (௨)

கொடிச்சி வசனம்.

அடாவெனதுபுத்திர ரத்தினங்களே நேற்றுக்காலமேபோன வுங்கள் தந்தையானவன் விடிந்தும் நமதிடம்வரவில்லை ஆனதால் அவனுக்குஎன்ன கெடுதிநேரிட்டதோ தெரியவில்லை ஆகையால் நாம்தினைமாவெடுத்துக்கொண்டு தேடிப்போவோம் வாருங்கள்பிள்ளைகளே.

## கொடிச்சி விருத்தம்

செந்தினைமாவிடித்துத் தேனிற்பிசைந்துகொண்டேன் ... *
மைந்தரேமுன்னடப்பீர் வனமதைநோக்கித்தானே ... *



பங்கமாயென்னைச்சேரும் பத்தாவைக்காணுதாலே ... *
சிந்தையுமிகத்தளர்ந்து செப்புவேன்செப்புவேனே ... *

தரு - இராகம் - காம்போதி - அடதாளம்

கண்ணிகள்.

நேற்றுவேட்டைபோனான் இன்றுவரவில்லையேபாலரே-பாலரே
நெஞ்சந்தளருதிப்போ நினைவுமயங்குதென் பாலரே - பாலரே (௧)
மான்கடமான்புல்வாய் மடித்துவாரேனென்றான் பாலரே - பாலரே
மயிலுங்கோழியும்பன்றி மடித்துவாரேனென்றான் பாலரே-பாலரே)
பசுந்தனஞ்செய்யாமற் பகல்ராவும்பட்டினி பாலரே - பாலரே
யுறக்கவிழித்திருந்தோம் பதியின்வரக்காணேனே பாலரே-பாலரே()
மலைமேற்றானேறியே மாண்டுமடிந்தானோ பாலரே - பாலரே
மன்றில்நரிபிடித்துக் கொன்றுதின்றுவிட்டதோ பாலரே-பாலரே(௨)

கொடிச்சி வசனம்.

அடாவெனதுமக்களே யுங்களப்பன் மலைமேலேறிவிழுந்தானோ அல்லது நரிபிடித்துக்கொண்டுதோ தெரியவில்லையே யான் என்னசெய்குவேனடா.

## புத்திரர் விருத்தம்.

அம்மம்மாதாயேநீதான் அறிவதுமிகவில்லாமல் ... ... *
வெம்பியேயழுததாலே வேறொருபலனுங்காணோம் ... ... *
தம்பியுமயானும்வாரோம் தட்டத்துளமிருகங்கொல்ல ... ... *
வம்பதுபோலேபின்னே அடைவுடன்வருகுவாயே ... ... *

தரு - இராகம் - சௌராட்டிரம் - அடதாளம்.

கண்ணிகள்.

சல்லடமுந்தொட்டுத் தான்கச்சுக்கட்டினோ மிருவரும்
வில்லுடன்பாணமும் விளங்கவெடுத்திட்டோ மிருவரும் (௧)

சக்கரம்வாள்வளை தடியுமெடுத்திட்டோ மிருவரும்
திக்கெனவேகாட்டைத் தேடிநடக்கின்றோ மிருவரும் (௨)

மண்டிபோட்டுமிக வரிசையாய்லாகிட்டோ மிருவரும்
வண்டுகள்போலவே வந்துகுதித்திட்டோ மிருவரும் (௩)

தாயேநீபின்வரத் தாண்டிநடக்கின்றோ மிருவரும்
நாயதூன்னேவிட்டு நடக்கின்றோமோங்க விருவரும் (௪)

தந்தையைக்காட்டினிற் றுன்றோடிப்பிடிக்கிறேன் இருவரும்
விந்தைதீகண்டு விளங்கிடச்செய்கிறேன் இருவரும் (௫)

மான்மறையன்றி மயிலைப்பிடிக்கின்றேன் இருவரும்
கான்வளர்வேங்கை காடியையடிக்கிறேன் இருவரும் (௬)

அம்மாவுன்பாதத்தை யன்புடன்போற்றினேன் இருவரும்
சும்மாவழுகாதே சுகம்பெறச்செய்கிறேன் இருவரும் (௭)

புத்திரர்வசனம்.

எங்களன்புள்ள தாயே நீயொன்றுக்கும்பயப்படவேண்டாம் யாங்களிருவரும் எங்கள்தந்தையைக்காட்டுகிறோமம்மா.

கொடிச்சி வசனம்.

என்தருமைக்குழந்தைகளே நாமள்மூவரும்நெடுந்தூரம்வந்துவிட்டோமா கையாலிவ்விடத்திலருவியாறுண்டு இருகரைபிறண்டு அற்புதமானபிரவாகம் வருகிறதல்லவா ஆகையால்நாம்இவ்வாற்றை யெவ்விதமாய்க்கடந்து செல்வோம்பாலகரே.

புத்திரர் வசனம்.

அம்மா நீ சும்மாவிரு நாங்களிருவரும்திற் றெப்பங்கட்டி யுன்னையுட்கார வைத்து சீக்கென வக்கரையில்விடுகிறோமம்மா.

பொது விருத்தம்.

அருவியாரதனிலேதா னற்புதமாகவெள்ளம் ... ... *
பெருகியேவறவுந்தாயும் பித்தர்போலறு கல்காண்டு... ... *
ஒருநொடியன்னிற்சென்று உயர்வுளமூங்கல்வெட்டிச் ... *
சிறுவருந்தெப்பஞ்செய்து திறமுடனோட்டுவாரே ... ... *

ஏலத்தரு - இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

ஏலேலோ வேலேலோ - தத்தெய்தா - ஏலேலோ ஏலேலோ

அநுபல்லவி.

ஏலேலமென்றுதா இருவருங்கூடி
நாலாருமூங்கலை நறுக்கவேசாடி (ஏலே)

சரணங்கள்.

மூங்கல்வனந்தனையடுத்துத் திருகல் முறுகலுள்ளமரம்விடுத்து
ஓங்கிவெட்டும்படிதொடுத்து - வெட்டி ஒழுங்காயமரமெடுத்து



ஆங்கதனையுடைபடுத்துத் தெப்பம் அசையாமற்பலங்கொடுத்து
பாங்குடன்சல்லடமுடுத்துத் தாயைப் பண்புடமேல்வைத்தடுத்து
பலமானசிறுமூங்கற் சல்லிகைக்கொண்டு
நலமாகவேதள்ளி னார்வெள்ளங்கண்டு (ஏலே)

தன்றுகின்றவிசைசிறக்கத் - தெப்பம் - சாயாமற்றுன்பறக்க
உள்ளிருந்துநுரைபிறக்கச் - சிப்பி - உருண்டுருண்டுதானிறக்க
துள்ளிநண்டுமீனிறக்க - நீர்நாய் - துவண்டுகண்மூடித்திறக்க
வெள்ளம்வாவரச்சுறக்க - தள்ளி - மேலேற்றிவிசைகறக்க
விருப்பமுடன்சல்லியை வீசியோட்டி
உறத்துட்னெபாலர்களு மோட்டினார்நீட்டி (ஏலே)

மாமுதலாய்ப்பலசெடியுங் கொண்டு வருமருவியெடுகொடியும்
திறமுடனேகரையிடியும் - மணல் - சிவந்தவாரிப்படியும்
வரவுவரத்தான்வடியும் - பெருகும் - மாமுதலைத்தடியும்
அறுகுநிற்போரினைப்பிடியுமகையால்அனைத்துப்பிடித்திதைமுடியும்
அசையாமலேதள்ள யாண்மைகளுமீற
விசையாலேவந்தது மேல்கரையைச்சார (ஏலே)

பொது வசனம்.

இந்தப்பிரகாரந் தெப்பமானது கரைசேர்ந்தவுடனே பிள்ளைகளுந்தாயுமிந்தி அங்குலவேடனைத்தேடிப் போகும்வழியில் நடக்கும்விதங்காண்க.

கொடிச்சி விருத்தம்.

இறங்கினேன்றெப்பம்விட்டு இருசிறுவருமேசேரும் .... *
திறம்பெருந்தந்தைதன்னைத் தேடிநீங்கேவாரும் ... ... *
அறம்புகண்மலர்ந்தவீச மடவியிலாசைவைத்துச் ... ... *
சிறந்தகொண்கனைக்காணுமல்ச் சிறப்பழிந்தழுகுவேனே ... *

தரு - இராகம் - மணிரங்கு - ஆதிதாளம்.

பல்லவி.

நேற்றேயான்மோசம்போனேனே யுத்தத்திலேயில்லை
யிலேபாதவர்போலுமானேனே

அநுபல்லவி.

நேற்றேயான்மோசம்போனே னினைவுதமொழிஞனே
யில்லென்றுசொல்லியென் னேசனைப்புல்லியே
வல்வந்தஞ்செய்யாமல் மதனம்புதையாமல் (நேற்றே)

சரணங்கள்.

சிலையோடுகலையைநாடியே எம்பிரானைநாதன்
சென்னியிற்கொக்கிறகுஞ்சூடியே
வலையுமிவாள்சக்கரங்களும் வளைதடிவல்லயக்கரங்களும்
வாகுடனேந்தியே வனந்தனிலிருந்தியே
போகாதேயென்றுதான் போய்மறிக்காமல்தான் (நேற்றே)

புவியுமாகாயம்சாக்ஷியாய் சிவனுடனே
போதமாமுனிவர்சாக்ஷியாய்
தவஞ்செய்விண்ணவரும்சாக்ஷி தருவனம்வரைதான்முன்சாக்ஷி
சாதியர்மட்டிமேதாவிலையதொட்டுமே
நீதியாய்க்காட்டுமென் னேசனைவிட்டுமே (நேற்றே)

மானுடன்புல்வாய்முயல்மயில் கொக்குங்காடை
வரையசங்கடமான்கருங்குயில்
ஏனங்கிளிகானங்கோழி எய்துவரவேறுன்றடி
வேடிமிம்வேட்டை இவ்வனமுடனைப்
போமித்துக்கூடாமல் புதுமையாய்நாடாமல் (நேற்றே)

பொது வசனம்.

புட்பங்கள்மலர்ந்து பரிமளிக்கப்பொருமத் புருடனைநினைந்து புலம்புந் தாய்முன்புபோன இரண்டுபாலகரும் வருகிறவிதங்காண்க.

## பொது விருத்தம்.

சீக்கிரந்தேட்டமாடிச் சிறுவர்கடன்னைக்கூட்டித் ... ... *
தாக்கினுள்வனத்துக்குள்ளே சமர்த்துடன்றனுமன்பாய் ... *
பார்க்கவேகணவன்றன்னைப் பலநிக்குமோமிம்போது ... *
முக்குத்திகாணேமென்றே மோதியேபுலம்புவாளே ... *

தரு - இராகம் - கமாசு - ஆதிதாளம்.

பல்லவி

முக்குத்திகணக்காணேமே எழில்மிகுத்த
முக்குத்திதனைக்காணேமே

அநுபல்லவி.

முக்குத்திதனைக்காணேம் முன்னோர்சம்பாதித்தது
ஏர்க்கையாய்வைத்திருந்தேன்எப்படியோபோனதிது (மூக்)

சரணங்கள்.

சத்தகன்னியர்கூடியே தாமரைப்பொய்கை
தன்னின்மஞ்சனமாடியே



சித்தாரப்பதம்பாடியே தமிழுநித்தும்
வேளையிலென்றுயுமோடியே
மெல்லடிதொழுதிட விரும்பிச்சுடர்செழித்த
நல்லபணியருள காடியெனக்களித்த (மூக்கு)

பச்சைநீலம்வைரம் கோமேதகம்
பவளம்வச்சிரமிலங்க
மெச்சும்மாணிக்கத்தொளிவும் மூகப்பிலே
மின்னலைப்போற்றுலங்க
வேயின்முத்தந்துசுத்தம் வேடிக்கையாய்த்தொங்க
ஆயிரத்தெட்டுமாத்தானபகமைத்தங்க (மூக்கு)

வனத்திற்கணவன்வல்லையே காசும்பணமும்
வாங்கிக்கொணர்கவில்லையே
இனத்தாரொருவரில்லையே கடன்வாங்க
யேங்கினல் வெகுதொல்லையே
இருக்குஞ்சபையுள்ளோரே யிப்போதின்பமதாக
உருக்கமுடனேபொன்களுதவுவீர்தென்பதாக (மூக்குத்தி)

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாகமூக்குத்திபோனதைக்குறித்து அநேகவிதமாகவிதனப் பட்டுயெப்படிச்செய்வோமென்றெண்ண அப்போது சபையோர்கள்கொடுத்த பொன்னைவாங்கிக்கொண்டிருக்குந்தருணத்தில்நடக்குஞ் செய்கையெவ்விதமெனில்

## பொது விருத்தம்.

உய்யவேசபையோர்கூடி யுதவியபொன்னைவாங்கிச் ... ... *
செய்வகையெவ்வாறென்று சேயிழைபுலம்பும்போது ... *
தெய்வகன்னியர்விண்ணின்று சிறந்தமூக்குத்திதன்னைத் ... *
தையல்முன்போட்டுப்போனார் தங்களின்பீதிக்குந்தானே ... *

## கொடிச்சிசொல் விருத்தம்.

புத்திரரோயுங்கடந்தை போனதோர்வனத்தின்மந்திர ... *
வித்தையாற்கட்டுண்டாரோ வேடரால்வெட்டுண்டாரோ *
இத்தரையெல்லாந்தேடியேங்கினேனெனதுமெய்யும் ... *
சத்தியுக்கெட்டுஇங்கே தவிக்கின்றேன்றவிக்கின்றேனே *

தரு - இராகம் - முகாரி - அடதாளசாப்பு

கண்ணிகள்.

கண்ணேயென்பாலகனே சுந்திரக் கட்டாணிமுத்தே திரவியமே
மண்ணுமுமங்குலன்றான்பெற்ற வடிவேலமாகத ஓவியமே (௧)

அங்குலராஜனென்று மங்களப்பனேயுங்காணே னென்னசெய்வேன்
எங்குவிருக்கிறானோவென நின்பனேக்கண்டா லென்றுஉய்வேன் (௨)

வனத்தில்வேட்டையாடியங்கி வருவழியிலென்னதடைபட்டதோ
கனத்தவராகங்கூடி அங்குகட்டுக்கொம்புதான்கெட்டதோ (௩)

மிருகம்பிடிக்கவென்றுயெந்தவெற்பதிலேறி விழுந்திட்டானோ
அருவியிற்கால்வழுக்கிவிலாழ்ந்ததிருல்வரம்தாழ்ந்திட்டானோ (௪)

புள்ளிமான்கொம்பதனுற்றாக்கி போடகுடல்கள்சரிந்ததுவோ
கள்ளிக்கடமானுங்கொம்பாற்றட்டிமேற்குலேயுகிந்ததுவோ (௫)

புதற்குள்ளேபுகுந்தசுற்றவங்கே போனதடமும் தெரியலையோ
சிதைந்ததோவானேகளுங்காலிற்மேய்ந்திடவிங்குவரவிலையோ (௬)

சிங்கநிடதேகன்நிகழ் சிங்காரங்காணு திடம்பிரியேன்
உங்கள்மேலேபிரிதிதந்தைக்குண்டோதானில்லையோயானறியேன்

சையோகசம்பிரமனுமெந்தன்சாமியைங்காணுமல் நானிருக்கேன்
வையோகமன்மதனுய்வந்துவாய்த்தபத்தாவை விட்டேயிருக்கேன்

கங்குலன் வசனம்

ஓ யென்று தாயே நீயொன்றுக்கும்விசனப்படவேண்டாம்நானிருக்கும்போது.

## கொடிச்சி விருத்தம்.

ஆசைநாயகாவங்குலாவென்ற னப்பனே வில்வவடவியில் *
தேசமேகொண்டுபின்னேயே தேடியிற்கிறேனிதுநீதியோ... *
பாசமேவிட்டு கட்டியேயமன் பதியிருக்கவும்வைத்தானோ *
பேசவாயிலே என்னசெய்குவேன்பேதைநான்வரவிங்கையே *

தரு - இராகம் - சங்கராபரணம் - அடதாளசாப்பு.

பல்லவி.

மன்றுவனத்தில்வந்து உன்றுல் மயங்கிறேன் நான் (மன்று)

அநுபல்லவி.

என்றுமென்கைதொட்டு இணைபிரிந்தாயோவிட்டு (மன்று)



சிவன் வசனம்.

நீ யொன்றுக்கும் பயப்படாமல் என்னருகிலிரும்பிள்ளாய் யங்குலவேடா.

## இயமன் விருத்தம்.

பந்தபாசத்தைப்போக்கும் பரமனார்சொந்தமென்றும் ... *
முந்தவேகணங்களுன்னே முக்கியமாய்க்கொணர்ந்தாரென்றும் *
சிந்தையிலெண்ணவேண்டாம் திடமுள்ளபாசம்விட்டு ... *
வுந்தனேஎமபுரிக்கி புடனேயான்கட்டிப்போவேன் ... *

தரு - இராகம் - பிலஹரி - அடதாளம்

பல்லவி.

வீசுரேன்பாசம் வேடாவுன்மேல் வீசுரேன்பாசம்

அநுபல்லவி.

வீசுரேன்பாசத்தைவிடக்கைகளுதருது
ஈசன்பின்னிருந்தாலுமென்னுள்ளம்பதருது (வீசு)

சரணங்கள்.

புற்றுதட்கோபங்கள் வெற்றிச்சூலந்தலங்கக்
குத்துவேன் பாசத்தால் முத்தாரிடுகலங்க (வீசு)

விண்ணவர்முதலான மண்ணவர்பதறவும்
எண்ணு தானவலியே நின்னவர்சதறவும் (வீசு)

அரியயன்படைகூட்டி அஸ்திரம்விட்டாலும்
கரியுரித்தோன்கணம் கடிதிமுன்னிட்டாலும் (வீசு)

சேவிலேயிசிவன் செங்கண்ணுங்கருங்கண்ணும்
ஏவிச்சூலம்விட்டா லிருக்குவேறுனெண்ணுய் (வீசு)

வில்வவனத்தினில் விட்டென்றாகர்கட்ட
நில்லடாவிப்போதே நெருக்கிறேன்பற்கிட்ட (வீசு)

செய்திடும்பாவங்கள் செப்பவேமுடியாது
ஐயோவென்றரன்கூட வழுகாமல்விடியாது (வீசு)

அலறவேயுனைக்கட்டி யமபுரிகொடுபோவேன்
நிலவரமென்றெண்ணு நின்னைச்செக்கிலிடுவேன் (வீசு)

இயமன் வசனம்.

அடா வாடா அங்குலவேடா முன்னேயுன்னை யென்றாதர்கட்டச் சிவகணங்கள் மீட்டுவந்தாரென்றும் சிவன் உனக்குச்சொந்தமாயிற்றென்றும் இனி பயமில்லையென்றும் மனதிற் சந்தோஷங் கொள்ளவேண்டாம் நானுன்னையிப்பொழுதே பாசத்தாற் கட்டிச் சூலத்தாற் குத்தியெமபுரிக்குக் கொண்டுபோகிறேன் பாராய்.

## அங்குலன் விருத்தம்.

உயர்ந்தகற்கைலைமேவும் ஓம்அரகரசம்பூர்ண ... ... *
அயந்தனைச்சடையில்வைத்த வண்ணலேசரணங்காரும் *
நயம்பெறப்பாதபூசை நடத்தமெய்நடுங்குதிப்போ ... *
பயந்தனையகற்றிவைப்பீர் பரமனேபோற்றிபோற்றி... *

தரு - இராகம் - மாஞ்சி - ஏகதாளம்.

கண்ணிகள்.

அருகுவிசாலனைமருவுதுளிகின்றே ஓம்அரகர
அர்ச்சித்தேன்பதம் இச்சித்தேன்நிதம்
பெருகுசண்பகபுஷ்பமலர்கரம் ஓம்அரகர
பேணிச்சாற்றினேன் காணப்போற்றினேன் (க)
விதியைவெல்லவுந்துதிநான்சொல்லவும் ஓம்அரகர
வேளைவந்ததார் ஏழைசொந்தம்பார்
கெதியென்றுள்ள மதியுமேயில்லை ஓம்அரகர
கிருபைதாரும் அருகிலேசேரும் (உ)
செய்வினைதீரும் உய்யவேபாரும் ஓம்அரகர
செகம்பொருந்தவே அகந்திருந்தவே
தெய்வமேயென்று கைகுவித்தின்று ஓம்அரகர
சிந்தைகூடிடும் வந்துநாடிடும் (ந)
ஆயிரத்தெட்டுத் தாய்தலந்தொட்டு ஓம்அரகர
அருள்பெருகவே வரமுங்குருகவே
தாயுமையுடன் பேயோடிகட்டம் ஓம்அரகர
சற்குருபாரும் நிற்கிறேன்காரும் (௪)

அங்குலன் வசனம்.

எருமைக்கடாமேலேயமன்வந்திருக்கிறான்நெஞ்சங்கலங்குகிறதே கடவுளே.

சிவன் வசனம்.

நீயொன்றுக்கும்பயப்படவேண்டாமென்பிறபக்கத்திருமிள்ளாயங்குலவேடா

## இயமன் விருத்தம்.

கொக்கரித்துக்கண்சிவந்து கோபமாகிக்... ... ... ... *
குருபரனைவரன்முறையாய்க்கூறக்கேளும் ... ... *
பக்கமதில்நிற்கிறவங்குலனும் வேடன் ... ... ... ... *
பழிபாவம்வழிப்பறியுங் கொலையுஞ்செய்யும் ... ... ... *
மிக்கவினைத்தவன்பெரியோர்தமை மிகுத்தோன் ... *
வெகுபாவிசெனனமெனது நாநரகத்தில் ... ... ... ... *
இக்கணங்கள்வந்திவனைக்கொண்டு வந்தார் ... ... ... ... *
என்க்காசுவேண்டாமென்றென்றுந்தானே ... ... ... *

சிவனுக்கும்-எமனுக்கும்-சம்வாதம்.

தரு - இரா - கெவுளிபந்து - ஆதிதாளம்.

சிவன் சொல் கண்ணிகள்.

அரசுவேண்டாமென்று அற்புதமாய்ச்சபையில் யமனே
அறைகுறனையென்றான்னே



விரசிக்கடுங்கோபமாய் வேல்சூலம்பாசமேந்தி
வேண்டிவந்ததைச்சொல்லும் யமனே (க)

இயமன் சொல்.

சிராய்த்தவஞ்செய்வோர்கள் சிவபதிசேர்வதல்லால்
நியர்சேர்வாரோசொல்லுஞ் சிவனே
பேராவிரதம்நோன்பு பேணுவார்சேர்வதல்லால்
பிசகுவார்சேர்வாரோ சிவனே (உ)

சிவன் சொல்.

தரணிதனிலேபாவந்தானே செய்திடும்பேரைத்
தண்டிப்பதுவும்நீயே யமனே
கருணீகர்சொற்படி கடியதூதனைவிட்டுக்
கட்டிநரகிற்றள்ளும் யமனே (ந)

இயமன் சொல்.

மேவிப்பழிகொலைகள் மின்னார்கற்புமழித்த
வேடன்குலனிவன் சிவனே
எவுமென்தூதர்கட்டி யிறுக்கத்தண்டால்மோதி
இங்கேகணங்கொணர்ந்தார் சிவனே (௪)

சிவன் சொல்.

நாட்டினில்வெகுபாப மங்குலன்செய்தாலும்
அரியதவம்புரிந்தான் யமனே
திடமாயுனக்குரைத்தேன் சிந்தையிற்கொள்வாய்
தேவர்முனிவர்செய்யார் யமனே (ரு)

இயமன் சொல்.

கல்லாவங்குலவேடன் கருத்திற்சிவனுண்டென்று
கருதினதில்லையே சிவனே
நல்லவெண்ணீறணிந்து நாவிலுனதுநாமம்
நாடித்துதித்ததில்லை சிவனே (சா)

சிவன் சொல்.

மாசியமாபட்சம் சதுர்த்தசித்திதிதனில்
வரிப்புலியைக்கண்டஞ்சி யமனே
யோசித்துமாமேலி புறங்காமலிலைபறித்
துதறப்புலியோவாச்சே யமனே (எ)

இயமன் சொல்.

பரவைமிருகத்தின்று பாவப்பதைக்கக்கொன்ற
பாவியிவனுயாச்சே சிவனே
இரவிற்களவுசெய்தும் அன்றுங்களிக்குடித்த
இவனேதுரோகியைய்யா சிவனே (அ)

கொ

சிவன் சொல்.

மன்றிலேரவிற்றவிர் வனவேடன்பறித்திட
    மரத்தடி லிங்கமானேனும் — யமனே
சென்றிரவிற்கணக்கை சித்திரபுத்திரனயினர்
    சேர்த்துயெழுதவில்லை — யமனே (௯)

இயமன் சொல்.

எழுதாதகணக்குகளென்னிட மிருக்குமோ
    விங்கேசோதித்துத்தாரேன் — சிவனே
வழுவாமலோர்மொழியாய்வச னித்திடவும்வேண்டாம்
    வளைப்பேன்பாசத்தாலுன்னைச் — சிவனே (௰)

சிவன் சொல்.

வேடனையுமென்னையும் விரும்பிக்கட்டுவே னென்றாய்
    விழலுரைப்பேன் மன்னில் — யமனே
யோடாமுன்பட்டதைத்தான் பொக்கணத்திற்போட்டாயோ
    புத்தியுனக்கேனில்லை — யமனே (௰௧)

இயமன் சொல்.

மார்க்கண்டன்போலிவன் வழுத்தினநிலையுமை
    எழுத்தினுனென்னலாமோ — சிவனே
போகாயெனக்குச்சொன்றாற்போசாதுலகுக்கெல்லாம்
    போதிக்கவேணுங்காண் — சிவனே (௰௨)

இயமன் வசனம்.

வாராய் சிவனே அந்தலவேட னனேயாவந்துசெய்திருக்கவவன் தவம்புரி ந்தானென்று சொல்வது மார்க்கண்டனுக்காகச் சொன்னதுபோலிருக்கிறது என்னிடதூதர்களை யுற்றுடைய கணங்கள் மண்டையுடைபவடித்துமவன்மேல் புரளத்தள்ளிவிட்டு வேடனைப்பிடித்துக்கொண்டுவந்துவிட்டார்களா நல்லதிரு க்கட்டும் ஒருகைபார்க்கிறேன்.

## சிவன் விருத்தம்

மிருகண்டன்மகன்மார்க்கண்டன் மெய்த்தவம்புரிந்தாலே *
அருமினிலவனைவைத்தோ மதையறியாமல்நீயும் ... ... *
கெருவமுமிகவேகொண்டு கிட்டியபாசம்வீச ... ... *
வொருகோடிதனிலேயுன்னை யுதைத்ததைமறந்திட்டாயோ *

சிவன் வசனம்.

அடாவாடா யமனே என்னைப்பொய்யனென்று சொன்னாயல்லவா பாச த்திற்கட்டிச்சூலத்திற்குத்த முன்பு மார்க்கண்டனுக்காக உன்னையுதைத்ததை நெடுநாளானதென்றுமறந்துவிட்டாய் இப்போது உதைக்கிறேன் பார்.

இயமன் வசனம்.

சிவன் ராத்திரிப்பகல் நிர்ச்சலமாய் மிருகவேட்டையாட வேங்கைதுரத் த வில்வத்திலேறியிருக்க அது கீழேயிருக்கத் தூங்கினால் கீழே விழுவோம்விழு ந்தால் வேங்கை கொல்லுமென்று இலையைப்பறித்திட்டு விழித்திருந்து தினை மாவைப்பகலிலருந்திக்குடிசைசேர்ந்துமுன் முறைமுன்போலவேவேட்டையா



டினதும் சித்திரபுத்திரன் கணக்கிலிருக்கிறது ஆகிலும் உம்மை யோர்திரமாவ து துதிக்கவில்லை இவ்வந்குலவேடனையா சுவாமி.

## இயமன் விருத்தம்.

தூதர்களடிமேற்கொண்ட துக்கத்தாற்பதறிவந்தேன் ... *
ஏதுநான்பிழைசெய்தாலு மிரக்ஷிக்கவேண்டும் ... *
நாதனேபரசொரூபா நாயினுங்கடையேனையா ... ... *
ஆதியேஅரனேயின்றன் அடியிணைசரணந்தானே ... ... *

தரு - இராகம் - சுத்தசாவேரி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

வடகைலாசபுரிவாசா உனது மகிமையறிகிலேனே — நேசா
அடியரிடரகற்றுமீசா வென தானவகோபபாபநாசா (௧)
திங்கட்பிறைதரித்தநாதா சீறிச் சினந்தபுலியுரித்த — போதா
கங்கைசடைமறைத்தநீதா அன்று கருதிப்புரமெரித்தவாதா (௨)
பேயுடனாடியபித்தா ஓடிப் பிட்டுக்குமண்சுமந்த — சித்தா
மாயன்மைத்துனனெனுங்கர்த்தா கையின் மான்மழுவேந்தியமுத்தா
நரியைப்பரிகளாகச்செய்தாய்முன் நான்முகன்சிரமொன்றுகொய்தாய்
பிரமகபாலங்கையிற்பெய்தாய்வைகைபெருகிவரமண்வெட்டிவெய்தாய்
தில்லையிலேநடனமிட்டாய் பிரம தேவன்மால்தேடியுமெட்டாய்
தொல்லையொழியானைக்கிட்டாய் வந்துதொழுகவல்லானையேதட்டாய்
திருவொற்றியூர்விடை யாளா திருச் செங்காடுளையுங்கங்காளா
தருமவான்களுக்குநீயாளா இன்று தறகாத்தருள்புரியுந்தாளா (௩)
குருந்தடியிற்பள்ளிகொண்டாய் தவ கோலமுனிவர்க்கருள்விண்டாய்
திருந்துமதுரையிற்பண்டாய்தினம்சித்தர்தொழுதிடுவோர்தொண்டாய்
திருக்குமதுரையிற்பண்டாய்தினம் சித்தர்தொழுதிடுவோர்தொண்டாய்)
காசிராமேசரம்நின்றாய் திருக் காளத்திகாஞ்சிபுரி — சென்றாய்
பேகமவனுசியில்நின்றாய் இன்று பேருரசிலகடம்வென்றாய் (௪)
ஆனைமுகன்குகனைப்பெற்றாய் பரு ளானந்தவடிவமா — யுற்றாய்
ஞானவழிமுறைமைகற்றாய் மன நாட்டமில்லாதவரைப்பற்றாய் (௫)
இயம்பினேனறியாதகுறிப்பாலகானேதுபிழைசெயினும்பொறுப்பாய்
பயின்றபொல்லாங்குகளறுப்பாய் உன் பதம்பணியவுளத்திருப்பாய்

இயமன் வசனம்.

யான் அறிந்து மறியாமற்செய்த சகலபாவங்களையும் போக்கி யென்னை யாட்கொள்ளுங் கடவுளே.

ஈசன் வசனம்.

அப்படியே பொறுத்தோம் நீ யெனதடியார்களை இன்றுமுதலென்றுந் தீண்டாமற் புத்தியுடனிரும்பிள்ளாய்.

## இயமன் விருத்தம்.

அரியதவம்புரிவோரைத் தொடுவதில்லை ... ... *
அரும்பூவிகளைக்கண் டாக்கினையுஞ்செய்வேன் ... *

விரிவெயிற்றமலர்மயிர் படவிருன்னில் ... ... *
வில்வமரமிருந்தர்ச் சனையுஞ்செய்து ... ... *
பெரியசாயுச்சியபதந் தன்னைப்பெறவிய ... ... *
பெருமையுறும்வேட்டனைப் போலப்பரசந்தாலே ... *
தெரியாதுபிடித்துவரச் சொன்னோன்காப்பாய் ... ... *
சிவனேயின்னடிதொழுதேன் செழிக்கத்தானே ... *

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாகப் புநிபெருமைப்பெரும்பகசேர்ந்த கரிதிறத்தானலும் வெறுவிப்பார்புகழ்மிறையும் வைந்துண அருக்குறுஞ் சிரணியரவுஞ் சிறப்புடனணிந்த சிவபெருமானைச்சிந்தைதனோய் போசலென்பமறுத்திடவென வந்திந்தேக வந் ஞானமகன்ற வருமனறக்கெட்டாப் பிஞ்ஞகன்கொலுவிற்குவரும் விருத்தங்காண்க.

சிவன் கொலுவிருக்கும் விருத்தம்.

அடியிரண்டெகதிசேவருமேதாங்க அண்டர்சேனாதனபதிறுடைவானோர் தங் குடைவிரித்துவருணனுமேற்பிடித்துநிற்கச் சேரநன்டன்பிரமனுடன்சவரிவீச திடமேவுமுத்துநகர்சிவசுப்பிரமணிய திருமூர்த்திசுவாமிகீர்த்தியிலொப்பாக| டாரே வடிவாகக்குருமுனியுஞ் சிவநக்கன்பாய் மனமகிழ்ந்துபொலிவுவேவத்திட்

தரு - இராகம் - சகானா - அடதாளம்.

பல்லவி.

மகுடஞ்சென்னியிற்கொண்டாரே சிவநாதபோதர்
மகுடஞ்சென்னியிற்கொண்டாரே

அநுபல்லவி.

செகமகிழ்தேவரும் அசமகிழ் முனிவரும்
திங்களுடனிரவி துங்கமிகுந்திரன்பரவிச
செழிக்கவியர்கள்கூடக் களிப்புடனேகொண்டாட (மகு)

சரணங்கள்.

அரியயனிருவர்கள்சவரிபெய்யஅரம் பையூர்வசிமுதல்கடனஞ்செய்ய
எரிமழுமான்கரமிலங்கத்துய்ய என்றம்பந்தசகஸ்ராதிதிலுய்ய
விருளறுமுத்தர்கள் அருள்பெறுஞ்சித்தர்கள்
ஏண்டனுடன்கூடித் தாண்டிப்பாட்கர்பாட (மகு)
கங்கையமுனைசரஸ்வதிகோதாவிரி கருதியநருமதைசிந்துபுகழ்காவேரி
எங்கும்பால்கிளறில்துங்கபத்திரிஇலங்குகாசிராமேசுரதீர்த்தம்புநிந்
திரமுடனபிடேகம் விதமுடன்செய்யாகம்
இன்னம்வைபோகமுண்டு அன்னஞ்சந்தாங்கண்டு (மகு)
அடிதொழுமவர்களையுடன்காக்கஅண்டபிண்டபடைப்பிலருள்நோக்க
விடைதனிலேறவேண்டினர்பார்க்க வெற்றிவிளைபம்பைமுரசார்க்க
விரிந்தகுடைகடாவுஞ் சிறந்தகைலேமேவும்
வெம்மாமணிபொருந்துஞ் சிம்மாசனத்திருந்தும் (மகு)
நாகமணிகள்மார்பின்மீதிலங்க நரித்தோல்விரித்தமெய்தான்றுலங்க
சுகபீதாம்பரமிடைதுலங்க எண்டிக்குஞ்சங்குநாதங்கலங்க
இங்கிதநேசமே மங்கையைபோகமே
இளைஞ்சிமலர்கள்சாற்ற வரிந்து அடியார்போற்ற (மகு)



பொது வசனம்.

இந்தப்பிரகாரமாகக் கைலைப்பதியிற் சிவபெருமான் மகுடந்தாங்கிக் கொலுவிருந்தார் அப்பொழுது அங்குலவேடன் போற்றிநிற்கக் கடவுள் விண்ணப்பஞ்செய்வது யாதெனில்.

சிவன் வசனம்.

வாரும்பிள்ளாயங்குலா நீ செய்தபாவமெல்லாம்போக உன்னைக்காத்து எமதிடத்தில் நீ யெப்பொழுதுமிருக்கப் பதமுங்கொடுத்தோம் யிவ்விரதத்தை யாவருமனுஷ்டிக்கும்பொழுது சதுர்த்தசி நிர்ச்சலமாகவும் அசத்தமின்றி நேமமாக வில்வார்ச்சனைசெய்து தாம்பூலமருந்தாமல் ஸ்திரீமுகம்பாராமல் நீசரிடம் வசனிக்காமல் பொய்பேசாமல் கோபமுறாமல் கொலை புலை களவும் செய்யாமலிருக்கவேண்டும் இரவுமுழுவதுந் துயிலாமல் மறுநாளாகியபௌர்ணமிக்கு தையத்திற்குளித்து அமுதருந்தி அஸ்தமானத்திற்கு நித்திரைசெய்யவேண்டும் இவ்விதம் யாதாமொருவர் இருப்பார்களாகி லவர்களு முன்னைப்போல் வென்பதமடைவார்கள் அங்குலவேடா.

பொது விருத்தம்

அன்புடனேயங்குலனைப் பதத்திலவைக்க ... ... *
அவன்தேவிமைந்தர்களு மடையவந்தார் ... ... *
இன்பமுடனடிதொழுதே யிருந்தாரன்றே ... ... *
என்றுமழியாதபதமெய்தி நன்றாய் ... ... *
என்பரவணிபுனைந்த வுமைபங்காளன் ... ... *
எல்லாமாயல்லவுமா யாவுந்தானும் ... ... *
தன்பதியாகியகைலை யாசாயமின்று ... ... *
சச்சிதானந்த மனை தன்னில்வாழ்ந்தான் ... ... *

வாழித் தரு - இராகம் - பூபாளம் - அடதாளம்.

கண்ணிகள்.

சிவன்சத்தியும்வாழி நாளுந்திருமாலுந்தேவியுடன் வாழி
தவஞ்சேர்முனிவாழிசித்தர்தாளும்விண்ணோர்களெலாம் வாழி (௧)
வித்யாதரர்வாழி நல்ல வேதன்சரஸ்வதித்தாய் வாழி
பத்தர்களும்வாழி கவிபாடும்புலவோர்பலர் வாழி (௨)
நலமாஞ் சிவன்ராத்திரிப்புராண நாடகமென்றுமிக வாழி
தவமீதிலேபெருகச் சைவசமையபுராணங்கள்தான் வாழி (௩)
சிவசுப்பிரமண்ணியதிருமூர்த்திசாமிசெங்கோலுந்தினம் வாழி
அவனிபரவுங்கீர்த்தியென்றும் அலங்காரமாகவேதான் வாழி (௪)
ஆனைமலைகளும் செங்கோலாளுமரசர்களும் வாழி
சேனைபடைவாழி புகழ்சேருங்குடிகளெல்லாம் வாழி (௫)
வர்த்தகரும்வாழிசூழும் வைபகமெல்லாமிக வாழி
நித்தம்மழைபொழியபுவி நீடூழிகாலமிலே வாழி (௬)
படிப்போர்களும்வாழிகேட்டுப்பாடியே ஆடுவோர்தான் வாழி
எடுத்தோரிவைவாழிகொஞ்சமின்னஞ்சொலென்போரெலாம்வாழி

## பொது விருத்தம்.

உலகுதிகழ்மெய்ஞ்ஞானவாசனுமையுடன்கைலையுறைந்துவாழ்ந்தா
இலகுமவாடிபீதில்மலர்வில்வமாத்திரும்பை எருக்கிலந்தை ... *
நலமிகவங்குலஞ்சாற்றிப்பதமதனி லிருந்துய்யகாளும்நன்றுய்க் *
கலகலெனவரம்பையர்கள் சோபனமுந்தான்புகலக்கருதினரோ *

### சோபனம் - தரு - இராகம் - ஆரபி - ரூபகதாளம்.

பல்லவி.

சோபனமே-சோபனமே-சுப சோபனஞ் சோபனமே.

அநுபல்லவி

தீபவொளிவாகவெங்குந்திகழ்கைலைப்பதிதனக்கும்
தாபனவேதத்தியம் பெருகுஞ்சுந்தரஞ்சேர்பாருமைக்கும் ()

சரணங்கள்.

ஐங்கரற்கும்வல்லபைக்கும் அயில்மேவுமறுமுகற்கும்
வங்கணமாந்தெய்வானை வள்ளியெனுமாதினுக்கும் (சோ)

எழில்மிகுத்தவிந்திரர்க்கு மிந்திராணிநாயகிக்கும்
மொழிதழைக்குமுனிவர்க்கு மூழ்குமவர்தேவியர்க்கும் ()

தேவருக்கும் காவலர்க்கும் திக்குவளர்பாலகர்க்கும்
மேவுகணநாதருக்கும் விளங்குநந்திதேவருக்குஞ் (சோ)

தவமேவுமங்குலனுந்தன்மனைவி புத்திரர்க்கும்
சிவகம்பிரமண்ணியதிருராத்திரிசாமிச் செல்வனுக்குஞ் (சோ)

## விருத்தம்.

உச்சிதமாய்ச்சிவனிசியிலரனைநோக்கி யொருசந்திபக்கிருந்திராவிழித்து *
அர்ச்சிக்கவரும்பறுகுவில்வமாலை யணிந்துநந்தைசயுண்டிடுமெக்கசப்புத்திரப் *
பச்சரிசியபழிளநீர்கரும்புதேங்காய் பழங்கிழங்குசக்கரையு நாலுசாமம் *
இச்சையுடன்வைத்துமேதூபதீபம் ஏற்றிமறுநாளுமுதுகொள்வோர்வாழி *

## விருத்தம்.

வேதசாஸ்திரமும்வாழி விளங்கியபுராணம்வாழி ... ... *
மாதவர்முனிவர்வாழி மனுக்களுந்தழைக்கவாழி ... ... *
ஓதுநாடகமும்வாழி உரைசெயக்கேட்போர்வாழி ... ... *
ஆதிபாமுடிவும்வாழி அரனுமைவாழிவாழி ... ... *

சிவன்ராத்திரி நாடகம் முற்றுப்பெற்றது.

சிவசங்கரக்கடவுள் பாதாரவிந்தமே கதி.

—

3354
16-6-95.



சரணங்கள்.

பிள்ளைகள்துயர்கொள்ளப் பெண்டீர்மயங்கித்துள்ள
உள்ளங்கனிந்துவிள்ள வோடிவருவாய்மெள்ள (மன்னு)

ஏனோவுனதுமனமிரும்பது போலேகனம்
ஆனாலுமிந்தவனம் அலறுதேபுலிசினம் (மன்னு)

மூவரிரவழுது முன்னோர்தனைத்தொழுது
போவதில்லைப்பொழுது புத்திமிகப்பழுது (மன்னு)

கொடிச்சி வசனம்.

எனதின்பநாயகனே என்னசெய்வேன் உன்னை கண்ணிற்காணேனே.

## மங்குலன் விருத்தம்.

புலம்பிடுதொண்டைவாயுலர்ந்திருவிழினீர்பொங்குதுவுன்றனக்கு *
இலங்கியவதனசுந்தரவெழிலப்புர மேகுதுன்றுகமெலாம் ... *
அலங்கோலமாகமுட்பலம் பெறக்கீறவுமழுதிடவேண்டாமித் *
தலந்தனில்ங்குலன்றுலங்கவுன்முன் வரத்தானினிக்காண்பாயே *

ஏலத்தரு - இராகம் - நாதநாமக்கிரியா - ரூபக தாளம்.

பல்லவி.

அங்குலனெங்கள்தந்தையுமிதோ வடுத்துவருவா ரம்மா பாரம்மா

அனுபல்லவி.

இங்கிதமிகுங்கூவிளவனத் திருந்திதற்குள்ளாகவே யின்று (அங்கு)

சரணங்கள்.

வில்லும்பாணமும் விசைபெறுகவே
விடுத்துப்பகைவரை நொடிக்குள்கொல்லுவான்
வல்லசுரர்களுந்தகப்பனைக் கண்டால்
மதிமயங்கியேமறைந்துசெல்லுவார் (அங்குல)

பூமண்டலத்தை யொரு குடைதனில்
புகழுவாண்டிடுஞ் சக்கிரவர்த்திகளும்
நாமங்கேட்டிடிவுலகத்தை விட்டு
நாடிவிண்ணின்று பாடுவார்களும் (அங்குல)

ஆனைபுலிசிங்கக்காடிக் கூட்டங்கள்
அடங்கலுங்கூட்டத்தொடர்ந்து குருவே
எனமெதிர்த்துவக்கா லொருபாணத்தால்
எய்துதசைகொண்டு பையவேவீருவான் (அங்குல)

மங்குலன் வசனம்

இன்றைத்தும்மயங்காதே தாயே சந்தேபொது அம்மா.

## பொது விருத்தம்.

புத்திரர்முன்னடந்துபோகவும் புவியின்மீது... ... *
பத்தியேபின்றொடர்ந்துபஞ்சநின்விசைபோலேவ ... *
சத்தியேபுலம்பியங்கக்காட்டிலங்குலனும்வேடன்... ... *
சத்திகெட்டிடநொந்து தான்வரக்கண்டாள்தபனே ... *

அங்குலனுக்கும் கொடிச்சிக்கும் சம்வாதம்

தரு - இராகம் - புன்னாகவராளி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

கொடிச்சிசொல்

வேட்டையாடியிங்குகாட்டைக்கூடித்தங்குவானே நீயும்
விளக்குவேலைமுனை கனைக்குத்தேகதிறை யொளித்திடாமனுலா
தானே சியானே (௧)

அங்குலன் சொல்

கூட்டியம்புவில்லும் பூட்டிநீட்டிவென்று மென்மே கையிற்
கொடியவலையும்வலை தடிசக்கரமுநானே செடியிலெடுத்துமே
யின்றேன் கொல்லச்சென்றேன் (௨)

கொடிச்சிசொல்

இருண்டவனந்தனி லரண்டுவெருண்டுதனியாக விப்போ
தெனக்குயிச்சொல்லு வனத்துவழியிற்செல்லு சினக்குலிப்புடலி
போகத் துணாக [லனு (௩)

அங்குலன் சொல்

இரண்டுகனத்தினை முருண்டகனத்தழ கென்றேயி செல்லச்
சிறுவரிருவர்தானே வெருவியிருவர்மானே அருகிற்கொணர்குவா
காவி லெக்கறுவி [னே (௪)

கொடிச்சி சொல்

சட்டுமுனுசிறுமான்னுக்குடையக் குருதிதன்னுதேது கின்று
சாற்றிவிடுவாயிப்ப நேற்றுநடந்தவெப்பவேற்று மையின்றியொ
வோது வந்தச்சூது [ப்ப (௫)



அங்குலன் சொல்

அடவிதனிலேபொல்லாக்கொடியமிருகமெல்லாங்கோட்டி நானும்
அத்திரங்கள்போட எத்திமான்பிணைட சுத்திவலைகணிட
நாட்டிக் குழக்காட்டி (௬)

கொடிச்சி சொல்

நின்றுமகிலங்கிப் பன்றிமான்குலிக்கியேக நீயும்
மலத்திற்குதித்தறைடி அலுத்துமுகரும்வாடி வனத்திலலைந்துதேடி
நொந்தாய் உள்ளம்வெந்தாய் (௭)

அங்குலன் சொல்

வலையைமான்கள்விட்டுக் கலையத்துயரப்பட்டுநாடி செல்வ
வனத்திற்புதர்புகுந்து சினத்துகலைக்கநொந்து கனத்தவேங்கைவந்து
சாடப் பயந்தோட (௮)

கொடிச்சி சொல்

அலைந்துதிரிந்துகுணங் கலைந்துகுலைந்த மணவாளா அப்போ
தர்விலெங்கள்மேலன்பு பெருகினதோபின்பு தெரியவுரைசெய்வெ
வர்ளா யென்னையாளாய் [ம்பு (௯)

## அங்குலன் விருத்தம்.

தடியெடுத்துப்புதர்களையானடிக்கவேங்கை ... ... *
தானெழுந்துதுடரவில்வமரத்திலேறிக் ... ... *
கொடியமுள்கள்தைத்திடவும்குருதிசோரக் ... ... *
கூவென்றுமற்றுணையில்லையென்றுதேரி ... ... *
விடியளவுமிலையதனைப்பறித்தேயிட்டு ... ... *
விழித்திருக்கப்பகலாகவிரங்கியானும்... ... ... *
படிமிசையினடந்துவந்தேன் பாலரே யென் ... ... *
பத்தினியேயித்தையே யுணர்குவீரே ... ... *

## வேடன் வசனம்.

நான் வீடுவிட்டுக்காட்டுக்குச்சென்று வேட்டையாடத் தீட்டியவாயுதங்களை கோட்டிபத்தின்மீதும் மற்றமிருகங்களின்மீதும் பிரயோகித்தேனதுகட்கவைகளகப்படவில்லை பின்பு வலைகளைக்கட்டி யானொரு தடியெடுத்து புதர்கள்தோறும் அடித்துக்கொண்டுபோனேனப்புதரிலொரு புலி புறப்பட்டென்னைத்துரத்தப்பயந்தோடியவ்வனத்திருந்த வோர் கூவிளத்தின்மேற்றுவியிருக்க வப்புலியுமதன்கீழ்நின்றென்னையே நோக்கிற் றப்பொழுதென்னிடமாயுதமில்லாததால் யான் மரத்திலைகளைப் பறித்ததன்மேயில் விடியுமளவும்போட்டேன் விடிந்தவுடனப்புலிபசவாயிருக்கக்கண்டம்மரத்தை விட்டிறங்கியுங்களிடம் வந்தேன் பெண்சாதி பிள்ளைகளே.

## கொச்சகம்.

உரைத்தமணவாளாவுன் னுடல்முழுவதுங்காயங் ... ... *
காத்திலுதிரங்கள் கசிவதுநான்கண்டேனே ... ... *
சிரத்திற்சிகைகளெல்லாஞ் செடியிமுக்கநியங்கும் ... *
வருத்தமெலாங்கண்டு மனக்கவலைகொண்டேனே ... ... *

### தரு - இராகம் - எதுகுலகாம்போதி - அடதாளம்.

கண்ணிகள்.

வேங்கைவரவறிந்து வில்லம்புதானெறிந்து
வெருண்டொடுங்கிட்டாயோ கணவா - கணவா
ஓங்கிவனத்திற்சென்று ஒண்டியாகநின்று
ஓடியலைந்திட்டாயோ கணவா - கணவா (௧)

குலைந்ததானேனோடிக் குறுக்குமருக்குமோடி
குதித்துவிழுந்திட்டாயோ கணவா - கணவா
மலைத்துபுதர்களுக்குள் மரங்கள்செடிக்குள்ளாக
மதிகெட்டலைந்திட்டாயோ கணவா - கணவா (௨)

சாரியாகவளர்ந்து சமர்த்துமங்கேதளர்ந்து
தழைவில்லமேயினையே கணவா - கணவா
மீறியிருக்கப்பற்றி மிருகியாய்முன்குத்தி
மிருந்ததோவுதிரங்கள் கணவா - கணவா (௩)

புண்களாறியொப்பப் புனிதமடைவதெப்போ
புத்திக்கிசைந்தவெந்தன் கணவா - கணவா
கண்கள்நீர்சோருது காணத்துயர்மீறுது
கருத்துமுருகுதையோ கணவா - கணவா (௪)

### கொடிச்சி வசனம்.

ஆ - ஆ என்பத்தாவே உனக்கு இவ்விதமான துன்பம்வந்ததல்லவா மேல் காயமாறி வேட்டைக்கிப்போவதெப்போ என்னுயகனே.

## புத்திரர் விருத்தம்.

அருமையாய்ப்பெற்றெடுத்த வப்பனேசொல்லக்கேளு ... *
தருவளர்வனத்தில்வேட்டை தானாடப்போகும்போது ... *
அருகினில்வரவேசொன்னா லந்தகல்வேங்கைதன்னை ... *
யொருவம்பினாலேகொன்று வுன்னையும்விடுவிப்போமே ... *



### தரு - இராகம் - பிலகிரி - அடதாளம்.

கண்ணிகள்.

வில்லுடனம்பும்விளங்கப் பிடித்திட்ட ஐயா வெங்கும்
வீசும்வலைதடிகள் விரிந்தசக்கரமேந்தும் ஐயா
வல்லயமும்வாளும் வடிவாயெடுத்திடும் ஐயா அங்கே
வந்தபுலிக்கஞ்சியே மரத்திலேறிக்கொண்ட ஐயா (௧)

எங்களைக்கூட்டிக்கொண் டேகிவனம்போனால் ஐயா நாங்கள்
எதிர்த்தவேங்கையைக்கொன்று இரண்டுதுண்டாக்குவோம் ஐயா
பொங்கியகோபம் புறப்பட்டாலெங்களுக் கையா வல்ல
புலியைக்கையிற்பிடித்துப் போடுவோம்பூமிமேலையா (௨)

பிள்ளையாயெங்களைப் பெற்றுவளர்த்திநீர் ஐயா உடன்
பின்கூட்டிப்போனாலே பெருவேங்கையைக்கொல்வோமையா
தெள்ளியவித்தை திறமாகக்கற்பித்தீர் ஐயா அம்பில்
சின்னபின்னஞ்செய்வோம் திருமூர்த்தியெதிர்த்தாலுமையா (௩)

விட்டுவிட்டேபோயி மேற்காயங்கொண்டீரே ஐயா நீரும்
வீணாகவேயிந்த விதியும்பட்டீரிங்கே ஐயா
பட்டபாட்டைக்கண்டாற் பாணத்தைப்பூட்டியே ஐயா பகை
பண்ணும்வேங்கைதன்னைப் பதறவேகொல்லுவோம் ஐயா (௪)

### சங்குலன் வசனம்.

ஆ எனதுதந்தையே உம்மைப்பிடிக்கவந்த வேங்கையை யான்கண்டால் ஓரம்பினாலே கொல்லுவேனையா.

### மங்குலன் வசனம்.

எனதப்பனே யுமதுபின்றொடர்ந்துவந்த வேங்கையை யான்காணில் ஒரு பாணத்தினாற் கொல்லுவேனையா.

### கொடிச்சி வசனம்.

என்பிராணனாதனே நீர் நேற்றுமுதலாகப் பட்டினியிருந்தீரல்லவா நான் கொண்டுவந்த தினைமாவைப்புசித்துப் பசியாற்றிக்கொள்ளும் சுவாமி.

## பொது விருத்தம்.

இருசிறுவர்கூறுந் தாஷ்டீகங்கேட்டு ... ... *
இரங்கியவனெடுத்தணைத்து மடிமேல்வைத்து ... *
அருமிருந்தபுத்திரரு மனையாளோடும் ... ... *
அரும்பெரும்புமருஞ்சுனைநீ ராடிவந்தான் ... ... *

பெருமைபெருந்துடியிடையாங் கொடிச்சிதானும் ... *
  பேணியேகொண்டுவந்த தினைமாத்தன்னை ... ... *
உரிமையுடன்மனையவட்கும் புத்திரர்க்கும் ... ... *
  உதவியேதானுமெடுத் துண்டிட்டானே ... ... *

தரு - இராகம் - பூரிகல்யாணி - அடதாளம்.

பல்லவி.

உண்டானேமாவை விரதம்போல் கொண்டானேமாவை

அநுபல்லவி.

வண்டார்த்திடுஞ்சோலை வடபுறத்துறையிலே
பெண்டிருடன்பிள்ளை பேறுமக்களையிலே (உண்)

சரணங்கள்.

மானினம்விளையாட வனத்தனில் வரையாடுதழைதேட
வானரங்கிளைசாட மந்திகள் மரமதிற்சறையாட
தேனீகள்கூடித் திரண்டுபரந்திடத்
தானநாமாவினிற் சுக்கியுறைந்திட (உண்)

அன்னமும்வந்திருக்கும் கொஞ்சிய அஞ்சுகமுஞ்சிறக்கும்
தன்னினத்துடனேபறக்கும் பாவைகள் சாயல்மயில்பெருக்கும்
முன்னாட்பகலிரா முழுதாட்பொசியாமலப்
பின்னாலருணனும் பிறக்கவசையாமல் (உண்)

அல்லியும்பூத்தலரும் சுனைதனில் அம்போருகக்கலரும்
மல்லிகைமாமலரும் பெருகிய வாசமென்பாரிலரும்
செல்வரிருவருந் தேவியுமேகூடி
வில்லிற்சிறந்திடும் வேடனுமேயாடி (உண்)

பொது வசனம்.

வேடனானவன் தன்பெண்சாதிகொணர்ந்த தினைமாவைச் சுனையோரத் திருந்து குழந்தைகள் பெண்சாதி தானுமாக விரதமிருந்தவர்களைப்போலுண் டார்களென்றறிக.

## அங்குலன் விருத்தம்.

மாவதைப்புசித்தங்கன்றாய் மலர்ச்சுனைநீரருந்தி ... ... *
மேவியசோலைதன்னி லிருந்துமெய்ச்சலிப்புந்தீர்ந்தோம் ... *
தாவியேமனைக்கிப்போது தானினிப்போவோமென்கன் ... *
மேவியேதனையரோடு திறமுடன்வருகுவாயே ... ... *



தரு - இராகம் - எமுனாகல்யாணி - அடதாளம்

கண்ணிகள்.

இருந்தசோலையைவிட்டு எகுவோங்குடிசைக்குத்தானே
சிறந்தபாலகரே தேவியேயென்னிட தேனே (க)
வளைதடிசக்கரம் வலையுமிவாளையுமெடுத்தேன்
தழைவனந்தன்னிற் றடமதுதேடிதானடுத்தேன் (உ)
எரும்பாதைக்களி லேனமான்முயலுமோடுதே
தோகைமயிற்குயில் சோலைக்கிளிகளுங்காடுதே (௩)
காடைசான்கோழி கௌதாரியும்புறாமேயுதே
சாடையாய்வான்கோழி சாவலுட்டுடியோயுதே (ச)
இந்தவதிசயமின்ன மனைகண்களுண்டுபார்
அந்தமுடையவென்றனைக் கண்டுட்டியுன்சிந்தைதேர் (ரு)

## பொது விருத்தம்.

பதிதனிலேயங்குலனுங் கொடிச்சிகூடப் ... ... *
  பாலகரும்போயிருந்தார் பண்புதாக ... ... *
மதிவரவுமேமயங்கித் தூங்கிராவு ... ... *
  மலர்ந்தசெந்தாமரைபோல விரவிதோன்ற ... ... *
நதிநீரால்நற்றினையை நலமாயட்டு ... ... *
  நால்வருமப்பொழுதமுது நாடியுண்டு ... ... *
அதிகசுகமாகவந்த விருந்துவாழ்க ... ... *
  வங்குலனுமறிய தவமணுகினனே ... ... *

பொது வசனம்.

எப்படியெனில் வேட்டைக்குப்போன வேடன்பெண்சாதி பிள்ளைகளுட ன குடிசைவந்து இருக்க அஸ்தமானமாயிற்றப்போழ் தவ்விரவினித்திரை செய்துதையத்திற் கொடிச்சிப்பெண்ணெழுந்து சுனைநீரெடுத்துத் தினையரியட் டுப் புசித்ததெவ்விதமெனில் சதுர்த்தசியில் நிர்ச்சலமுமன்றிரவிற்றுயிலற்று மறுநாட்டினைமாத்தின்றதும் சுனைநீராடினதும் எவ்விதமாயிற்றெனில் விரத நேர்ந்தது போலிருந்தது தனக்குத்தெரியாததால் அதிகதவத்தையடைந்தான் வேடனென்றறிக,

## பொது-விருத்தம்.

மனைதனிலிருந்தவேடன் மற்றுநாள்வேட்டைக்கேகிச் ... *
சினமுடன்மிருகம்பக்ஷி சிதைத்ததைத்தின்றபின்னும் ... *
தனிவழிப்பழியுமாதர் தன்கற்புமழித்துநின்றே ... ... *
தினமுமிப்படியேசெய்து திட்டுடன்வருமன்னாளில் ... *

### பொது வசனம்.

வேடனானவன் பின்னும் முன்போலவே வேட்டைகள் சிலநாளாடிவரு கையில் வயதுசென்று மிகுந்தமெலிவடைந்திருந்தா னக்காலத் திவனைமிகுந்த பாவியென்று இயமனானவர் தன்றூதர்களிட மிவனைப்பிடித்துவரும்படி விதித்தா ரக்காலத்தத்தூதர்களிவனைப் பற்றவருகிறதெவ்விதமெனில்.

## இயமன்வருகிற விருத்தம்

சூராதிசூரர்நரர்முனிவர்விண்ணோ ராகிலுநற்றொழிலைவிட்டு *
வேறானபாபமெலாஞ் செய்பவரைப்பாசத்தால்வெருளக்கட்டி
காராசஞ்செவியிலிட்டு அக்கினியிலேகருக்கிநரகிற்போட்டு *
மாராணியெடுத்தறையுமெம ராஜன்கொலுவதிலேவருகின்றனே

### தரு - இராகம் - மோகனம் - அடதாளம்.

பல்லவி.

இங்கிதமாகவே யமராஜேந்திரனிருந்தான் கொலுவதனிலே இதோ

அனுபல்லவி.

பொங்கிச்சிவந்தகண்ணும் பூதராசஷதர்சூழ
செங்கையிற்பாசமுந் திரிசூலமும்மிளிர (இங்கித)

சரணங்கள்.

நன்னயவுடைகளும் நாகரீகப்பணியும்
நவமணிக்குண்டலமுந் துலங்கவே
சென்னியிலேமகுடஞ் செங்கதிரொளிமின்ன.
சிலைநுதற்பொட்டு நின்றிலங்கவே (இங்கித)

இத்திமத்தளதாளஞ் சின்னந்தம்பூருவீணை
செவிடுபடவதிர்ந்து கலங்கவே
சுத்தங்கேளிக்கையாய்த் தோகையர்கணிடிக்க
சொருகுடன்கவரிகள் குலுங்கவே (இங்கித)

கொடியுடனேடாலுங் குடையுமிருல்பரவ
கோலபாணங்களுடன் சூடவே
படிமிசைபகல்போல பகல்வத்திநிவட்டி
பக்கலிலேவந்து கிடவே (இங்கித)

கர்மஞ்செய்தபேரைக் கட்டிப்பிடித்துவந்து
கருக்கிநரகதனிற் றள்ளவே
தர்மஞ்செய்தபேரைத் தான்பிடியாமலே
தவறும்மலரசாட்சி கொள்ளவே -(இங்கித)



## இயமன்சொல்விருத்தம்.

ஏதுகாரியஞ்சொன்னாலு மென்சொலைத்தட்டிடாமல் ... *
சாதுவாய்ப்பணிகள்செய்யுஞ் சமர்த்துளகட்டியக்காரா ... *
தூதரையிக்கணத்திற் றுரிதமாயழைப்பீர்நீவிர் ... ... *
நீதாவிளங்குமென்மன் றிருக்கொலுவதனிற்றனே ... ... *

### இயமன்சொல் வசனம்.

அடாவாடாகட்டியக்காரா நம்முடையதூதர்களை அதிசீக்கிரமாயழைத்துக்கொண்டுவாடா கட்டியம்.

### கட்டியன்சொல் வசனம்.

அப்படியேஅழைத்துவருகிறேனையா சுவாமி.

## பொது விருத்தம்.

திட்டமுள்ளதூதரெல்லாஞ் சேர்ந்தொருமுகமாய்க்கூடி ... *
கொடிதனிலுடுப்பும்போட்டு நாற்கச்சுவரிந்துகட்டிச் ... *
தடுதிமிற்பாசஞ் சூலந்தங்களாயுதமெடுத்து ... ... ... *
மட்டமடவெனநடந்து வந்திட்டாரெமன்முன்றனே ... ... *

### தூதர் வருகிற தரு - இராகம் - தேசிகதோடி - ஏகதாளம்.

பல்லவி.

தூதர்கள்வந்தாரே எம காதகர்வந்தாரே

அனுபல்லவி.

நிதுயினைத்திட்ட பாதகரைக்கட்ட (தூத)

சரணங்கள்.

உருட்டிமிகவிழித்து இருப்புலக்கை கையிலெடுத்து
குறட்டையுமிடுக்கியுமே சூலக்கோலையுங்கையிற்பிடித்து (தூத)
வீசும்வலைகளுடன் நல்ல வீச்சரிவாளேந்தி
பாசக்கயிறுடனே வந்து பலபேர்களுந்தோன்றி (தூத)

இருண்டவனம்போலே எல்லா மேசமதாய்க்கூடி
திரண்டுநடந்தாரே எயன் செங்கோல்முன்னாடி (தூதர்)

### தூதர்கள் வசனம்.

சரணஞ்சரணம் எமதர்மராஜனே எங்களையழைத்த காரியம் தெரியப்படச்சொல்லவேணுமையா சுவாமி.

## இயமன்சொல் விருத்தம்.

செழிப்புடையவில்வவனக் தன்னிற்றானே ... ... *
சிலையதனுற்பட்சி மிருகமுஞ்சிதைத்து ... ... *
வழிப்பறியும்புலைகொலையு மாதர்சர்ப்பும் ... ... *
வலவந்தமாயழித்து வயதுஞ்சென்ற ... ... *
கிழப்பருவவங்குல வேடனைப்பிடிப்போ ... ... *
சித்திருள்ளபாசத்தா லிறுகக்கட்டி ... ... *
தழைத்திடுமென்கொலுமுகத்திற் கொணர்ந்தன்றேன்றால் *
குடல்சரித்துச்சிக்கிரமிற் றள்ளுவீரே ... ... *

### இயமன் வசனம்.

அடாதூதர்களே வில்வவனத்தில்வாழும் அங்குலவேடனென்பவன் மிருகம் பக்ஷிகளைவதைத்தும் வழிப்பறிமுதலான வனேகபாபங்கள்செய்து விருத்தாப் பியனாகவிருக்கிறான் அவனுக்கு இன்றுடன்ஆயுள்சென்றது ஆகையால் நீங்கள் சென்று அப்பாதகனைப்பிடித்துவாருங்கள் தூதர்களே.

### தூதர்சொல் வசனம்.

எங்களுடையசூலாயுதங்கொண் டவனைக்குத்தி பாசங்கொண்டு பிணித்து அதிசீக்கிரத்திற் கொண்டுவருகிறோம் சுவாமி.

## அங்குலனிடம் தூதர்கள் வருகிற விருத்தம்.

அக்கினிப்பொறிகள்சிந்த வறைந்தனனெமராஜேந்திரன் ... *
தக்கதோர்சூலம்பாசந் தனையெலாங்கையிலெடுத்துத் ... *
திக்கெனநடந்துவில்வஞ் செறிந்தநற்காட்டினுள்ளே ... *
கொக்கரித்திருக்கும்வேடன் குடிசைமுன்குதிப்போம்வாரீர் *

தூதருக்கு மங்குலனுக்கும் சமவாதம்.

தரு - இராகம் - பந்துவராளி - அடதாளம்.

கண்ணிகள்.

தூதர்கள் சொல்.

பாசக்கயிறெடுத்துவீசிப்பிடித்திவனைக் கட்டுவோம் பின்பு
பதைத்துப்புவியில்விழ வுதைத்துக்குடல்சரியவெட்டுவோம் (௧)

அங்குலன் சொல்.

பேசிக்கொண்டேயென்முன் னேசித்துமிம்பளாருசொல்.உங்கள்
பெருத்தவுடல்சரியக் கறுத்தவுதைத்திடுவேன்றூரமில் (௨)

தூதர்கள் சொல்.

காலமதனிலுன்றன் கோலப்புறக்கலங்கட்டுஞ்சூதர்கள் நாங்கள்
நீலநிறமுடைய காலனனுப்பவந்ததூதர்கள் (௩)



அங்குலன் சொல்.

ஆலவிட்டம்போற்பாச மேவிட்டுகட்டுவதென்னவீண் இங்கே
அடிக்காதுவுங்கட்கு இடுக்கண்விளைந்திடுமகலுங்காண் (௪)

தூதர்கள் சொல்.

சமனெனவேசொல்லு மெமதர்மராஜனென்றறியாயோ நாங்கள்
சாடிப்பிடித்துன்னைக் கூடக்கொண்டேபோவோந்தெரியாயோ (௫)

அங்குலன் சொல்.

எமதுமுன்பேசினல் நிமிஷத்திலோரம்பாற்கொல்லுவேன்நானும்
இசுஷணமுங்களை மிச்சமில்லாமலேவெல்லுவேன் (௬)

தூதர்கள் சொல்.

கோபமுனக்கென்ன பாபங்கள்செய்திடும்பாதகன் உன்னை
கொண்டின்றியமபுரி தண்டிக்கச்செய்வதெம்தோதகம் (௭)

அங்குலன் சொல்.

கோபத்துடனேயம னுபத்தைச்செய்துமுன்னிறப்பனேல் தலை
குதிக்கச்சக்கரத்திறற் பதைக்கவிப்போதேனுறுப்பனே (௮)

தூதர்கள் சொல்.

சோபமாய்ப்பெண்பிள்ளை தாபத்துடனழுதாகவே கட்டித்
தூக்கியமபுரிநீ பார்க்கச்செய்வோம்நாங்கள்மேவியே (௯)

அங்குலன் சொல்.

மாபத்தியாம்பெண்டீர் பூவொத்தவென்சிறுசீலரே யமன்
வாக்குறைப்பிடியென்னைத் தூக்கிப்போறார்தூதர்பாலரே (௰)

### அங்குலன் வசனம்.

ஆ எனதுபிராணநாயகி ஓ எனதுகுழந்தைகளே என்னையெமதூதர்கள் பிடித்துக்கட்டிக்கொண்டு போகிறார்கள் யானென்னசெய்வேன் பெண்சாதி பிள்ளைகளே.

## பொது விருத்தம்.

பெண்டுபிள்ளைகள் பேணியழுகவும் ... ... *
அண்டமுந்திசை யாவுமதிரவே ... ... *
கொண்டல்போலடர்ந்தே கொடும்பாசத்தால் ... *
கொண்டுவேடனைக் காலர்களேகினார் ... ... *

## கொடிச்சிசொல் விருத்தம்.

தூதருன்றந்தைதன்னைத் தானுக்குடன்கட்டிப்போனார் ... *
ஆதரவில்லையிந்த வடவியிலெமக்கிப்போது ... ... *
ஏதினிச்செய்வோமப்பா வென்றலையெழுத்துத்தானோ ... *
நீதிசேர்கணவன்றன்னை நினைந்துளம்வாடினேனே ... ... *

தரு - இராகம் - பரசு - திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

எமபாசங்கொண்டுவந்தோ தூதர் இறுக்கிக்கட்டினார்களந்தோ
நமன்பார்ப்போனேபொய்யோ விங்கே நானழுதுநின்றேனையோ
என்னதான்யான் செய்வேனோ நீங்கவென்றலையெழுந்துந்தானோ
உன்னை நினைந்தழுது நான் உருகியேன் நாள்முழுதும் (௨)

கூடவே கூட்டிப்போனால் வந்து கூட்டுறவாவேனானால்
வீடென்பதாசை யில்லை அன்ன மீதிலே காதலல்லை (௩)
பழக்கம்மறந்திட்டாயே தனியாய் பாரில்கடந்திட்டாயே
உளக்கவலைவிதியோ இது உன்மனக்குச்சம்மதியோ (௪)

தந்தைதாய் நீயென்றே பாவி சண்டாளிநம்பினேன்
முந்தியோநானுஞ்செல்வேன் இந்தமோசத்துக்கென்னசொல்வேன்
பூமியில்வாசந்தொல்லை அய்யா பூமலர் நேசமில்லை
சாமியேயுன்னைவிட்டு நானுஞ் சகிப்பேனோ உள்ளமட்டும் (௫)
வீரியதீரா சூரா உனக்கு விதியுந்தானோமாரா
காரிகைகைதொழுதேன் கண்ணீர் மண்ணிற்சொரிந்தழுதேன் (௬)

கொடிச்சி வசனம்.

உங்கள் தந்தையைக் காணோமே புத்திரரே.

## கொடிச்சி விருத்தம்.

துயரமுமிகவேகொண்டு சொற்களும்பலதும்விண்டு... *
வயிறதின்மேலடித்து மண்ணில்வீழ்ந்துடலதுடித்தாங் *
கயல்விழிதனில் நீர்வாரக்கதறுமென்குரலுஞ்சோர ... *
அயர்வுமென்மேலுமீறிவிழுகின்றேனழுகின்றேனே ... *

தரு - இராகம் - முகாரி - அடதாளசாப்பு

ஒப்பாரிக் கண்ணிகள்.

அகமகிழ்ந்துநானிருந்த சுகமொழிந்து போய்வருந்த (௧)
அயப்போரிங்கானதுவே சுபப்போரும்போனதுவே (௨)
அசமான்கரடிபுல்வாய் வசமாய்த்துணிந்துமெல்வாய் (௩)
அறுநாளுமீண்டாயோ பிறுகன்றுள்பூண்டாயோ (௪)
அடல்புரியுமென்னுகா தடவரையேழும்பாதா (௫)
அணங்கென்றறியாயோ குணந்தான்தெரியாயோ (௬)
அதரச்சுவைதருகும் மதுரச்சுவைபருகும் (௭)
அநகனெனவீயானும் மனவிதனநானுனேன் (௮)
அபமாகினான்பறக்க சுபமாயினுய்ச்சிறக்க (௯)



அமரர்கண்டாலொளிவார் சமரில்நின்றாழிவார் (௰)
அயவாட்கரத்தவனே சயம்போகிறத்தவனே (௰௧)
அரசாகவெண்ணினின்றாய் பரலோகநண்ணுகின்றாய் (௰௨)
அலகைகண்டாலோடும் உலகர்சென்டாயாடும் (௰௩)
அவனிதனிற்பெண்டாய்ச் சவனித்தெனைக்கொண்டாய் (௰௪)
அழகர்னவின்மனனே இளகாதகன்மனனே (௰௫)
அளப்பறியப்போர்நாடி இளப்பம்வரநீவாடி (௰௬)
அறனுர்பதிகார்த்தாய் பரனுர்பதிபார்த்தாய் (௰௭)
அனந்தந்துதிபாரும் மனந்தன்னுடன்சேரும் (௰௮)

கொடிச்சி வசனம்.

ஓ எனது பிள்ளைகளே உங்கள்தந்தையை எமதூதர்கள்பிடித்துப்போய் விட்டார்கள் நான் எப்படிமனஞ்சகிப்பேனென் கண்மணிகளே

புத்திரர்கள் வசனம்.

கேளும்மம்மா தாயே வயதுசென்று பறந்துபோன தந்தைக்கு நீ இறங்கி யழுதால் இனிவரப்போகிறதுண்டா நமது துக்கந்நிவர்த்தி செய்துகொள் வோம் அம்மாதாயே.

## பொது விருத்தம்.

அழுதவன்னையைத்தான்றேற்றி அப்பனுக்கினியகர்மம் *
வழுவியேபோய்விடாமல் வனந்தனின்மார்க்கமாகப் ... *
பழுதறத்திரவென்றே பாலகர்முடித்துவந்து ... *
தொழுதுதங்குடிலின்மூவர் சுகித்துமேயிருந்திட்டாரே *

பொது வசனம்.

மங்குலன் கங்குலனெனவுரைக்கு மிரண்டு பிள்ளைகளுந்தகப்பனுக்குச் செய்யவேண்டியகர்மத்தைமுறையுடன் செய்துமுடித்துத் தன் தாயாளவண ங்கிமுவர்களுங்குடிசையில் சுகமாகவாழ்ந்திருந்தார்கள்.

## பொது விருத்தம்.

காலனிட்டூதர்களொன்றாகக்கூடிக் ... ... *
கடுங்கோபங்கொண்டெழுந்து ஓடிநாடி... ... *
ஆலமதைப்போற் சீறிப்பாசத்தாலே ... ... *
அங்குலனைப்பிடித்திழுத்துக் கொண்டுபோக ... *
நீலகண்டர்சிவஞானக்கருத்திலுற்று ... ... *
நெடுவேடன்றவம்புரிந்தானென்றேயெண்ணிச் ... *
சீலமுள்ளகணநாதர் தம்மைக்கூவச் ... ... *
சிந்தித்தார்தன்மனத்தில்மூர்த்திதானே... ... *

## ஈசன் வசனம்.

எனது பாதசேவையைவகித்தகட்டியக்காரானென்னை நோக்கித்தவம்புரிந்தவ் வில்வவனத்தில்வாழுமங்குலவேடனை எமதூதர்களிழுத்துப்போகிறார்களானதா லக்கணநாதரையழைத்துவாடா கட்டியம்.

கட்டியன் வசனம்.

அப்படியே அதிசீக்கிரத்திலழைத்துவருகிறேன் சுவாமி.

கட்டியன் வசனம்.

அகோ வாரும் பிள்ளாய்கணநாதரே மந்தரநேர்புயசந்திர சேகரவந்தரி கந்தரன் விந்தையுடனும்மை யழைத்துவரும்படிசொன்னாராகையால் வாரும் கணநாதரே.

## பொது விருத்தம்.

மந்திரமிதுவென்றேதான் மகிழ்ந்துகட்டியன்சொற்கேட்டு *
சந்தியானங்கள்செய்து சகலகர்மமுமுடித்து ... ... *
விந்தையாய்விபூதிபூசி விளங்கவேசோமன்கட்டிக் ... *
கந்தனார்தன்னைப்பின்ற கடவுள்முன் கணம்வந்தாரே ... *

தரு - இராகம் - தன்னியாசி - அடதாளசாப்பு.

பல்லவி.

நாதர்கள்வந்தாரே - சிவகண - நாதர்கள்வந்தாரே

அநுபல்லவி.

நாதர்கள்வந்தனர் சாதுவுடன்றுணிந்து
ஸ்ரீதரன்மைத்துனன் பாதந்தனைப்பணிந்து (நாதர்கள்)

சரணங்கள்.

மெய்யில்விபூதிதரித்துப் பஞ்சாக்ஷரம்
விரும்பிநாவினிற்குறித்து
கையிலுத்திராக்ஷம்வரித்துச் சிரசிலும்
கழுத்திலுமேதரித்து
கொய்தமல்லிகையெல்லவுஞ் செய்புக்குடலைசேர்த்து
ஐயன்பூசைநாடி யுய்வோமென்றெதிர்பார்த்து (நாதர்கள்)

கூட்டமாகக்கூடி யெல்லாவருங்
கொண்டல்போல நீடி
ஆட்டபாட்டமாடி ஆனந்தமாய்
அரகர வென்றுபாடி
நீட்டமாஞ்சடைகளாட்டி யாட்டிமலர்
தாஷ்டிகம்பெருகச்சூட்டினர்கள் சிலர் (நாதர்கள்)



சேகண்டிமணியாட்ட சங்குடன்சிங்கஞ்
செய்செய வெனமுட்ட
போகதண்டிகைநாட்ட சிவன்காரத்
தொளிர்திரிசூலங்காட்ட
ஏகமாய்முனிவராகவந்து சூழ்
வானைபுனைந்தமகேசர் தாளில்விழ (நாதர்கள்)

## கணநாதர் போற்றிக் கவி.

நீறணிமேனி யாரணுபோற்றி காரணமான பூரணுபோற்றி

கவி.

கூவியதாக மேவினேனுநீரும் காவியமாக நாவினிற்கூறும்.

கணநாதர் வசனம்.

கைலாயத்திற் சிவமூர்த்தமாக விளங்கா நின்றதேவனே எங்களைய ழைப்பித்தகாரியந்தெரியப்படசொல்லவேணுமையா நான்மறைப்போதனே.

## ஈசன் விருத்தம்.

உரையென்றுகேட்டிரெந்த ணுண்மையாங்கணமேகேளீர் ... *
தரையிலங்குலனும்வேடன் றவமதுபுரிந்ததாலே ... ... *
இறையவேபிடித்துக்கட்டி யேகினுரெமபுரிக்கே ... *
மறையுமுன்கொணர்வீரென்ன விரைந்திட்டேனறைந்திட்டேனே

## ஈசன் வசனம்.

ஓய்கணநாதரே வாருங்கள் வில்வவனத்தி லங்குலவேடன் றன்னையறியா மலென்னைனோக்கிசிவன்ராத்திரியில் வேங்கைக்கஞ்சி வில்வமரத்திலேறித்து யிலாமலுன்றளிர்களைப்பறித்தர்ச்சனை செய்தவனையமதூதர்பிடித்துப்போகிரு ர்கள் நீங்கள் சீக்கிரம்போய்த்தடுத்துக் கூட்டிக்கொண்டுகைலாயம்வந்துசேரு ங்கள்.

கணநாதர் விருத்தம்.

கடவுளருறைகைக்கொண்டு கடுஞ்சினமிகவேமீறி ... *
விடுவிடென்றெனவே தண்டிம்விசால்மாஞ்சூலமேந்தப் *
பொடிபட்டகட்டதெல்லோரும் போகாதீர்தூதரேநீர் ... *
வடிவுடன்வேடன்றன்னை விட்டிங்கேமொழிகுவீரே ... *

தரு - இராகம் - பூபாளம் - அட தாளம்.

கண்ணிகள்.

கணநாதர் சொல்.

அங்குலனைப்பிடித்தாண்மையாய்ப்போகிற
சங்கதிசொல்லிமுன்றாண்டியேபோவீர் (க)

தூதர் சொல்.

தாண்டிவந்தசிவன்றன்னுடையகணமே
ஆண்டவனெமராஜனுக்கினையாரீர் (௨)

கணநாதர் சொல்.

ஆக்கினைப்படியென்றீரானுலிவன்முன்னே
மூர்க்கமாய்ச்சிவதவம்முடிக்கச்செய்தானே (௩)

தூதர் சொல்.

முடிக்கச்செய்தானென்றுமொழிவததுவேபொய்
படியிற்பழிகொலைகற்பழித்திடும்பாவி (௪)

கணநாதர் சொல்.

பழித்தபாவியென்றாலும்பாணுக்கடியனுக்கட்
டழித்துவிட்டுவிட்டுஅப்புறம்போங்கள் (௫)

தூதர் சொல்.

போங்களென்றுசொன்னாற்புகலக்கேளுமிங்கே
இங்குசெய்வதேயல்லால்சிவனென்றுசெப்பான் (௬)

கணநாதர் சொல்.

சிவனென்றுசெப்பாததிம்பாவியானாலும்
தவமதுவிளைத்ததுதான்பெரிதாமே (௭)

தூதர் சொல்.

பெரிதுசிறிதென்றுபேசினாலும்விடோம்
சரிசரியப்புறந்தானேடுங்கணமே (௮)

கணநாதர் சொல்.

தானேயப்பாலேபோஞ்சாற்றுவோங்கெண்டினால்
வானவருங்கலங்கமண்டையைக்கிழிப்போம் (௯)

தூதர் சொல்.

கிழிப்போமென்றுசொன்னகேவலக்கணங்களே
ஒழிக்கவுயிர்களையுமுடைப்போமண்டைகளை (௰)

கணநாதர் சொல்.

மண்டையிலடிபட்டுமண்ணிற்றூதர்வீழக்
கண்டாயோவங்குலாதிபெறவாவா (௰௧)

கணநாதர் வசனம்.

பரமேசுவரர்பதம்பெற்றாய் பயப்படாதே அங்குலவேடா.



## கணநாதர்விருத்தம்

பாசத்தையவிழ்த்துவிட்டுப் பயந்தவுன்றனையாமீட்டோம் *
நேசமாய்நன்னீராடு வித்தன்றன்புகழைப்பாடு ... ... *
ஆசையாயெங்களோடே அங்குலாகைலைகாண ... ... *
இராசவைபோகமாக இரதம்வந்ததின்றுபாரே ... ... *

ரு - இராகம் - ஆனந்தக்களிப்பு - நாதனாமக்கிரியை - அட்டதாளம்.

கண்ணிகள்.

சீர்பெருகுங்கைலாசபதியில் வாசஞ்
செய்தருளுஞ் சிவஞானதேவர்தம்விதியில்
பார்புகழப்புட்பகவிமானம் விஸ்வன்
படைத்துவிட்டான்வரப்பார்ப்பார் சுமானம் (௧)

விண்ணவர்கள்மலர் கொண்டுபொழிய வதனை
மிதியாமலிவரொலாம்விலகினார் தெளிய
எண்ணற்றதவமுனிவர் கூட்டம் சித்த
ரிவருடன்காந்தருவரொல்லாருநாட்டம் (௨)

அஷ்டதிக்குப்பாலர்சூழத் தெய்வ
அரம்பையர்கள்கவரியாலாத்திகள் நீள
பட்டுக்குடைகள் பிடிக்க டால்கள்
பாங்குடன்றுந்துமிகள்பழக்கமாயடிக்க (௩)

சங்கீதமொருபுறமுழங்க வீணை
சல்லரிகள்மத்தளதாளமும்விளங்க
சிங்காரவைபோகமாகப் பதவி
சேருவாய்நீயின்று சிவன்கைலைக்கேக (௪)

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாகக் கணநாதர்களிம்பட்டானை யடித்தங்குலனையழைக்குஞ் மயத்திற் காளகண்டதிரிநேத்திர சடாமகுடதார ரவ்வேடன்பேரிற் பரிபூரண டாக்ஷம்வைத்து முப்பத்துமுக்கோடிதேவர்களும் சிவகணங்களுஞ் சூழ்ந்து ருகத்தனதிரதத்தைப்பூலோகத்திற்கனுப்பின ரச்சமயத்திலங்குநாரதபகவான் ருகிறவிதங்காண்க.

## நாரதர் வருகிற விருத்தம்

நால்வேதமறுசமையம்பதினெண்புராணம் ... ... *
ஞானமுடன்றத்துவஞ்சனன் மூப்பாட்டம் ... ... *

வளர்சிவாலயங்களாயிரத்தெட்டும் ... ... *
மால்வாசமானதிருப்பதிநூற்றெட்டும் ... ... *
வேல்நாதனென்னுஞ் சுப்பிரமண்யன்மேவி ... ... *
விளங்குபழனிப்பதியும்விரும்பிக்கண்டேன் ... ... *
பால்போலக்கண்டமொழிபுரைப்பதாலே ... ... *
பலரெனைநாரதனென்றுபகர்ந்திட்டாரே ... ... *

தரு - இராகம் - ஆரபி - அடதாளம்.

பல்லவி.

வேதநாரதனென்பாரே புவனமெங்கும்
விளங்கிடுமுங்குமென்பேரே

அனுபல்லவி

சோதிசுருபமான நூலங்குஞ்சுந்தரமேனான
நாதனைப்போற்றிக்கானராகம் விளைக்கும்ஞான (வேதநா)

சரணங்கள்.

கதிபெருந்தீர்த்தமாடும் காயாசந்தனமோடும்
பதிவாய்மகுடஞ்சூடும் பரமானந்தத்திலாடும் (வேதநா)
வெண்ணீர்மெய்யெங்குமிட்டு விளங்கநெற்றியிற்பொட்டு
தண்ணீர்கரத்திற்றொட்டு சந்தியானஞ்செய்துகொட்டும் (வேத)
இருக்கவேபுலித்தோலுமிலங்கமார்பிற்பூணூலும்
சுருக்கமாய்வேதநாலுஞ் சொல்லுவேனென்றுமேலும் (வேத)
கரத்திலுத்திராக்ஷங்கொண்டு கமண்டலந்தோளிற்கொண்டு
சிரத்திற்சடையுமுண்டு சிவனையபிஷேகம்பண்டு (வேதநா)
சிவசுப்பிரமண்ணிய திருமூர்த்திசாமி துதிக்கும்
தவமுற்றசுந்தரே ... ளபவாங்கிதேகதிக்கும் (வேதநா)
அங்குலனுக்குமந்திரம் அநுஷ்டானஞ்செய்யுந்தந்திரம்
இங்கேயுரை பேன்சுதந்திரம் எழிலாயெழுதுமெந்திரம் (வேத)

நாரதர் வசனம்.

அகோவாரும்பிள்ளாய் அங்குலவேடா என்பெயர் வேதநாரதனென்றுசொல்லுவார்கள். ஆகையாலுனக்குப்பஞ்சாக்ஷரமந்திரோபதேசஞ்செய்கிறேன் கேட்டுக்கொள்ளும் பிள்ளாய்.

அங்குலன் வசனம்.

அப்படியேகேட்டுக்கொள்ளுகிறேன் சுவாமி நாரதமகாமுனிவரே.



நாரதர் விருத்தம்.

என்றுமிகப்பழிபாவமண்ணிற்செய்து ... ... ... *
இரக்கமிலாக்கனமனவங்குலனே வாவா ... ... *
இன்றுவுன்னையமதூதர்பிடித்துப்போக ... ... ... *
இன்பமுளசிவகணமும்விலக்கிவிட்டார் ... ... ... *
நன்றுகைலாயபதி ஈசன்பாதம் ... ... ... *
நாடியேசாயுச்சியம் நன்றாய்க்காண்பாய் ... ... ... *
ஒன்றிரண்டுமூன்றுநாலோ ரைந்தான ... ... ... *
வுறுதிபஞ்சாக்ஷரமந்திரமுரைப்பேன்கேளாய் ... *

தரு - இராகம் - மத்தியமாவதி - அடதாளம்.

பல்லவி.

பஞ்சாக்ஷரமந்திரம் பகருகிறேன் படித்துக்கொண்டாம்சுந்திரம்

அனுபல்லவி.

பஞ்சாக்ஷரமந்திரம் பரமானந்தமாம்
பாவவினையகற்றும் பரப்பிரம்மபிரணவம்
அஞ்செழுத்ததுவாகி யண்டபிண்டங்களாய்
அப்புறமவருமசிவய நமவென்றறிதவம் (பஞ்சா)

சரணங்கள்.

கணபதியேநமவென்றுசிரசிலிரு காதலரமாரிகுட்டு என்றும்
கருத்திலுலறகுருவேநமவென்றுதான் கருதிக்கொள்வாய்கும்பிட்டு
குணசிவாயநமவெனச்செம்புச்சலந்தன்னை குடித்துக்கைகூடிதொட்டு பின்பு
க்ஷரஸ்தராயநமாவாவகாட்டிப்பெருவிரல் கொண்டெட்டுஞ்சணடிவிட்டு
க்ஷணமேசலத்தைதமுடிப்பதிறைருமந்திரந் தாக்கியுச்சரித்துக்கட்டு ஈசு
தானீசானமூர்த்தியாயநமாவென்று தனைமுன்புசேர்ப்பயொட்டு
அனுதற்புருடபத்திராயநமாவென்று அரையொழுங்காகப்பட்டு நன்றாய்
அகோரயிர்தயாயநமவென்றுரைத்துட னருள்வதுகேள்பின்னிட்டு
ஆதிவாமதேவகுஹியாயநம அம்சத்தியோசாதமூர்த்தியாயநம
சோதிசொருபஇருதயாயநம நூலங்கின்றிலங்கியசிரசாயநம
நீதியாகவஜோர்ந்தோங்குசிகாயநம நினைப்புள்ளிருந்துதோன்றுங்கவசாயநம
ஓதுவதனைநோக்குநேத்திராயநம உறையஸ்தராயநமவஸ்தராயநம
ஒளிர்சிரமீது பவித்திரவிரலினால்
உடன்சலந்தன்னைப் புரோக்ஷித்துவிட்டிடு
வளரிருதாயநமா வென்றுசலம்பினபு
வாங்கிமூன்றுதர மருக்கியங்கொடுத்திடு (பஞ்சா)
ஆசனஞ்செய்வதுஆத்மதத்வாயநம அப்புறங்கூர்வதுபார் வித்தி
யாயதத்வாயநமசிவதத்வாயநம அப்படிவே இவைமூன்றுங்கூர்
வாசமானமெய்துடைக்கஅஸ்திராயநமா வழங்கிமூன்றுதரந்தேர் முன்பு

வாழுிம்பெருவிரலும்பெளத்திரவிரலுமே மழுவேதொட்டுடுநேர்
நேசிசர்வாயநமநாசிகெண்காதுதோள் நெஞ்சமுழங்காலுஞ்சேர் மேலே
நிற்றுமாகாயவெளவேலிகாயநம நீதொட்டுச்சினகசிரங்கார்
பேசிக்கவசாயநமவென்றுஆள்காட்டி விரல்ரெண்டுபிரித்துமுன்சார் உடன்
பேணியேநேத்திராயநமவெனவேகண்டு பெருவிரல்மடக்கியேயார்
பெருகியவிரலாறுந்தரிசனமாகச் செய்பின்னஸ்தராயநமவென்றுனாநாட்டி
தெரியவலதிடக்கைஸ்யமூன்றுபின்துஞ் சேரவிடாமற்றடவியுடன்காட்டி
பரிவுடன்சிவயநமவென்றுதிருநீர் பாங்காயிடக்கரம்வைத்துத்துடைநீட்டி
அறிவுடனேகவசாயநமாவென்று அன்பாய்வலக்கரமதனில்மூடிக்கூட்டி

அஸ்தராயநமாவென்றங் கெட்டுத்தரம்
அஷ்டதிக்குப்பந்தனத்தை யோதிக்கட்டு
இஷ்டமாகக்கவசாய நமாவென்று
எண்ணிவரைந்தங்கியம்பி யெழுதிநட்டு (பஞ்சா)

வலதுகையைமூடிவருந்தமுன்பதிஞெரு மந்திரந்தனையுரைப்பாய் மனம்
மயங்காமலஸ்திராயநமவென்று பவுத்திரம்வளர்விரல்தனில்நிறைப்பாய்
நலமாய்நிருதிமூலைதனிலவ்விரலிற்கண்டி நடுங்காமலியிறைப்பாய் அப்போ
நாடிக்கவசாயநமவென்றுபெருவிரல் நாலேநீரெடுவிறைப்பாய்
பலமாகவலதுகையாலேயிடதுகைமேலப் பிரணவம்வரைமறைப்பாய் உளம்
பேசுவாயேஓம்சிவாயநமாவென்று பேணிச்சிரசிற்றரிப்பாய்
தலவீசானமூர்த்தியாயநமாவென்று சான்வைத்திடுவாய்குறிப்பாய் அங்கு
தற்புருடாயபத்திராயநமாவென்று தரிப்பாய்நெற்றியில்விரிப்பாய்
தலைமயிருதாயநமவென்றுமார்பிடு சாற்றுவாமதேவருஹிதொப்புள்தாகண்டு
வளர்சத்யோசாதமூர்த்தியாயநம வான்முழந்தோள்மணிக்கட்டுப்பாரிசம்கண்டு
இளகுமுதுகுநிழ்ச்சந்துபிட்டிரிபத் திடஞ்சத்தியோநமாவென்றுரைத்திடுவீண்டு
அழகுகவசாயநமவென்றுகழுத்தில்வை அப்புறங்கைசத்தியாகக்கொண்டுபண்டு

அஸ்தராயநமாவென்று சிரசில்நீர்
அடைவாகயேழு தர்ம்புரோக்ஷித்திடு
வஸ்துவிளங்கிய நாசிமைநீர்கொண்டு
மாருமறபிரணவம் வழுத்திமுன்போற்றிடு (பஞ்சா)

பின்புவலதுகால்ப்பெருவிரல்மீதினீர் பிரணவஞ்சொல்லிவிடு வெகு
பெலமுடனேயஸ்திராயநமாவென்று பெருகவேநீரையெடு
இன்பவலக்கரமெழுகாஞ்சிரசுதொட் டியம்பிப்பிரணவம்நடு நினைத்
திருகைசேர்த்துச்செவிகொண்டுசலமெடுத்து இரவிக்கங்கர்க்கியங்கொடு
அன்பாகப்பதிஞெருமந்திரமுன்சொன்ன வஞ்சுடரிச்சலத்தையிடு நாடி
யப்புறம்நாசிதொட்டனைபன்னோர்மந்திரம் அருள்செபஞ்செய்கும்பிடு
உன்வலக்கரம்நாசிபிடித்துப்பிரணவம் உரைத்தெழுதரங்கூறிடு பின்பு
உறுதியாகக்கொலம்டுவலதுகாதைமூடி உணர்த்துவதைக்கேட்டிடு
ஓசிவகுரியநமவென்த்திரமூன்று ஓதியுனதைத்துஓழுங்காகவேமுன்பு
தாவடமாலைதனிலெந்தெழுத்துமே தயவாகவேவுறுத்தப்பாமற்செய்பின்பு



வாவென்றிருகைகோர்த்துக் கண்ணுடியாய்வைத்துவணங்கியேகுரியனைநம்பு
மேவியாசனமீதுதிருநீற்றுத்தூள்தன்னை விளங்கறுதலில்விரித்தணிவாயின்பு

மெய்த்தங்கம்போல விளங்குமெஞ்ஞானமும்
விரித்துரைத்தேனின்று வீசன்றனைக்காண்பாய்
உய்வாயேதானந்தப் பரமபதத்தேரி
உறுதியாகச்சிவ னடியிணையேபூண்பாய் (பஞ்சா)

நாரதர் வசனம்

அடாவேடா வுனக்குப் பஞ்சாக்ஷரமந்திர முபதேசித்தோம் இப்பொழு இந்த ரதத்திலேறிப் பரமபதஞ்சேரும்பிள்ளாய்.

அங்குலன் வசனம்.

அப்படியே மகாபாக்கியமைய்யா சுவாமி.

கணநாதர் வசனம்.

குருவாகியநாரதபகவானால் உபதேசம்பெற்றுக்கொண்டாய் இனி இந்தப் புஷ்பவிமானத்திலேறும்பிள்ளாய் வேடா.

## அங்குலன்சொல் வெண்பா.

கூற்றனிட்டுதர் கொண்டேகமுன்மறித்துக்
காற்றெனவேவந்தெனனைக்காத் திரே - தோற்றச்
சொல்வீரோநன்றுமஞ் சுந்தரமாயின்புறவி
தெல்லாமெனக்கரியவின்று.

தரு - இராகம் - பியாகு - ஆதிதாளம்.

பல்லவி.

ஆரையாநீங்கள் அடியன்காண அரைந்துநான்போங்கள்

அனுபல்லவி.

சீராகவிருப்பிடம் செழிக்கவாழ்ந்திடுமிடம்
நேராகப்பெயர்த்திடம் நிகழ்த்துவீரிவ்விடம் (ஆரை)

சரணங்கள்.

ஐயோவெனப்பதற அங்கமங்கேசிதற
கையுங்காலுமுதற கண்டேன்வந்திரேதிற (ஆரை)
பாசத்திறைகட்டிப் பாறுந்தூதரையெட்டி
யேசியவரைத்திட்டி யெனைமீட்டிருடன்கிட்டி (ஆரை)
தெண்டிஞலடிபட்டு சிரமுடைந்திட்டுவிட்டு
கண்டெனைத்தால்தொட்டுக்கார்த்திர்கருணைவிட்டு (ஆ)

அங்குலன் வசனம்.

எமதூதர் எனைப்பிடிக்கநடுத்தாதரித்த நீங்களாரையா சுவாமி

கணநாதர் விருத்தம்.

அங்குலவேடாவிப்போ தவிந்துகொள்ளஞ்சவேண்டாம் ... *
இங்குவந்துன்னைவாரி யெடுத்தெங்களிடத்திலவைத்தோம் ... *
எங்களையனுப்பியுன்னை யிப்போதேகொணர்கவென்று ... *
கங்கைவேணியனுரைத்தான் கணநாதர்நாங்கள்தானே ... *

கணநாதர் வசனம்.

நாங்கள்வாசஞ்செய்யுந்தலம் கைலாசபர்வதம் எங்களுடையபெயர் கணநாதரென்று சொல்லுவார்கள் வேதமூர்த்திவெள்ளியங்கிரி விநோதன் பார்வதி சமேதன் பரமானந்தரூபன் இளம்பிறைதரித்தவன் ஈமத்திலாடுவோன் கணபதியையீன்ற காரணமேனியன் கந்தனையருளும் சுந்தரனுதன் செய்பவம்போக்கும் தேவதேவன் வையகஅடிபணி வளர்த்தாந்தேசிகன் அஞ்ஞானமகற்றி மெய்ஞ்ஞானமருள்வோன் சடைதனிற்கங்கையை தரித்தருள்மூர்த்தி இடைதனிற்புலித்தோ லிலங்கவேசேர்த்திக் கொண்டசிவனைக் குறிப்புடன்வாழ்த்திக் கண்டுதெரிசிக்க கன்மம்விலகும் இந்தபுட்பகவிமானத்தி லேறிக்கொள் ளங்குலா.

கணநாதர் விருத்தம்.

தேர்முன்புவந்துநிற்க சிவசிவாவென்றுசொல்லி ... ... *
சீர்தனைமிகவேபூசி நெற்றியிற்பொட்டுமிட்டுச் ... ... *
சீர்பெறவுருத்திராக்ஷஞ் சிறக்கமார்மடிந்தந்தோம் ... *
பேர்பெறமீயுமின்று பெரும்பதமடையவாராய் ... ... *

தரு - இராகம் - கேதாரகௌளம் - ஆதிதாளம்.

கண்ணிகள்.

வில்லவனத்தில்வள ரங்குலவேடா சிவன்
விடுக்குங்கணநாதர்களங்குலவேடா
அல்லலெல்லாமொழித்தா யங்குலவேடா இனி
ஆனந்தமாயிருப்பா யங்குலவேடா (௧)

கைலாசபதிகாண்பா யங்குலவேடா அரன்
காட்சியுனக்குண்டாகு மங்குலவேடா
உயர்வாய்விமானம்பெற்று யங்குலவேடா விண்ணோ
ருலகமுழுதும்பார்ப்பா யங்குலவேடா (௨)

சிவலோகந்தன்னைச்சேரு மங்குலவேடா என்றுஞ்
சிரஞ்சீவியாயிருப்பா யங்குலவேடா
பதசேர்வைபெற்றிடுவா யங்குலவேடா அங்கே
பதியாயிருந்துகொள்வா யங்குலவேடா (௩)



இருப்பாய்முனிவர்சூழ வங்குலவேடா அண்ட
ரேகமாய்த்தாகங்கொள்வா ரங்குலவேடா
சிறப்பாய்விமானமேவி யங்குலவேடா தேவன்
சீர்பாதங்காணவாரா யங்குலவேடா (௪)

தேவித்தெளிந்திடுவா யங்குலவேடா நீயுஞ்
செய்ததபோபலம்பா ரங்குலவேடா
பாரிற்கொலைகள்செய்தா யங்குலவேடா இன்று
படைத்தபலனைப்பாரு மங்குலவேடா (௫)

பண்ணியதவத்தினா லங்குலவேடா செய்த
பாவமெல்லாம்போச்சுதே யங்குலவேடா
புண்ணியனைவலமிது வங்குலவேடா சிவனை
போற்றித்துதித்திருப்பா யங்குலவேடா (௬)

கணநாதர் வசனம்.

கடவுளைத் தியானித்துக்கொள்வாயங்குலவேடா.

பொது விருத்தம்

ஆதியிற்பேயோடாடி யரவையாபரணம்பூண்டு ... ...
பாதியாம்பிறையைச்சூடிப் பசுபதியாகிநின்று ... ... *
மாதுமையாளைப்பாகம் வைத்திடும்பரமசோதி ... ... *
சாதுவாய்க்கொலுவிற்றானே சங்கரர்தான்வந்தாரே ... ... *

கொண்டிச்சிந்து - தரு - இராகம் - நாகவராளி - அடதாளம்.

கண்ணிகள்.

பொன்மலைவளர்நாதன் ஆனந்தப்
போதமெய்ஞ்ஞானகுருபரநாதன்
சின்மயமளித்திடவே தான்வந்த
சிற்பரன்கொலுச்சபை செழித்திடவே (௧)

நாரதர்கீதம்பாட முனிவரர்
நாடிச்சிவகணங் குழாங்கூட
சீருடன்திக்குப்பாலர் அஷ்டவசுக்கள்
தேவேந்திரன்மார் திருமூலர் (௨)

சித்தர்வித்தியாதரரும் பணிந்திடத்
திசைமுகப்பிரமமாவுஞ் சீதரும்
பத்திமிகுந்தபுரியச் சரஸ்வதி
பாடியதமிழ்மலர் மாரிசொரிய (௩)

அரம்பையர்கவரிவீச　　　　ஊர்வசி
யாவரும்பரத சங்கீதம்பேச
ரம்பைசங்குகள் தூடிக்கச்　　　　சேகண்டி
யாங்குடஞெலமாய்த் தானடிக்க (௪)
புல்வாகின்குழலூத　　　　வரிவேங்கைப்
புலித்தோலுரித்துடுத்த புகழ்மேரூத
நல்லவிபூதிபூசிக்கு　　　　ருத்திராக்ஷம்
நாகப்பணிசிரசின் மேல்வளைந்து (௫)
கொன்றையறுகுசூடி　　　　மல்லிகை
சோலமுடையமல ரதுசூடி
கன்றெனக்கங்கைதனைச்　　　　சடைமுடி
கமிலெடுத்தணிந்து நயந்துபின்னே (௬)
உமையொருபாகருமாய்　　　　இருவரும்
ஒன்றாய்க்கலந்துசிவ யோகருமாய்
சமையங்கொடுத்தனரென்றே　　　　அங்குலன்
சரணஞ்சரணமென்ற தருணமன்றே (௭)

## அங்குலன்சொல் விருத்தம்.

மதிகெட்டுப்புத்திகெட்டு வலைசிலைவாளையிட்டுக் ... ... *
குதிகொளும்பிருகமெல்லாங் கொன்றுகறிபுசித்துப்பொல்லாச் *
சதிவழிப்பரியமோகச் சலப்பட்டபாபம்நீங்கக ... ... *
கதிதருங்கடவுளானே கழலிணைபோற்றினேனே ... ... *

தரு - இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்.

பல்லவி.

கண்டேனேகைலைத்தலம்　　　　சாயுச்சியபதமும்
கொண்டேனேயென்றும் நலம்

அநுபல்லவி.

பண்டாரச்சன்னிதியும்　　　　பத்தர்முத்தர்துதியும்
அண்டர்க்கருள்விதியும்　　　　அரனேசிவபதியும் (கண்)

சரணங்கள்.

தரணியுள்ளோரைக்காத்தும்　　சரணமென்றோரைச்சேர்த்தும்
மரணியுள்ளோரைத்தூர்த்தும்　　மோக்ஷவீடுற்றுப்பார்த்தும் (கண்)
பரமேஸ்வரிதன்பாகம்　　பள்ளிகொண்டிடும்யோகம்
நிறமாய்வளரும்நாகம்　　நிகழும்பணிவிவேகம் (கண்)
செய்யும்பவத்தைநீக்கிச்　　செழிக்குஞானத்தைத்தேக்கி
வையகப்பாசம்போக்கி　　வைக்குஞ்சுகத்தைத்தாக்கிக் (கண்)



மான்மழுக்கையிலங்க　　　　மலர்ப்பதந்தான்றுலங்க
நான்செய்துயர்கலங்க　　　　நற்புகழ்பெற்றுக்குலுங்கக் (கண்)

அங்குலன் வசனம்.

கைலாசகிரிவாசா அடியார்க்கடியரானபரம்பொருளே அடியேன் றெறிந்துந் தெரியாமற்செய்த பாபத்தைநீக்கிக் காத்துரக்ஷிக்கவேணும் சாம்பசிவனே.

## ஈசன் விருத்தம்.

பணிந்தவங்குலனே நீயென் பாதத்தைவந்துசேவி ... ... *
தணிந்துயென்றனைக்கொண்டாடச் சகலபாபங்களோட ... *
அணிந்திட்டேன்விபூதிகையா லருள்பெற்றாய்நமதுமெய்யால் *
துணிந்திருபயங்கொளாதே சுபாக்ஷமாயென்றுந்தானே ... *

தரு - இராகம் - நாட்டை - அடதாளம்

பல்லவி.

வாவா அங்குலவேடா துயரைநீக்கி வாவா அங்குலவேடா

அநுபல்லவி

வாவா அங்குலவேடா　　　　மதிமயங்காமல்பார்த்துக்
காவாவென்றேயுரைத்தாய்　　காத்தேன்கருணைபூத்து (வா)

சரணங்கள்.

மாசியமாபக்ஷம்வரு　　　　சதுர்த்தசிதன்னிற்
பூசிக்கவில்வமேயிப்　　போற்றினாய்நீயிர்முன்னில் (வா)
செய்தகுற்றங்களெல்லாந் சோகதள்ளியேபோட்டேன்
உய்வாய்பேரின்பபதம் உனையெமன்முன்புகாட்டேன் (வா)
நாரதராலுனக்கு　　　　நம்மைப்பூசிக்கவைத்தேன்
தேறித்தெளிந்திருநீ　　திருவுள்ளத்திலமதித்தேன் (வா)
கணநாதர்தனைவிட்டுக்　　காலன்றூதரைமாட்டிக்
குணமாகவுனைமீட்டுக் கொணர்கசொன்னேன்கூட்டி (வா)

சிவபெருமான் வசனம்.

ஆனால்கேள் அங்குலவேடா நீமுன்புசெய்த வினைகளும்போக இன்று நமது பஞ்சாக்ஷரத்தைப்பூசித்தோம் ஆகையினாலே என்றைக்குங்காணியாக வழியாதவென்பதத்திலிருந்து சுகமாகவாழக்கடவாய் அங்குலவேடா,

## தூதர் விருத்தம்.

வள்ளலார்சிவகணங்கள் மண்டைமேலடிக்கவின்று ... ... *
துள்ளியேமண்ணில்வீழ்ந்து துயருற்றோந்தூதரெல்லாம் ... *
மெள்ளவேயெழுந்துநின்று மெய்யதுமிகத்தள்ளாடி ... *
உள்ளமுருகிவந்துன் னுட்டுணாயகர்நிட்டோமே ... *

தரு - இராகம் - சகானா - அடதாளம்.

கண்ணிகள்.

அடவிதனிலேசென்று அங்குலவேடனை எமராஜே
திடமுடனேகட்டித் திரும்பிவருகையில் எமராஜே (௧)
கைலாசபதியிட கணநாதருப்வந்தார் எமராஜே
பைலாகவேடனைப் பாங்குடன்விடவென்றார் எமராஜே (௨)
பாவியெமதண்டனை படட்டுமென்றுசொன்னோம் எமராஜே
மேவித்தவங்களை விளைத்தவனென்றிட்டார் எமராஜே (௩)
விடமாட்டோமென்றிங்கே யியம்பேதான்வர எமராஜே
அடமாகத்தண்டிறு லடித்தார்கல்லங்கிட் எமராஜே (௪)
ஐயோதலையிலடி பட்டதைப்பாரும் எமராஜே
உய்யும்வகைகாணோ முன்பாதம்போற்றினோம் எமராஜே (௫)

தூதர் வசனம்.

அடியேன்கள்பட்ட அடியைப்பாரும்யமதர்மராஜனே

## இயமன் விருத்தம்.

போற்றிவிழுந்தார்களே யெழுங்கள்சற்றே ... ... *
பொறுங்களின்றேபடைபெருக்கிச் சென்றுவீசுங் ... *
காற்றதனிற்கணங்கள்பஞ்சாய்ப் பறக்கப்பாசக் ... ... *
கயிறதனாலவனையும்யான் கட்டிவைப்பேன் ... ... *
காற்றிசைகணடு நடுங்கப்பறையைச்சாற்ற ... ... *
நங்கொருமுன்சாம்பன்வர நடந்துநீபோய் ... ... *
சாற்றுவாயொருகொடியில் விரைவதாகச் ... ... *
சமுகக்கட்டியக்காரா தான்சொன்னேனே ... ... *

இயமன் வசனம்.

நீங்கள் விசனப்படவேண்டாம் தூதர்களே நானுண்டிப்போய்ப் பழி மீட்டுவருகிறேன் போங்கள் தூதர்களே.

கட்டியனுக்கு இயமன்சொல் வசனம்.

நான் சிவனிருக்கு மிடத்திற்குப் போகவேண்டியதாயிருக்கிறதினால் சீக்கிரத்திற் சாம்பனையழைத்துவாரும் கட்டியம்.

கட்டியன் வசனம்.

அப்படியே மகாபாக்கியமையாசுவாமி அடா சாம்பா இயமபுரியாளப்பட்ட சமனெனவியம்பு மெமராஜேந்திரருன்னைத் தன்சமுகத்திற் கழைக்குராலைகயால் முரசுவாத்தியமெடுத்துவாடா சாம்பா.

## சாம்பன்வருகிற பொது விருத்தம்.

கொலுமுகக்கட்டியக்காரன் கூறியமொழியைக்கேட்டுச் ... *
சலுதியிலுடையும்பூண்டு சன்மனையாளைக்கூட்டிப் ... ... *



பலபலமொழிபாராட்டிப் பறையறைகோலேட்டி ... ... *
இலங்கியகொலுவிற்சாம்ப னெழிலுடன்வந்திட்டானே ... *

தரு - இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

சாம்பன்நானே சுவாமி சாம்பன்நானே

அனுபல்லவி.

சாம்பானுன்சிலது சங்கதிசொல்கிறேன்
வீம்பில்லாமற்சொன்ன விதஞ்செய்யச்செல்கிறேன் (சாம்)

சரணங்கள்.

ஆண்டியானசிவன்கல்யாணத்திலும்நானேபறையடித்தேன்
வேண்டிபிரமன்கல்யாணத்தில்வேடிக்கைப்பறையடித்தேன்
பாண்டவர்கல்யாணந்தன்னிற் பறையுநானடித்தேன்
மீண்டிடுஞ்சமர்வேலா வதுவைபின்விளங்கப்பறையடித்தேன்
நீண்டபராபரை நேசமானகுலம்
தீண்டப்படாதென்று செப்புவதேபலம் (சாம்ப)
கள்ளைக்குடித்துவெறிகொண்டு கருத்தேகெட்டுத்தான்மலைவோம்
சுள்ளுகள்தனைத்தின்றுநாளுந் துயரதுபட்டுமன முலைவோம்
வெள்ளியுருக்குந்தட்டார் பொய்யிலுமீதமாயுரைத்தேபலைவோம்
உள்ளநாளுங்கொலைசெய்து உண்மையைமறைக்கவேகுலைவோம்
எள்ளளவும்விடா பிரர்களைப்படியேன்
வள்ளலானசைவ மகத்துவர்க்கடியேன் (சாம்ப)
எல்லாந்தெரிந்தவரும்பசு முலையிழுத்தேபாலைத்தான்குடிப்பார்
மல்லாந்திறந்தாக்கால்பறையர்கள் மாமிசந்தனைக்கடிப்பார்
வல்லோர்யாவர்களும்எங்களை மதியாமலேயடிப்பார்
பொல்லாங்குக்கிடமாயநீசன் புலையனென்றுகொடிப்பார்
செல்லும்வழியொதுங்கிச் செல்லென்றுபேசுவார்
நல்லவரப்படி நவின்றிடக்கூசுவார் (சாம்ப)

சாம்பன் வசனம்.

டீ தோட்டிச்சி நீவளே - நீவளே - இதரி - இதரியெம்பெருஞ்சாரி யமராஜேந்திரன்கூப்பிட்டானின்னுகட்டியக்காரன்வந்து அழைச்சிரான்போவோம்வாடி.

தோட்டிச்சி வசனம்.

நல்லிதிக்கட்டுரா அன்னையன்னையென்று முன்னையெல்லாங்கூப்பிட்டுக்கின்னுவந்தயேஇன்னைக்கி டீ டீ யென்றுகூப்பிட்டதென்னடாபுத்திகெட்டவனே.

சாம்பன் வசனம்.

சுவாமீ ஆண்டைகளே என்னைப்பறையன்பறையனென்று நித்தமுங்கூப்பிடுறதுபோதாதுப்பறையன்செல்லுகிறசரித்திரங்கேளுங்கோ ஆண்டைகளே.

பறை பிறந்து பரன் பிறந்தான் பின்பு மறைபிறந்து மற்றோர்களும் பிறந்தார்கள் நாங்கள் முந்தினஜாதியல்லவா எந்த ராஜாக்களுக்கும் எந்த ஆண்டவர்களுக்கும் தகப்பனும் பிள்ளையும் சாமி நாங்கள்.

சமன் விருத்தம்.

அழைத்தகாரியங்கையிப் போதண்டவுட னாதக்கேளாய் *
தழைத்திடுஞ்சித்திரபுத்திரன் சமுகத்தில்வரவுங்காலேறும் *
வழைத்துமேபறையைசாற்றி வருகவென்றநட்டிக்கூவிச் *
செழித்தநங்கொலுவின்முன்னே சீக்கிரம்வருகத்தானே *

சமன் வசனம்.

ஆ - ஆ - சரி - சபாசு - பெச்சிமேனன் என்னுத்திரவுதப்பாமல் வந்தசாம்பா சமுகக்கணக்கன் சித்திரபுத்திரனை அதிசீக்கிரத்தில் கொலுமுன்னே கணக்கெடுத்து வரப்பறைசாற்றும்பிள்ளாய்.

சாம்பன் வசனம்.

அப்படியே வரச்செய்கிறேன் சுவாமி.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம்சாம்பன்பறைசாற்றவும்இதுவென்னகாரணமோதெரியவில்லையென்றுகணக்குகளையெடுத்துக்கொண்டுசித்திரபுத்திரன்வருகிறவிதங்காண்க

சித்திரபுத்திரன் வருகிற விருத்தம்

அண்டமுங்கிடுகிடென்ன வதிரவேபறை முழக்கக் ... *
கண்டசக்ஷணத்திற்றானே காரியமெதுவோவென்று ... *
பண்டைநாள்விதிப்பிரகாரம் பதித்துவைத்துள கணக்கும் *
கொண்டுதான்சித்திரபுத்திரன் கும்பிட்டேயமன்முன்வந்தான்

தரு - இராகம் - தோடி - ஆதிதாளம்.

பல்லவி.

சித்திர புத்திரன்வந்தானே கணக்குங்கொண்டு
சித்திரபுத்திரன்வந்தானே

அநுபல்லவி.

சத்தியந்தவறாதவன் சகலசீவர்முழுதும்
நித்திய மநித்தியங்கண்டு நேராய்க்கணக்கெழுதும் (சித்திர)

சரணங்கள்.

தந்தைதாயண்ணன்றம்பி சம்சாரம்பிள்ளையின்னம்
வந்தவற்கன்னங்கொடாதான் வயிற்பளப்பென்ன
வெந்தநாராசந்தன்னை விழுங்கவிதியென்றன்ன
சந்ததங்கேட்டுக்கேள்விக்கிச் சாற்றச்சபையின்முன்னம் (சித்தி)



நாய்பன்றிகள்மிருகம் நடக்கமாட்டாதஜெந்து
பிறாமணயாள்சிசுக்கள் பேதையர்மனநொந்து
மரணமடையச்செய்த மாபாபியிவன்வெந்து
நரகிற்கிடப்பானென்று நவிலச்சபையின்முந்து (சித்திர)
சிவன்பணிபெறுஞ் தேவர்முனிவர்சித்தர்
தவஞ்செய்வாபாசவேடச் சன்னியாசியானபத்தர்
இவனாற்பழிக்கச்செய்தி யெட்டனைத்திட்டுமோத்த
விபரங்கணக்குச்சொல்லி விண்ணப்பஞ்செய்யவைத்த (சித்)

சித்திரபுத்திரன்வசனம்.

சரணஞ் சரணமையாசுவாமி யமதர்மராஜேந்திரா வென்னையழைத்தகாரியந்தெரியப்படச்சொல்லவேணுமையாசுவாமி.

இயமன் விருத்தம்

சித்திரபுத்திராகேளாய் சிலைவேடன்குலன்றன் ... *
பத்தியாய்ச்செய்தபுண்ய பாவங்களறிந்துநன்றாய்க் ... *
குற்றமுங்குணமுங்கண்டு கூர்ந்துநீயெழுதிவைத்த ... *
சத்தியக்கணக்கிற்கண்ட சாரத்தைக்கூறுவாயே ... ... *

இயமன்வசனம்

வில்வவனத்தில் வாழுமங்குலவேடன்செய்தபாவங்கள் புண்யங்கள் உள்ளபடிசொல்லும்பிள்ளாய் கணக்கெடுத்துப்பாரும் சித்திரபுத்திரா சலுதி சல்தி.

சித்திரபுத்திரன் விருத்தம்.

கணக்கெடுத்தாக்கட்டவிழ்த்தேன்சித்திரபுத்திரன் ... *
காலனேசமுகமதிற்கருத்தாய்ச்சொல்வேன் ... ... *
மணக்குமலர்வில்வவனக்கொடிச்சியோடும் ... ... ... *
வாழ்ந்துவருமங்குலன்செய்புண்யபாவம் ... ... *
தாலுக்காமுட்டுறைக்கிறேன்கேளுமையா ... ... ... *
துணிந்துவழிப்பயிக்கொலைகள்கற்பழித்தும் ... ... *
வணக்கமில்லாதேயிருந்தபாவியென்றும் ... ... ... *
வழங்கினேன்முன்பாகவிளம்பினேனே ... ... ... *

தரு - இராகம் - ஆரபி - ஆதிதாளம்

கண்ணிகள்,

பதிவிரதப்பெண்களைமதியாமற்கற்பழித்த
சதிகேடனங்குலன்றன் கேளும்
புதியவூர்ப்பயணமாய்விதியுடன்போவார்களைக்
கூதிகொண்டடித்தவன்காண் கேளும்

பெரியோர்களைநகைத்துச் சிறியோர்களைவதைத்து
வெறிமீறியேதிரிந்தான் கேளும்
அறிவோர்தனைக்கண்டாலும் உரியோனெக்கொண்டாலும்
பொறிகலங்கவடித்தான் கேளும் (௨)

அஞ்சுகமயிற்பூருக் குஞ்சுடனேசுருவும்
மிஞ்சவெட்டிமகிழ்கொன்றான் கேளும்
கொஞ்சிடுங்குயில்கொக்கு மிஞ்சுங்காடையொக்க
பஞ்சபறக்கக்கொன்றான் கேளும் (௩)

மானும்முயலும்புல்வாய் நாயும்வரையாடுமே
கானகந்தனிற்கொன்றான் கேளும்
ஏனமிளங்குட்டிகள் ஆனைகரடிபுலி
மானிலந்தனிற்கொன்றான் கேளும் (௪)

பவமகன்றிடும்படிசிவனென்றறியான்கையுங்
குவியான்வணக்கமில்லான் கேளும்
தவமொன்றுஞ்செய்தறியானிவன்ஜன்மநாள்முதலாய்
பவமேபுரிந்தானையா கேளும் (௫)

சாதிமுறைபரிசறிக்கோ தாழ்ந்ததொழில்செய்த
சண்டாளனிவனையா கேளும்
நீதிகொஞ்சமுமெண்ணாநிசிவனோதண்ணான்
கிஷ்டேசனிவனையா கேளும் (௬)

சித்திரபுத்திரன் வசனம்.

பஞ்சாசத்கோடி ஜம்மண்டலங்களையுங்கால தண்டத்தினால்சிலமாயனுந்தர்மனே இவ்வங்குலன் மகாபாதகனையாசுவாமி.

இயமன் வசனம்.

நமதுநரகத்தில் பாவஞ்செய்தமுந்நூற்றெப்பேர்களைத் தனித்தனியாய்ச்சொல்லும் பிள்ளாய் சித்திரபுத்திரா.

சித்திரபுத்திரன் விருத்தம்.

தாஷ்டீகந்தர்மராஜே சமுகத்திலனைக்கக்கேளும் ... *
நாட்டினிற்பொருளைவைத்து நல்லிடாப்பாவியோரை ... *
ஓட்டினில்வறுத்துக்கொட்ட உனதுஆக்கினையிருக்கக் ... *
கூட்டியேஅனேகபாவர்குறிதனைச்சொல்லுவேனே ... *

தரு - இராகம் - மாதவமனோகரி - அடதாளசாப்பு.

கண்ணிகள்.

போதமுறைக்கும்குரு நாதன்
பொய்யனென்றேகொலைசெய்தோனிவன்



வாசுதயிகப்படவே இவன்
வாயிலேயங்காச்சி யூற்றுறார்பார் (௧)

பெற்றதோர்பிள்ளைதன்னை வதை
பேணியேசெய்தந்தை தாயாரிவள்
குத்திக்கழுவிலிட்டு அழ
கொற்றவனையொன்று விழுகிறான்பார் (௨)

தனதுபத்தாவைவிட்டு சனர்
தன்னையிணங்கிடும் தையலிவள்
அனலைவிழுங்கச்சொல்லி அங்கே
அலறஅலற அடிக்கிறார்பார் (௩)

இஷ்டமாய்ச்சாறாமனை சென்று
இன்பமடைந்திடும் மாதாயிவள்
ஒட்டாய்கரமிற்றன்ன மேலே
ஒருகோடிபுழுக்கள் துளையிதுபார் (௪)

பத்தாவுக்கேமருந்து தேடி
பலகாரந்தனில்வைத்த பாவியிவள்
குத்திநரமிற்றன்ன விழ்ந்து
கோமுறையென்று அழுகிறான்பார் (௫)

கணவன்றனக்குமுன்னே அன்னங்
கனிவாயருந்திய பாவியிவள்
துணிவாயெழுணரமிற தள்ள
துடிதுடித்தங்கே விழுகிறாள்பார் (௬)

பத்தாவைத்தாளிக்கிந்துப் பேசும்
பசப்பியெனவந்த பாவியிவள்
குத்தித்துவைத்துச்செக்கி லிடக்
கூ கூ கூ கூ வென்றழுகிறாள்பார் (௭)

மருகன்மனைக்குமோசம் செய்த
மாமியெனவந்தபாவியிவள்
அரியாருசங்காச்சி வாயில்
அன்றுக்கலுத்தாரா நன்றாகப்பார் (௮)

கொழுந்தன்மனைக்குமோசம் செய்த
கொடியமகாபாவி இருண்டதன்னை
தழுவிரும்புத்தூணில் நீயுக்
தாவவேமெய்யெங்கும் சுடுறான்பார் (௯)

தாய்தந்தையண்ணன் தம்பி இவா
தன்னையேவஞ்சித்த தடியனிவன்

காய்போலப்பல்லைக்கெஞ்சி நிய
கரயில்விழுந்து அழுதிருப்பார் (௰)
பெண்தாய்தன்னைக் கூடச் சேர்ந்து
பிரியமாய்ப்போகித்த வெறியனிவன்
கள்காதில்மாதசத்தை வைத்த
காலைவழுதிய வினைப்பார் (௰௧)
என்னுதபாவந் செய்த பேரை
யெமராஜேயுன்னுர்க்கினப்படியாய்
மண்டிது தண்டனையும் பட்டு
மகாராஜேயென்று மழுதிருப்பார் (௰௨)

இயமன் வசனம்.

நல்லதிருக்கட்டும் மனக்கேடுத்துக்கட்டும் சித்திர புத்திரா.

## இயமன் சொல் முடுக்கு விருத்தம்

அக்குலமேடன் மிகும்பழிபாவ மதுக்கொலையானையுமே *
இக்கொம்தோடுமொழிக்கினாமு பிரைக்கனயாஇனுமே *
மங்கலமாமினைர்க்கிடிபாரி வரும்படியாகவென்றுன் ... *
அங்கவனோடுரைசாற்றகயிலமவென் னன்புளகட்டியனே *

இயமன்சொல் வசனம்.

நல்லதிருக்கட்டும் சித்திரபுத்திரா யானிப்பொழுதே சிவனைச்செயித்து வேடனையிழுத்துவருகிறேன் நீரோய். ஏனதுவாசற்காரக்கட்டியனேயெனது பத்தினியாகிய சாமளையைஅதிசீக்கிரத்திலழைத்துவாடா

கட்டியக்காரன் வசனம்.

அப்படியே யழைத்து வருகிறேன் சுவாமி பராக்கு எச்சரிக்கை.

## பொது விருத்தம்

அணிவுடன் கட்டியன்முன் வசைசமனழைத்தானென்னக் ... *
குணமுடனுரைத்தசெய்தி கொண்டுமகிழ்ந்தனிதாடி ... ... *
அணிபணியாவும்பூட்டி ஆசையுள்ளத்தில்நீட்டி ... ... *
வனமதிற்சமுகக்தேடிச் சாமளைவருகின்றுளே ... ... *

வண்ணத்தரு - இராகம் - நாகவராளி - அடதாளம்.

பல்லவி.

தானதனந்தனனு - தன - தானதந்தனனு

சரணங்கள்.

வானவர்வின்னனிருக்கப் பாடகர்தானும் மினைமுழக்க மின்னு
வண்டுகிதம்பாடும் கண்டுமொழியுமாடுந்த
செண்டுகரத்திற்கூடும் கெண்டைவிழிமுன்னிடும்
நாகரிகமதாகவே விஸ்தாரமாய்த் தாகமென்மேலாகவே முன்பு



நாடிக்கட்டியன்சொல்ல நீடியேதான்செல்ல
வாடிக்கையாய்நல்ல வேடிக்கையாய்மெல்ல [ள் மிகும்
அன்னத்தைப்போல்நடையாள் துலங்கியமின்னலைப்போலிடையா
அழகிலேரதி கிளிமொழிச்சுதி
ஒளியிலேமதி நளினநற்கதி
யாகவேவந்தனளே சமன் முன்சிநேகமாய் முந்தினளே அவ
ளாட்டத்தைதாமென வேடிக்கையாமெனப்
பாடித்தந்தோமென நாடித்திந்தோமென (தான)

முடுகு வண்ணத்தரு - இராகம் - கல்யாணி - ஆதிதாளம்.

பல்லவி.

நத்திமி - தத்திமி - தன - தித்திமி - தித்திமி - யெனத்
தாளந்தட்டியே மத்தளமேளங்கொட்டியே.

சரணங்கள்.

சத்தமாய்த்துத்திதொனிக்க ஒத்துபொற்குழல்களைக்கச்
சம்பிரமமாய்வெகு இன்பசுகமாய்
முத்ததுபோற்பல்லழகும் வித்தாரநற்சொல்லழகும்
மூக்குகுழும்பூவுனைக்கும் வாக்குதமிழ்ப்பா
இத்தருணம்நன்றெனவே சித்திரம்போல்நின்றனவே
எதிரேவந்தாள்கொலுவிற் ரேகையும்வந்தாள்

## பொது விருத்தம்.

சிறந்திடும்பணிகள்பூண்டு சிந்துரத்திலதமிட்டுப் ... ... *
பொருந்தப்பட்டாடைகட்டிப் பொன்னிறைச்சடைக்குச்சிட்டு *
அரம்பையர்கூட்டத்தோடும் அதிகவுல்லாசமாக ... ... *
விரும்பியேகொலுவின்முன்னே விளங்கச்சாமளையின்வந்தாள் *

தரு - இராகம் - சாவேரி - ஆதிதாளம்

பல்லவி.

சகிமாருடன் ஒயிற் சாமளைவந்தாள்

அனுபல்லவி.

சிகைசீவியேசடை சிறப்புடனிட்டு
வகையாகியமலர் மாலிகைசூட்டிச் (சகிமாருடன்)

சரணங்கள்.

பட்டாடையும் இடை பதிந்துதுலங்கப்
பதக்கங்களும்மார்பிற் பரவியதுலங்கக்
கட்டாகவேஅணி காதிற்குலுங்கக்
கைக்கடகம்வளை கலீலென்றிலங்கச் (சகிமாருடன்)
பாதசரம்மிசை பலவகைகூறப்
பசுங்கதிர்போல்முகப் பார்க்கதுசேற

வீதியெல்லாமதில் விரிவுடனார
விண்ணோர்களும் மலர்வேண்டியேநாசச் (சமிமாருடன்)
அத்தருடன்புனுகானதுபூசு
வதிலுடனே சவ்வாதுமணம்வீச
வித்தாரமாய்மொழி விரும்பியேபேசு
வேடிக்கையாயமன் மெய்க்கொலுவேசச் (சமிமாருடன்)

சாமளா வசனம்.

பர்த்தாவான யமராஜனே சரணம் சரணம் சுவாமி.

## இயமன் சொல் மறுக்கு விருத்தம்.

வங்கெதிர்மின்றுவணங்கி மகிழ்ந்துமனங்களிகொண்டரிவோ *
டிங்குவிளங்கியவெண்கிரி சென்றிசரியின்றிவ்வனங்கிடவே *
சிங்கையினந்தநுகண்டு தெளிந்துதிரும்புவனின்றுயான் ... *
யிங்கையுடன்விடைதந்திடு சுந்தரசித்தசாமளையே ... *

தரு - இராகம் - கமாசு - ஆதிதாளம்.

பல்லவி.

கைலாசம்போய்வாரேனுன் கருத்தயருதேபெண்ணே
கைலாசம்போய்வாரேனுன்

அனுபல்லவி.

மயிலேரதிவேடமே மாதர்கம்பின்பீடமே (கைலாசம்)

சரணங்கள்.

வேலொத்தகூர்விழியே கோலத்துயர்கிளியே
சாலத்தில்வாமொழியே பாலொத்தநேர்மொழியே (கைலா)
மந்தரகனதனமே யென்றனுயிரே மனமே
சுந்தரஞ்சேர்மோகனமே சிந்தைமகிழுமனமே (கைலாசம்)
இங்கிதசரசக்காரி திங்கள்முகமானபாரி
சங்கரன்கணத்தைநாடிச் சிங்கம்போல்வருவேன்றேவி (கை)

இயமன் வசனம்.

கைலாயம்போக விடைகொடடிபெண்ணே யென்தன்கண்ணே.

## சாமளா விருத்தம்.

சரசவொய்யாரவீரச் சமனொறுந்தத்தியருசா ... ... *
முரசுபம்பைகள்முழங்க முன்னணித்தூதர்செல்ல ... *
விரசுடன்கைலைக்குப்போய் மீண்டுதான்வருவீரின்றே ... *
பிரியமாய்விடைகொடுத்தேன் பித்தனைப்பணிகுவாயே ... *

தரு - இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்.

பல்லவி.

போய்வாருமென்கணவா சிவன்பதிக்கு போய்வாருமென்கணவா

அனுபல்லவி.

போய்வாருமென்கணவா புகழ்வெள்ளியங்கிரிக்கு
வாய்வேகமாகப்போய் வருவீர்தர்மபுரிக்கு (போ)



சரணங்கள்.

அடியர்க்கருளையர்க்குவார் அகங்கார ஆசையகலப்போக்குவார்
கொடியபிறவிநீக்குவார்மரணநோயைக்கொள்ளாமலுள்ளேதாக்குவார்
கோதில்லாதமெஞ்ஞானச் சோதிவடிவமான
ஆதிவஸ்துவைத்தியானம் நீதியாய்ச்செய்நிதானம் (போ)
வேதவேதாந்தனுதன் சித்தானந்த மெய்க்குருபரபோதன்
சாறுசங்கவினோதன் அகிலமெல்லாம் தானாய்நிறைந்தநீதன்
சம்புவெனவோடி யும்பர்தினங்கொண்டாடி
நம்புவார்நீயுங்கூடி யம்பலவனைத்தேடிப் (போ)
படையெடுத்துச்செல்லாதே சென்றாலும்முன் பாசக்கயிறுவெல்லாதே
கெடுமதிகொண்டுநில்லாதேவல்லோனைக்கேவலமென்றுசொல்லாதே
கெருவமெல்லாந்தணிய வுறுதிமனந்துணிய
அரனடிசிரமணிய கிருபைசெய்யென்றுபணியப் (போ)

## சாமளா விருத்தம்

மதமதுமிகுந்துமுன்னாள் மார்க்கண்டனிடத்தில்நீபோய்... *
விதிவழிபிடிக்கவீசன் வெகுண்டுன்னையுதைத்தான்கண்டாய் *
பதமிகப்பரவிப்போற்றி பணிந்துபசரித்துநின்று ... ... *
சதிருடன்வருவாயிங்கே தழைத்திடவென்றுந்தானே ... *

சாமளா வசனம்.

கைலாசகிரிக்குப்போய் பரமேஸ்வரனைத்துதித்து உபசாரமொழிகள்பேசி யுத்திரவுபெற்றுக் கண்களிப்படையச் சீக்கிரம்வாருமென் பிராணநாதனே.

## இயமன் கைலாசப்போகிற போது விருத்தம்.

விடையதுபெற்று வெகுவினாவாக ... ... *
வடகைலாச வரைதனைநாடிச் ... ... *
சடுதியிற்படைக டன்னுடன்கூட்டித் ... ... *
திடமுடனடந்தான் றென்றிசைக்கோனே ... ... *

தரு - இராகம் - உசேனு - ஆதிதாளம்.

பல்லவி.

எங்குங்கிடுகிடென்னவே கடாவிலேறி
யெழுந்தான்கைலைக்கென்னவே

அனுபல்லவி

திங்கள்சிரசிற்சூடுங்கங்கா தரனைநாடிப்
பொங்கிக்கொதித்துநீடுஞ் செங்கைப்பாசங்கொண்டோடி (எ)

சரணங்கள்.

அங்கிகிசாருந்தொட்டு அழகாய்ப்பதக்கமிட்டு
செங்கதிர்மகுடம்வணிந்தான் யமதர்மராஜன்
சிறப்பாய்ப்பணிகள்புனைந்தான் (எங்கும்)

தேவர்மலர்பொழிய செகத்திற்கண்டோரொளிய
வாவிப்புயங்குலுங்கவே யமதர்மராஜன்
வல்லமைச்சொல்லாவலுங்கவே (எங்கும்)
மேலுக்குடைபிடிக்க வெடிமுர்முரசடிக்க
கோலத்தூதருடன்நின்றான் யமதர்மராஜன்
கொண்டலிடியெனச்சென்றான் (எங்கும்)
சூலம்பாசமுங்கொண்டு சொற்கள்பலவும்விண்டு
ஆலம்போலவே நீடியே யமதர்மராஜன்
அடர்ந்தான்கைவேலோடியே (எங்கும்)

இயமன் வசனம்.

அடா தூதர்களே சல்தியில் ஓடிவாருங்கள் ஓடிவாருங்கள்.

நந்திதேவர் சிவனுக்குச்சொல்விருத்தம்.

தண்டுடன்பாசஞ்சூலம் தங்கரம்பற்றித்தூதர் ... ... *
அண்டையிற்சூழவந்தான் அனைநயர்ந்துடனோக்கி ... *
விண்டனன்சிவன்முன்னின்று வேதநாயகன்கேளென்னக் *
கண்டனன்கொலுவுட்செல்லக் கலங்கியங்குலன்சொல்வானே

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாகச்சண்டாளனவன் கரத்திற்றண்டுடனேபாசஞ்சூலமுந் தாங்கிக்கடாவாகனமேறித் தாரமாமலையிற் சீறியேசென்று மங்கைபங்காளனை மகிழ்வுடன்போற்றும் அங்குலவேடனை யதட்டியேபிடிக்கவங்குறும்போதிற் சங்கரனேறுமிங்கிதமாகப்பங்கமற்றுறைக்கச் சுந்திரமூர்த்தியாஞ் சந்திரசேகரனந்தகன்றன்னைவந்திடச்சொல்லெனச்சீலமுடனேவேலைகலங்கிடக்காலன்றனைத் துக்கடுகியேவரவும் வேடனானவன்கண்டு மிகவுமநடுக்கமுற்றுக் கடவுளைத்துதித்து நிற்கிறவிதங்காண்க.

வேடன் சொல் கவி.

என்னையேபிடிக்க யெமன்வந்துவிட்டான்
அன்னைபங்காளா அன்புடனருள்வீர்

தரு - இராகம் - சாரங்கம் - அடதாளம்.

கண்ணிகள்.

இனியென்னசெய்குவேன் யமன்வந்துநிற்கிறான் சிவனே
அநியாயமாய்ப்பிடித் தாக்கினைசெய்வானோ சிவனே (க)
கலங்குதேயென்வயிறு கைகால்நடுங்குதே சிவனே
சலங்கொப்புளிக்குதே தாரையாய்க்கண்ணிலே சிவனே (உ)
சூலத்தினாற்குத்தித் துளைப்பானோ யென்றனைச் சிவனே
காலன்பாசத்தினாற் கட்டவேவந்திட்டான் சிவனே (ங)
எமலோகங்கொண்டுபோ யெனைவதைசெய்வானே சிவனே
நமனுங்கொக்கரிக்கிறான் நானென்னசெய்குவேன்சிவனே (ச)

அங்குலன் வசனம்.

கருணாகரபரிபூரணனந்தக்கடவுளே எமன் வந்துவிட்டான் எனக்குப்பயமாகுதே சிவனே.